

# பாண்டியன் பரிசில் வரலாற்றுப் பார்வையும் குறியீட்டுச் செய்தியும்

பாவலர்மணி

ஆ. பழநி

# பாண்டியன் பரிசில்
# வரலாற்றுப் பார்வையும்
# குறியீட்டுச் செய்தியும்

பாவலர் மணி
**புலவர் ஆ. பழநி**

அன்னம்(பி)லிட்.,
2, சிவன்கோயில் தெற்குத்தெரு
சிவகங்கை

அன்னம்—223

பாண்டியன் பரிசில்
வரலாற்றுப் பார்வையும் குறியீட்டுச் செய்தியும் / © பாவலர்மணி புலவர் ஆ. பழநி / முதற்பதிப்பு நவம்பர் 1994 / அச்சும் அமைப்பும் அகரம் சிவகங்கை / வெளியீடு அன்னம் (பி) லிட்., சிவகங்கை— 623560 / விலை ரூ25-00

## என்னுரை

'பாண்டியன் பரிசில் வரலாற்றுப் பார்வையும் குறியீட்டுச் செய்தியும்'–இப்படியொரு நீண்ட தலைப்பு வேண்டுமா? வேண்டியதுதான். ஆழமான அகழ்வாய்வுக்குப்பின் கிடைக்கும் ஒரு தொடர்பொருளுக்கு நீளமான தலைப்பு பொருத்தம்தான்.

இலக்கியப் படைப்பாளிகள் இருவகையினர். கலைத் தன்மை நிரம்பிய இலக்கியம் படைப்போர் ஒரு வகையினர். குறிக்கோளுக்காக இலக்கியம் படைப்போர் பிறிதொரு வகையினர்.

முதல்வகையில் கதையமைப்பில்—கட்டுக்கோப்பில் ஒரு முழுமை இருக்கும். எங்குமே பிசிறு தட்டாது. குறிக்கோள் என்பது கதையின் நிகழ்ச்சிப் போக்கில் ஓர் அங்கமாக வைத்து இழைக்கப்பட்டிருக்குமேயன்றி குறிக்கோளுக்காகவே கதை என்பது போன்ற ஒரு தோற்றம் இருக்க மாட்டாது.

இரண்டாவது வகையில் கதையமைப்பில்–கட்டுக்கோப்பில் குலைவுகள் இருக்கும். கதையின் நிகழ்ச்சிப் போக்கில் குறிக்கோள் மட்டுமே தலைதூக்கி நிற்கும். ஏனைய எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும்.

'பாண்டியன் பரிசு' இதில் எந்தவகை? உறுதியாக இது

இரண்டாவது வகைதான். எந்த இடத்தைத் தொட்டாலும் அங்கே குறிக்கோள் துருத்திக்கொண்டு நிற்பதைக் காணலாம். கதை அமைப்பில் கட்டுக்குலைவுகளையும் காணலாம். நிகழ்ச்சிப் போக்கில் ஒத்திசைவின்மையையும் நாம் சந்திக்கலாம்.

அதுசரி. அகழ்வாய்வு—நீண்ட தலைப்பு என்றெல்லாம் சொன்னாயே அதுபற்றி ஒன்றும் கூறவில்லையே என்பீர்கள். அவற்றையெல்லாம் நூலுக்குள்ளே வேண்டிய மட்டும் பெறுவீர்கள்.

'அன்னம்' வெளியீடு என்றாலே அதற்கொரு தனிச் சிறப்பு உண்டு. அச்சிறப்பு இந்நூலுக்கும் கிடைக்கும் என்பதில் மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு.

காரைக்குடி. அன்பன்
16.11.94 ஆ.பழனி

## தோற்றுவாயும் சில சிக்கல்களும்

இருபதாம் நூற்றாண்டு அடிமைத்தளையை அறுத்தெறிந்த நூற்றாண்டுதான். ஆயிரம் ஆண்டுகளாக அப்பிக்கிடந்த தூசுகளை— மண்டிக்கிடந்த ஒட்டடைகளை ஒழித்துக்கட்டிய நூற்றாண்டுதான். தேசிய உணர்ச்சி வெள்ளம் கரைகடந்து பொங்கியதும், பீறிட்டெழுந்த அப்பெரு வெள்ளத்தில் அயலவர் ஆட்சியும், பழைமைக் குப்பை கூளங்களும் அடித்துச் செல்லப் பட்டது கூட நம்மனக் கண்ணின் முன்னால் கனவுக் காட்சிகளாக மெல்ல விரிகின்றன. அசைபோடுகின்ற நெஞ்சிற்கு அவை நல்ல உணவாகவும் அமைகின்றன. வாழும் சமுதாயத்திற்கு ஒரு வரலாற்றுப் பார்வையையும் வழங்குகின்றன.

பழமையைப் பதம்பார்த்த அப்பெரு வெள்ளம் தானே மலையைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டு விடவில்லை. மந்திரங்களும் தந்திரங்களும் மாயக் காட்சிகளை உருவாக்கிவிடவும் இல்லை. தேவர்கள் திரண்டு வந்து அத்'திவ்வியமான' பணியை நிறைவேற்றித் தரவும் இல்லை. அழுத்தப்பட்டும் நசுக்கப்பட்டும் பொட்டுப் பூச்சிகளாகப் புன்மைத் தேரைகளாக வாழ்ந்த மனிதனின் தாங்கும் சக்தி தளர்ந்து போனதனால் ஏற்பட்ட எரிச்சல் வேகம்தான் அப்பெரு வெள்ளத்தைக் கொண்டு வந்தது. அது சரி. அந்த எரிச்சல் தானாக வந்ததா? யாரேனும் சிலரால் தரப்பட்டதா? இவ்வினாவிற்கான விடையை நாம் முறையாகவும் முழுமையாகவும் தேடி

னால் தலைவர்கள் சிலரின் தன்னலமற்ற அகங்களும், தமிழை நெருப்பிலே தேய்த்து எழுதிய கவிஞர்கள் சிலரின் முகங்களும் விடைகளாகக் கிடைக்கும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் அந்த எரிச்சலின் முதற் பொறியைச் சிதறிய பெருமை வள்ளலாருக்கே உரியது. அவர் ஆங்கில ஆட்சியில் வாழ்ந்தவர் என்பது யாவருக்கும் தெரியும். 'வாடிய பயிரைக்கண்ட போதெல் லாம் வாடினேன்' என்று பாடியவர். வாடிய பயிரைக் கண்டே வாடிய அவர் அந்நியஆட்சியால் வாடிக்கிடந்த மனித குலத்தின் வேதனையை அறிந்து கொள்ளாமல் இருக்க முடியுமா? அதிலும் அயலவர் ஆட்சியின் அடக்கு முறைக் கொடுமையைக் கண்டு வாளாவிருக்க முடியுமா? முடியாதுதான். அதனால்தான் கடவுளைப் பாடிய வாயால் 'கருணையிலா ஆட்சி கடுகி யொழிக' என்றும் 'அருள் நிறைந்த சன்மார்க்கர் ஆள்க' என்றும் பாடி னார். கருணையிலா ஆட்சி தொலைந்தால் மட்டும் போதாதாம். ஓர் அருள் நிறைந்த ஆட்சி இங்கே அமைக்கப்பட வேண்டுமாம். இதனால்தான் கூறினேன், ஆதிக்கக்காரர்களின் மீது வீசப்பட்ட முதற் பொறியைச் சிந்தியவர் வள்ளலாரே என்று. அவர் முழுமையான சமய மறுமலர்ச்சியாளராக இருந்ததனால்தான் அரசியல் எழுச்சியூட்டும் பாடல்களை நிறையப் பாடும் வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது. என்றாலும் இருக்கின்ற கொடிய ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பதையோ நலஞ் செய்யும் ஒரு புதிய ஆட்சி மலரவேண்டும் என்ற விருப்பத்தையோ அவர் வெளிப்படுத்தாமற் போய் விட வில்லை. வள்ளலாருக்குப்பின் வந்த பாரதியாரும் பாவேந்தரும் வள்ளலார் வழங்கிய அந்த ஒப்பற்ற 'அக்கினிக் குஞ்சை' அப்படியே வாங்கிக்கொண்டு அயலவர் ஆட்சி, மூடநம்பிக்கைகள் என்னும் மரப் பொந்துகளில் பதுக்கி வைத்ததும் அதனால் வெள்ளையர் ஆட்சியும் வேண்டாப் பழைமைத் தளை களும் வெந்து தணிந்ததும் எல்லாரும் அறிந்த செய்தி தானே!

தொடக்கி வைத்தவர் வள்ளலார் என்றால் முடுக்கி விட்டவர் பாரதியாரே என்பதில் யாருக்கும் எதிர்க் கருத்தில்லை. பாரதியாரும் தெய்வங்களை மிகுதியாகப் பாடியவர்தாம், என்றாலும் மக்களைப் பாடிய பாடல்



களும் மிகுதியாகவே உள்ளன. ஆனால் பாரதிதாசனோ தெய்வங்களைப் பாடியது போதும் என்று மூட்டை கட்டி வைத்து விட்டு மனிதனைப் பாடுவதே இனி எனது பணி என்ற முடிவிற்கு வந்தவர். பாவேந்தர் பாரதியாரோடு இருந்த காலத்தில் இந்திய தேசிய எழுச்சிக்காகவும், இந்திய மக்களின் விடுதலைக்காகவும் தன்னுடைய கவிதைகளைக் காணிக்கையாக்கினார். பாரதியார் மறைவிற்குப் பிறகு தந்தை பெரியாரைப் பின்பற்றித் திராவிட தேசிய எழுச்சிக்காகவும், தமிழர் விடுதலைக் காகவும் தன் ஒப்பற்ற கவிதையாற்றலை ஒப்படைத்து விட்டார். ஆக இருபதாம் நூற்றாண்டுக் கவிதை வரலாற்றில் பெரும்பகுதியை உரிமை கொண்டவர் பாவேந்தரே என்றால் அது மிகை இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

பாரதியார் சில செய்திகளைக் குறிப்பாகத் தான் தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்த முடிந்தது. சாதி அமைப்பு, மூடநம்பிக்கைகள், அரசியல் அடிமைத் தனம், இனப்பற்று என்பன அவற்றுட் சில. இவற்றைப் பற்றி மிக விரிவாகப் பாடவில்லைதான்; (பாவேந்தரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது) விரிவாகப் பாடாமை அவர் குற்றமன்று; அது காலத்தின் குறை. மேற் குறித்தன பற்றி விரிவாகப் பாடக் காலமும் குறுகியதா யிருந்தது; அவர் வாழ்நாளும் குறுகியதாயிருந்தது. நீண்ட ஆயுளைப் பெற்று நெடிய வாழ்வைக் கண்டிருந் தால் அவர் எல்லாவற்றையும் விரிவாகவே பாடியிருப் பார். இதற்கான அடிப்படைகளை அவருடைய பாடல் களிலே நாம் காண முடிகின்றது. ஆனால் பாரதிதாசன் நீண்ட ஆயுளும் நெடிய வாழ்வும் பெற்றவர். ஓர் இயக்கத்தின் பின்னணியும் அவருக்கு இருந்தது. ஆகவே வாழ்க்கையின் எல்லாத்துறை பற்றியும் விரிவாகப் பாடல் இயற்ற அவரால் முடிந்தது. அவர் எதைப் பற்றிப் பாடினாலும் இறுதியில் இனமீட்சி தான் தமிழனின் எல்லாக் குறைகளையும் போக்கும், எல்லா நலன்களையும் ஆக்கும் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய நூல்களை நுனிப்புல் மேயாமல் ஆழ்ந்து கற்றவர்கள் இந்த முடிவிற்குத் தான் வர முடியும். இனமீட்சியும் மொழி மீட்சியும்- இவற்றால் தமிழனின் வாழ்வியல் மீட்டுருவாக்கமும் நிகழ்ந்து தீர வேண்டும் என்பதில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் இயற்கையழகைப் பாடுகின்ற பொழுது கூட குறிப்பாக அழகின் சிரிப்பில் கூடத் தமிழின மீட்டுருவாக்கத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை என்றால் காப்பியங்களைப் படைக்கின்றபொழுது இக்கருத்தை அவரால் மறக்க முடியுமா? பாவலர்கள் காப்பியம் படைக்கின்ற பொழுது தத்தம் நோக்கத்திற்கேற்பத் தான் கதைகளை உருவாக்குவார்கள். இது அவர்களின் சிறப்புரிமை. அந்த உரிமையை அவர்கள் நிலை நாட்டுகின்ற பொழுது சில பாத்திரங்களின் வாயிலாகவோ-கதை நிகழ்ச்சிகளின் வாயிலாகவோ உய்த்துணர் பொருளாகவோ தத்தம் நோக்கத்தை வெளிப்படுத்துவார்கள். பாவேந்தரும் இதற்கு விலக்கல்லர். இன மீட்டுருவாக்கம் என்ற செய்தியை அவர் சில நூல்களில் பாத்திரங்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். சில நூல்களில் நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். சில நூல்களில் உய்த்துணர் பொருளாக வெளிப்படுத்துகின்றார். இதுபோன்ற வெளிப்பாட்டுவகை காப்பியத்தின் ஒரு பகுதியாகத்தான் அமைந்திருக்கும். இது தவிர வேறு செய்திகளும் அக்காப்பியத்துள் பெருமளவு இடம்பெற்றிருக்கும் உள்ளும் புறமும் இன மீட்டுருவாக்கத்தையே முழு நோக்கமாகக் கொண்ட ஒரு காப்பியம் உண்டா? பாவேந்தர் இயற்றியிருக்கின்றாரா என்றால் அது பாண்டியன் பரிசு என்ற பனுவலே என்று தயங்காமல் கூறலாம்.

பாவேந்தரின் ஏனைய காப்பியங்களில் இருந்து பாண்டியன் பரிசு பெருமளவில் வேறுபட்டு விளங்குகின்றது. அளவிற் சற்றுப் பெரிதாக அவர் இயற்றிய காப்பியம் கூட இதுதான். இதனை உரைநடையிலே எழுதினால் நீண்டுவிடும் என்பதற்காகவே இதனைப் பாவடிவில் இயற்றினேன் என்று கூறுகின்றார் பாவேந்தர். இது ஓரளவிற்குத்தான் உண்மை. இதனை உரைநடையில் எழுதியிருந்தால் இன எழுச்சியைத் தூண்டும் ஒரு நாடகம் கிடைத்திருக்கக் கூடும். ஆனால் இனமீட்டுருவாக்கத்தையே உள்ளுறுத்தும்— வெளிப்படுத்திக் காட்டும் அழகிய 'குறியீடு' கிடைத்திருக்க மாட்டாது. அது கவிதையில் மட்டுமே அமைவது. இதனையும் கருத்திற்கொண்டுதான் பாவேந்தர் பாண்டியன் பரிசை உரைநடையில் எழுதும் தன் நோக்கத்தைக் கைவிட்டிருப்பார் என்று எண்ணுகிறேன்.



## பாவேந்தம் தரும் செய்தி:

பாவேந்தரின் காப்பியங்களில் பாண்டியன் பரிசு அவ்வளவு சிறப்பில்லை என்பது போன்ற ஒரு கருத்துக் கூட நிலவுகின்றது. திரு. கோவேந்தன் அவர்கள் எழுதிய பாவேந்தம் என்னும் நூலில் ஒரு வியத்தகு செய்தி காணப்படுகின்றது. திரு. கோவேந்தன் அவர்கள் தம் நண்பர் திரு. லெனின் தங்கப்பாவைப் பாவேந்தர் பால் அழைத்துச் சென்றதாகவும், அப்பொழுது பாவேந்தர் தம் நூலில் எது எது தேறும் என்று கேட்டதாகவும் அதற்கு தங்கப்பா அவர்கள் அழகின் சிரிப்பு, குடும்பவிளக்கு, அமைதி, சேரதாண்டவம் மற்றும் பல தனிப்பாடல்கள் என்று விடையிறுத்ததாகவும் எழுதுகின்றார். நூலில் மேலவரும் செய்தியைத் தொடர்ந்து படித்துப் பாருங்கள்.

''பாண்டியன் பரிசு என்று வினா எழுப்பினார் பாவலர் (பாவேந்தர்). 'ஒருதுப்பறியும் கதைபோல அமைந்து விட்டது. தங்களின் கலைத்திறம் அதில் உள்ளது. ஆனால் கதை தன்னேரில்லாத் தலைவனை இழந்து விட்டது' என்றார் ம. இலெ. தங்கப்பா. எனக்குப் பாவேந்தரின் சிறறத்திற்கு எங்கே ஆளாகி விடுவாரோ என்று அச்சம்.''

''ஆனால் பாவலர் 'ஆமாம்! கதைத் தலைவனை வீரனாக்கினேன். ஆனால் வைய மக்கட்கு, விழிகட்கு ஆளாக்க விலலைதான்' என்று **எதையோ நினைத்த வண்ணம் இருந்தார்''**

பாவேந்தம் பக்கம் 103,104

திரு. தங்கப்பா சில நூல்களின் பெயரைச் சொன்னவுடன் பாவேந்தர் 'பாண்டியன் பரிசு' என்று விரைந்து கேட்டதும், ஏனைய நூல்களான எதிர்பாராத முத்தம், கடல் மேற்குமிழிகள், குறிஞ்சித்திட்டு என்றெல்லாம் கேட்காமல் விட்டுவிட்டதும் நமக்கு உணர்த்துவது என்ன? பாவேந்தரின் நோக்கில் பாண்டியன் பரிசு சிறப்பான ஒரு காப்பியம் என்ற கருத்து அவருக்கு இருந்திருக்கின்றது என்பதுதான். பாவேந்தரின் நோக்கில் சிறப்பான காப்பியம் என்று கருதப்படுவது, அதாவது படைத்தவன் நோக்கில் சிறப்

பானது என்று கருதப்படுவது. படிப்பவனின் நோக்கில்
சிறப்பில்லை என்று ஒதுக்கப்பட்டால் படைத்தவன்
பிறழ உணர்ந்திருக்க வேண்டும்; இல்லையேல் படித்
தவன் பிறழ உணர்ந்திருக்க வேண்டும். படைத்த
பாவேந்தரின் கருத்தைத் திரு. தங்கப்பா அவர்கள்
தொட்டும் தொடர்ந்தும் உணர்த்தத் தவறிவிட்டாரோ
என்றுதான் இங்கே எண்ணத் தோன்றுகின்றது.
பாவேந்தரின் படைப்பு நுட்பத்தைப் படித்தவராகிய
திரு. தங்கப்பாவும் அறிந்து கொண்டிருப்பதால்
பாவேந்தர் 'பாண்டியன் பரிசு' என்று கேட்டபோது
'ஆம்! அதுவும் நிலைக்கும் தகுதியுடையதுதான்,
என்றே கூறியிருப்பார். பாவேந்தா நினைத்துச் செய்த
படைப்பு நுட்பங்களும் திரு. தங்கப்பாவின் நோக்கும்
சந்தித்துக் கொள்ளத் தவறி இருக்கலாமோ என்று
எண்ணத் தோன்றுகின்றது.

**'எதையோ நினைத்த வண்ணம் பாவேந்தர் இருந்தார்'**
என்ற பகுதி குறித்துக் கொள்ள வேண்டிய பகுதி. எந்த
ஒன்றை அவர் நினைத்துக் கொண்டிருந்திருப்பார்?
இதனைப் பிறகு பார்ப்போம் முதலில் திரு. தங்கப்பாவின்
கூற்றைக் காண்போம். திரு. தங்கப்பா கூறியது ஓரளவு
சரியானதுதான். ஒரு காப்பியம் எப்படி அமையவேண்டும்
என்பதைக் கூற வந்த இலக்கணங்கள் 'தன்னேரில்லாத்
தலைவனை உடைத்தாய்' என்றுதான் பேசத்தொடங்கு
கின்றன. பாண்டியன் பரிசில் வரும் கதைத்தலைவன்
வேலன் இங்கே ஓர் தன்னேரில்லாத் தலைவன் அல்லன்.
அன்னமும் கூடத் தன்னேரில்லாத் தலைவியல்லள்.
ஆகவேதான் திரு. தங்கப்பா அவர்கள் பாவேந்தரிடம்
அவ்வாறு கூறினார். ஆனால் நான் இதனை வேறுவகை
யாகப் பார்க்கிறேன். ஒவ்வொரு காப்பியத்துக்கும்
தன்னேரிலலாத் தலைவன் இருந்துதான்தீரவேண்டுமா?
அப்படி இருந்துதான் தீரவேண்டும் என்றால் சிலப்பதி
காரத்தில் கோவலனைத் தன்னேரில்லாத் தலைவன்
என்று ஏற்றுக் கொள்ளமுடியுமா? இங்கே கண்ணகிதான்
தன்னேரில்லாத் தலைவியாகக் காட்சியளிக்கின்றாள்.

பெரியபுராணத்தில் தன்னேரில்லாத் தலைவன் யார்?
சுந்தரர் என்று சிலர் சொல்கிறார்கள். சிலர் சொல்கிறார்
கள் என்பதை விடப் பூசி மெழுகுகிறார்கள் என்பதுதான்
சரியான விடை. உண்மையில் அங்கே தன்னேரில்லாத்



...லைவன் யார்? சிவபெருமான் தான். தண்டியலங்
...ரம் கூறும் பெருங்காப்பிய இலககணத்திற்குச்
...வபெருமான் ஒத்துவராத காரணத்தினால்தான் சுந்தர
...த் தலைவராக்க முயல்கிறார்கள். இங்குத் தன்னேரில்
...த்தலைவன் சிவபெருமான் என்பதைவிடப் பசு.
...தி, பாசம் பற்றிய சைவசித்தாந்தக் கோட்பாடு தான்
...ன்னேரில்லாத தலைமைக்குரியதாகத் திகழ்கின்றது.

...பருங்காப்பிய இலக்கணத்தில் நன்மணம் புணர்தல்,
...ம்பொழில் நுகர்தல், புனல்விளையாடல், புதல்வரைப்
...பறுதல் என்பன சிவபெருமானுக்கு ஒத்துவராதன.
இதனால்தான் சுந்தரரைத்தலைவராக்கமுயல்கிறாாகள்.

...3 நாயன்மார்கள் கதையில் ஒருவர் மட்டுமே தலைவர்
என்பது எப்படிப் பொருந்தும்? சுந்தரர் காப்பியத்தின்
தொடக்கத்திலும், இறுதியிலும் இடம் பெறுவதனாலும்
...பருங்காப்பிய இலக்கணத்திற்கு முழுமையாக இல்லா
...விட்டாலும் முக்கால் பங்காவது ஒத்துவருவதனாலும்
...நாம் சுந்தரரைத் தலைவராக்க முயல்கின்றனா. சைவத்
தொண்டு என்று பார்த்தால் திருநாவுக்கரசரும், சைவத்
...ற்குப் புதுவாழ்வளிக்கப் புறச்சமயத்தோடு போராடிய
...வா என்று பார்த்தால் சம்பந்தரும் காப்பியத் தலைமை
பெறும் தகுதியுடையவர்தாம். ஆனால் எப்படிப்
பார்த்தாலும் காப்பியத்தின் இரண்டொரு பகுதியில்
...தான் அவர்கள் ஆட்சி நடத்துகின்றனர். எஞ்சிய பகுதி
...ளில் இவர்கட்கு வேலையே இல்லை. ஆனால் நூல்
முழுவதும் நீக்கமற நிறைந்திருப்பது சைவ சித்தாந்தக்
கோட்பாடு—சிவ நெறியின் ஏற்றம் கூறும் செய்தி.
இந்த அடிப்படையில் சிலம்பையும் பெரியபுராணத்தை
யும் எடுத்துக் கொண்டு காப்பியத் தலைமை வழங்கப்
பட்டுள்ள நெறியை நினைவு கூர்ந்தால் நாம் ஒரு
முடிவுக்கு வந்து விட முடியும். ஒரு காப்பியம்—

1. தன்னேரில்லாத் தலைவனைப் பெற்றிருக்கலாம்
2. தன்னேரில்லாத் தலைவியைப் பெற்றிருக்கலாம்
3. தன்னேரில்லா வேறு ஒன்றினையும் பெற்றிருக்கலாம்.

...ரிய புராண அமைப்பின் படியும், பெருங்காப்பிய
இலக்கண அடிப்படையிலும் சிவபெருமானைத் தலைவ
...னாகவோ—தலைவியாகவோ கொள்ள முடியாது.

தலைமை சான்ற வேறு ஒன்றாகத் தான் கொள்ள முடியும்.

பாவலர்கள் இலக்கணத்தை எக்காரணம் கொண்டும் மீறுவதில்லை என்று முடிவெடுத்திருப்பார்களேயானால் நம்முடைய சொல் வளம் இவ்வளவு பெருகியிருக்காது. நம்முடைய பாவகைகள் இவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்க மாட்டா. நம் இலக்கியங்களின் வளர்ச்சிப் போக்கும் தடுக்கப்பட்டிருக்கும். தேவையான பொழுது இன்றியமையா மாற்றங்களைச் செய்து கொள்வது தான் இலக்கிய வளர்ச்சி, மொழி வளர்ச்சி என்ற கருத்து இருந்ததனால் தான் ஒரு சங்கிலித்தொடர் போன்ற வளர்ச்சியை நாம் காணுகின்றோம். அவ்வாறு புதியவற்றை ஆக்கிக் கொள்ளும்போது அது பழைமையிலிருந்து கிளைத்ததாகவோ— பழைமையின் ஊட்டத்தைப் பெற்றதாகவோ இருக்க வேண்டும்.

## பாண்டியன் பரிசின் கதைத்தலைமை:

இங்கே காப்பியத்தில் தன்னேரில்லா ஒன்று (ஒரு கருத்தோ—ஒரு உணர்வோ—ஒரு மனிதனோ) இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். ஒரு காப்பியத்தின் தலைமை தலைவனாகவோ- தலைவியாகவோ— ஒரு கோட்பாடாகவோ இருக்குமென்றால் அது பிழை இல்லை. அது தன்னேரில்லாததாக இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். வேலனைப் பாவேந்தர் ஏன் தன்னேரில்லாத தலைவனாக ஆக்கிக் காட்டவில்லை. காட்டவேண்டும் என்பது தெரியாதா? தெரியும். அப்படியிருந்தும் ஏன் காட்டவில்லை? காப்பியத்தின் உயிராக இனமீட்டுருவாக்கம் என்ற கருத்து தன்னேரில்லாததாக ஓங்கி நிற்பதனால்தான் அதற்குப் போட்டியாக வேலனை நிறுத்த விரும்பவில்லை. இரண்டு 'தன்னேரிலாமை'கள் மோதிக் கொண்டால் சுவை சிதறும் என்பதனால்தான் வேலனை அடக்கி வாசிக்குமாறு அமைத்துவிட்டார். 'பாவேந்தர் எதையோ நினைத்தவண்ணம் இருந்தது' ஏன் என்று எண்ணிப் பார்ப்போமா? 'நாம் காப்பியத் தலைமைக்குரியதாகத் தேர்ந்தெடுத்தது ஒன்றை; ஆனால் படிப்பவர்கள் வேறொன்றையல்லவா தேர்ந்து கொண்டுவிட்டனர்! — இந்த வியப்புதான் பாவேந்தரை 'எதையோ நினைத்தவண்ணம்' இருக்க வைத்தது.



பாவேந்தர் வேலனைக் கதைத் தலைவனாகக் கருதவில்லை என்பதனை வேறொரு வழியிலும் நாம் கண்டு தெளியலாம். எப்பாவலனும் தன்னுடைய காப்பியத் தலைவனைப் பெரும்பாலும் முதற் காட்சியிலேயே அறிமுகப்படுத்தி விடுவான். அல்லது அவனைப் பற்றிப் பிறர் பேசுமாறாவது செய்து விடுவான். ஆனால் பாண்டியன் பரிசில் நாம் கதைத் தலைவனை (வேலனை) 18 ஆவது இயலில் தான் நேரில் சந்திக்கின்றோம். 16–ஆவது இயலில் தான் வீரப்பனால் வேலன் பெயர் உச்சரிக்கபபடுகின்றது. கதையிலும் கூட அவன் தானே முடிவுகளை எடுப்பவனாகவோ — செயற் படுபவனாகவோ சித்திரிக்கப்படவில்லை. பெரும்பாலும் அவன் சீனிஎன்னும் கணக்காயராலும், மாறுவேடத்தில் வரும் வீரப்பனாலும், சில போது ஆத்தாவினாலும் இயக்கப்படுகின்றான்.

பாண்டியன் பரிசு நூல் 94-இயல்களைக் கொண்டது. இதில் பதினெட்டாவது இயலில்தானே வேலனை நாம் நேரிடையாகச் சந்திக்க முடிகின்றது என்றால் காப்பியத்தில் ஐந்தில் ஒரு பகுதி முடிந்துவிட்ட பிறகே கதைத் தலைவன் அறிமுகம் செய்யப்படுகின்றான் என்றாகிறது. இவ்வாறு எந்தப் பாவலனாவது தன் கதைத் தலைவனை அறிமுகம் செய்வானா? அப்படியானால் பாவேந்தர் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? நல்ல படைப்பாற்றல் மிக்க பாவேந்தர் இப்படிச் செய்ததன் பொருளென்ன? கதை நீண்டதூரம் சென்ற பிறகு வேலன் அறிமுகம் செய்யப்படுவதனாலும், வேலன் தானே இயங்கும் ஆற்றல் இல்லாதவனாகக் காட்டப்படுவதனாலும், அவன் பிறரால் இயக்கப்படுவதனாலும் பாவேந்தர் வேலனைக் கதைத் தலைவனாகக் கருதவில்லை என்பது தெரிகின்றது.

சரி. கதைத் தலைவி அன்னம் என்று கூறமுடியுமா? அதுவும் முடியாது. ஏனென்றால் வேலனுக்குள்ள குறைபாடுகள் இவளுக்கும் உண்டு. அவளும் எடுப்பார்கைப் பிள்ளையாகத்தான் இருக்கின்றாள். அவள் கதையின் இறுதியில் நரிக்கண்ணனைக் கொல்கின்றாள் என்ற

ஒன்றைத் தவிர அவளுடைய செயல்களில் தனித் தன்மையோ — தலைமைக்குரிய தகைமையோ இருப்ப தாகக் கூறமுடியவில்லை. இப்பொழுது ஒரு கேள்வி எழுப்பப்படலாம்: 'வேலன்தான் காப்பியத்தின் தொடக் கத்தில் அறிமுகம் செய்யப்படவில்லை. ஆனால் அன்னம் நான்காவது இயலிலேயே அறிமுகம் செய்யப்பட்டு விடு கின்றாள். ஆகவே ஏன் அன்னத்தைக் கதைத் தலைவி என்று சொல்லக்கூடாது'? — இப்படி இருக்கும் அக் கேள்வி?

கதைத் தலைவனுக்குரிய பல்வேறு தகுதிகளில் முதற் காட்சியில் அறிமுகம் செய்யப்படவேண்டும் என்பதும் ஒன்றே தவிர, முதற் காட்சியில் அறிமுகம் செய்யப் படுவது ஒன்றுதான் கதைத் தலைவனின் தகுதி என்று முடிவு கட்டிவிடக்கூடாது. சில நாடகங்களில் காவலர் களும், நகையாளர்களும் (விதூடகர்) கூட முதற் காட்சி யில் அறிமுகம் செய்யப்பட்டு மேல்வரும் காட்சிகளிலும் கூடத் தொடர்ந்து அவர்கள் வருவது உண்டு. இவர்கள் எல்லாம் முதற்காட்சியில் இடம் பெற்றுவிட்டதனாலும், தொடர்ந்து வருவதனாலும் கதைத் தலைவன் என்ற தகுதியைப் பெற்றுவிடுவார்களா? பெறமுடியாது. இதனால்தான் நான் முன்னரே கூறினேன்— பாண்டியன் பரிசு கதைத் தலைமை மனிதர்களிடம் வழங்கப்படவில்லை; ஒரு மாபெரும் கோட்பாட்டின்பால் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது என்று.

ஒரு நாடகம் அல்லது காப்பியத் தொடக்கப் பகுதியில் தான் கதைக்கு அடிப்படையான செய்திகளை — குறிக் கோள்களைப் பாவலர்கள் வெளிப்படுத்துவார்கள். அந்த அடிப்படைச் செய்திகள் — குறிக்கோள்களின் மீதுதான் எஞ்சிய பகுதிகள் எடுத்துக்கட்டப்படும். இரண்டும் ஒருங் கிணைக்கப்பட்டு முழுமையுறும்பொழுது காப்பிய மாளிகையும் முழுமையுறும். இங்கே முதல் பத்து இயல் களுக்குள் கதைத் தலைவன், தலைவி போல வரும் அன்னம், வேலன் முழுமையாகக் கூட இல்லை, பகுதி யாகக்கூடச் சித்திரிக்கப்படவில்லை. அப்படி என்றால் முதல் பத்து இயல்களில் பேசப்படும் செய்தி என்ன? இதனை நுணுக்கமாக ஆய்வு செய்தால் கவிஞன் கருதும் இன்றியமையாச் செய்தியை—வேறொரு வாய்பாட்டிற்



கூறினால் காப்பியத் தலைமைப் பொருளைக் கண்டறிய முடியும். இனி அதனை முறையாகக் காண்போம்.

## கதையின் அடிப்படை நோக்கம்:

பாண்டியன் பரிசின் முதற் பத்து இயல்களில் என்ன பேசப்படுகின்றது? அதனுள்ளே அமிழ்ந்து கிடக்கும் செய்தி என்ன? அவற்றை எல்லாம் கண்டறிவது எவ்வாறு?—இவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர் பாண்டியன் பரிசு கதையை சுருக்கமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒட்டுமொத்தக் கதையின் நெறிப்பட்ட போக்கை அறிந்து கொண்டால் கதையில் அமிழ்ந்து கிடக்கும் பொருளைத் தேடிச் செல்லும் பொழுது குழப்பம் ஏற்படாமல் இருக்கும். இதோ கதை.

கதிர் நாடு. அதன் மன்னன் கதிர்வேலன். அவன் மனைவி கண்ணுக்கினியாள். மகள் அன்னம். அரசனும் அவன் குடும்பத்தினரும் கலைகளில் மூழ்கி இன்பக் களிப்பில் திளைக்கின்றார்கள். அரசி கண்ணுக் கினியாள் அண்ணன் நரிக்கண்ணன். அயலே உள்ள வேழ நாட்டின் படைத்தலைவன். அவன் வீரன் என்று அழைக்கப்படுவதைவிட வஞ்சகன் என்று அழைக்கப் படும் பொழுதுதான் முழுமையுறுவான். கதிர் நாட்டை யடையும் வஞ்சக நோக்கோடு வேழ மன்னனிடம் கோள் சொல்லுகின்றான். வேழனின் படைகள் கதிர் நாட்டை முற்றுகையிடுகின்றன.

கடுமையான போர். ஆனாலும் அதிக நேரம் பிடிக்க வில்லை. அரசனையும் அரசியையும் வஞ்சனையால் நரிக்கண்ணன் கொல்ல வேழநாட்டுப் படைகளால் கதிர் நாடு கொள்ளையிடப்படுகின்றது. ஆத்தா அன்னத் தைப் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்கின்றாள். பாண்டியன் பரிசு என்னும் ஒப்பற்ற உரிமைப் பொருள் கள் அடங்கிய பேழையை நரிக்கண்ணன் கவர்ந்து ஒரு பணியாளிடம் கொடுக்கின்றான். அப்பணியாள் மாறுவேடத்தில் வந்திருந்த வீரப்பன் (வேலனின் தந்தை). ஆகவே பாண்டியன் பரிசு என்னும் பேழை கைமாறி விடுகின்றது. வஞ்சனையாற் பெற்ற பேழை கைக்கு எட்டியும் வாய்க்கெட்டாமல் போய் விட்டதனால் நரிக்கண்ணன் சூழ்ச்சி வலைகள் பலவற்றை விரிக்கின்

றான். சூழ்ச்சி–சூழ்ச்சி–சூழ்ச்சி மேற் சூழ்ச்சி. இறுதியில் அச்சூழ்ச்சிவலை அவனையே சுற்றிக்கொள்ள அதி லிருந்து விடுபடமுடியாமல் நரிக்கண்ணனும் அவன் கூட்டத்தாரும் அடியோடு அழிகின்றனர். வீரப்பனிட மிருந்த பேழை ஒரு வழியாக வேலனிடம் வந்து சேர் கின்றது. அதனை அவன அன்னத்திடம் கொடுக்கின் றான். அன்னம் வேலன் திருமணம் நிகழ்கின்றது. வேலன் கதிர் நாட்டின் அரசனாக முடிசூட்டப்படுகின் றான்.

இங்கே கதை முழுவதையும் நான் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை? உரை நடையில் எழுதினால் பக்கங்கள் நீளும் என்று பாவேந்தரே அஞ்சினார் என் றால் நான் அஞ்சாமல் இருக்க முடியுமா? அதனால் தான் சுருக்கமாக எனக்குத் தேவையான–இன்னும் சரியாகச் சொன்னால் முதல் பத்து இயல்களுக்கு மட்டுமே முதன்மை கொடுத்து எழுதியுள்ளேன்.

பாண்டியன் பரிசு ஒரு வரலாற்றுக் காப்பியமா?- உறுதி யாக இல்லை என்ற பதில்தான் கிடைக்கும். வரலாறு போலக் காட்டப்பட்டுள்ளதே தவிர இதில் வரலாறு இல்லை என்று சொல்லக் கூடும். ஆனால் இது முழு உண்மையில்லை. இதில் வருகின்ற கதை மாந்தர்கள் எக்காலத்திலேனும் வாழ்ந்தவர்களா என்றால் இல்லை யென்றுதான் கூறவேண்டும். ஆனால் இம்மாந்தர் களைக் கொண்டு உருவாக்கிக் காட்டப்படும் செய்திகள் தமிழர் வரலாற்றோடு தொடர்புடையவைதானா என்றால் ஆம் என்றுதான் விடையிறுக்க வேண்டும். ஒரு வரலாற்று மாந்தனின் தனிப்பட்ட வாழ்வும் தாழ்வும் இங்குப் பேசப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஓர் இனத்தின் வரலாறு பேசப்படுகின்றது என்று சொன்னால் அதுவும் உண்மைதான். நூலின் முதல்பத்து இயல்களிலும் பேசப்படுவது இனவரலாற்றுச் செய்திகளே என்றால் அது நூற்றுக்குநூறு உண்மையே.

பாண்டியன் பரிசு என்னும் இந்நூல் அரசன், அரசி, தனியாட்சி பற்றிப் பேசுகின்றது. பாவேந்தர் அரசன், அரசியர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் அல்லர். மக்க ளாட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். இன்னும் சரியாகச் சொன்னால் அடிமை இந்தியாவிலே பிறந்து விடுதலை பெற்ற இந்தியாவிலே மறைந்தவர். அப்படி என்றால்



தன்னுடைய சமகாலக் கதையைச் சொல்லாமல் ஓர் அரசன், அரசி கதையை ஏன் எடுத்துக் கொள்கின்றார்? இது நியாயமான கேள்விதான். இத்தகைய கதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதற்குக் காரணம் இருக்கின் றது. தமிழின வரலாற்றைச் சுட்டிக் காட்ட விழைந்தது தான் காரணம். இக்காப்பியத்துள் நாம் காணும் செய்தி கள் இரண்டு.1 தமிழினம் வீழ்ச்சியுற்றவரலாறு. இதனை நெடிய வரலாற்று நோக்கிலே பார்க்கின்றார். 2 வீழ்ச்சி யிலிருந்து விடுபட்டு எழுச்சியுற்றுத் தன்னுரிமை எய்தல். இதனைக் குறியீட்டு நெறியால் (Svmbolism) புலப்படுத்து கின்றார். இவ்விரண்டின் இணைவுதான் இக்காப்பி யத்துள் மேலோங்கி நிற்கும் செய்தி. கவிஞனின் குறிக் கோளும்கூட இதுதான். இதனால்தான் இக்காப்பியத் தலைமை மனிதர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை; ஒரு கோட்பாட்டின் பால் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினேன்.

## போர்களின் அடிப்படை:

காப்பியத் தொடக்கம் போரிலேதான் தொடங்குகின்றது சீர்மிகுத்த கதிர்நாட்டின் மீது திறல் மிகுத்த வேழ நாட்டுப்படைகள் திரண்டு வருகின்றன. கவிஞன் ஏன் ஒரு போர்க்காட்சியைக் காப்பியத் தொடக்கமாக அமைக் கின்றான். இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் வரலாறுகள் எல்லாம் போர்க்களங்களின் வரலாறுதானே! அரியணை உரிமைகள் கூடப்போர்க்களங்களால் தானே உருவாக் கப் பட்டிருக்கின்றன. குருதி பரந்த அந்நெடுவெளிதான் கொடைக்கனிகளை வழங்கியது; வீரயுக இலக்கியங் களின் நாற்றங்காலாக விளங்கியது. இவை எல்லாம் உண்மைதான். இதற்கெல்லாம் மேலான ஒரு உண்மை என்ன என்றால் தமிழின வீழ்ச்சிக்கும் இதுவே காரணம் என்பதுதான்.

ரூசோ கூறுவான்— ‘ஆடம்பர வாழ்க்கை இல்லா விட்டால் கலையேது? அநியாய மனிதர்கள் இல்லா விட்டால் சட்ட விவகாரங்கள் ஏது? கொடுங்கோலர் களும் போர்களும் இல்லை என்றால் வரலாறு ஏது?’ சிலவற்றின் தோற்றத்தை இங்கே ரூசோ மிகத் தெளி வாக எடுத்துக்காட்டுகின்றான். போர்களாலே தான்

வரலாறு பிறந்தது. முறை தவறியவர்களாலே தான் சட்டம் பிறந்தது. ஆடம்பர வாழ்க்கை தான் கலையைக் கொண்டு வந்தது. எது தமிழ் இன வீழ்ச்சிக்கு வித்திட்டதோ அதனைத் தொடக்கமாக்கி- வீழ்ச்சியைக் கண்முன் காட்டி அதிலிருந்து மீண்டும் எழுச்சி பெற என்ன செய்ய வேண்டும் என்பதைக் காப்பியத்தில் தொடர்ந்து கூறுகின்றான்.

சங்க காலத்தை வீரயுகம் என்பார்கள். 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்' என்கின்றாள் மகனைப் பெற இருக்கும் ஒருத்தி. பிள்ளையைப் பெற்ற முதியவளோ 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என்று தோள் கொட்டுகின்றாள். பிள்ளையை ஈ மொய்த்தாலும், எறும்பு கடித்தாலும் பொறுத்துக் கொள்ளாத தாயர்களே இத்தகைய போர்க்குணம் கொண்டிருந்தால் ஆடவர்கள் எப்படி இருந்திருப்பார்கள். கூடத்திலே கட்டியிருந்த முழவு காற்றிலேயசைந்து அயலில் உள்ள ஏதேனும் ஒன்றில் இடித்து விட்டால் ஓர் ஒலி எழுமே, அவ்வொலியைக் கேட்டாற் கூடப் போதும்; வேலைக் கையிலே எடுத்துக் கொண்டு போர் முரசு ஒலிப்பதாகப் புறப்பட்டு விடுவார்களாம். இப்படித் தான் புற நானூறு புகல்கின்றது.

இங்கே நாம் ஒன்றை ஆய்ந்து காண வேண்டும். போர்களின் பின்னணி என்ன? அது எவ்வாறு உருவாகின்றது? அதிகாரங்களைக் கையிலே தாங்கிய மனிதர்களின் மனக்கோட்டந்தான் போர்களை ஈன்றெடுத்தது என்று சிலர் தத்துவ விளக்கம் தரலாம். படைகளும் அரசுகளும் உருவான பிறகு வேண்டுமானால் இது சரியாக இருக்கலாம். இது கூட முற்றிலும் சரியானது என்று சொல்லி விட முடியாது. ஒரு தனி மனிதனே மற்றொரு தனி மனிதனோடு மோதுகின்றானே அது ஏன்? வலியவனாக இருப்பவன் எளியவனாக இருப்பவனை வென்று அவன் உடைமையைக் கவர எண்ணும் மனக் கோட்டந்தான் அதற்கு முதற்காரணம். இத்தகைய மனிதர்கள் அரசின் தலைமைக்கு வரும் பொழுது என்ன நிகழ்கின்றது? வீரம் வெற்றியை மட்டும் நாடாமல் அந்நாட்டின் செல்வத்தையும் விரும்புகிறது. கொள்ளை! கொள்ளை! கொள்ளையோ



கொள்ளை! ஒவ்வொரு போரின் முடிவிலும் நாம் இதனைத் தான் காண்கிறோம், போருக்குப் புறப்படும் முன்பே பகைவர் நாட்டுப் பொருளையும் நிலத்தையும் புலவர்களுக்கு அரசன் வழங்கினான் என்று கூறும் புறப்பாட்டின் பொருள் என்ன? வீரம் என்று வெளிப்படையாகப் பேசப்பட்டாலும் அதன் மறை பொருளாக இருப்பது என்ன? பொருட் கொள்ளை தானே?

ஏன் அரசன் பகைவர் நாட்டுச் செல்வத்தைக் கொள்ளையடித்தான் என்றால் அவர்களைப் பொருளாதார நிலையில் வறியவர்களாக மாற்றத்தானேயன்றிப் பொருளாசையால் அன்று.பொருள் வளத்தை இழந்த மன்னன் படைக் கருவிகளை விரைந்து தேடவோ படை வலிமையைப் பெருக்கவோ முடியாது. அப்படி அவனால் பெருக்க முடியவில்லை என்றால் அவனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. ஆகப் பொருளைக் கவர்வது ஒரு அரசியல் நடவடிக்கையே என்று சொல்வதோடு புதிய போர் ஒன்று மூளாமல் தடுப்பதுமாகும் என்றெல்லாம் விளக்கங்கள் தரக்கூடும். அது பற்றி எல்லாம் நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்குத் தேவை எல்லாம் போர்களின் முடிவில் கொள்ளையடிப்பதுதான் வாடிக்கையாக அமைந்திருக்கின்றது என்பதுதான்.

## ஓர் எடுத்துக்காட்டு:

அலெக்சாந்தரின் வாழ்க்கையில் இருந்து ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டுவது இங்கே பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன். அவன் பாரசீகத்தின் மீது படை எடுக்கின்றான். டேரியஸ் மன்னன் தோற்றுவிடுகின்றான். அரண்மனைச் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டு அவன் முன்னே வைக்கப்பட்டுள்ளன. ஒரு தங்கக் கிண்ணம் அவன் கவனத்தைக் கவருகின்றது. அதன் அழகிய வேலைப்பாட்டிலே அவன் மனத்தைப் பறிகொடுக்கின்றான். அக்கிண்ணத்தைக் கையிலேந்திய படியே அவன் 'இக்கிண்ணத்தின் மீது எதனை வைத்தால் பொருத்தமாக இருக்கும்' என வினவுகின்றான். அருகிலிருந்தவர்கள் ஏதேதோ கூறுகின்றனர். அவர்களின் விடை அவனுக்கு நிறைவு தரவில்லை என்பதை அவனது ஏமாற்றம் படர்ந்த முகம் எடுத்துக் காட்டு

கின்றது. அருகில் இருந்தவர்கள் கேட்டனர். 'எதனை வைத்தால் பொருத்தமாக இருக்கும் என்பதை நீங்களே கூறுங்கள்.' அலெக்சாந்தர் கிண்ணத்தைக் கூர்ந்து நோக்கியபடியே கூறுகின்றான். 'ஹோமரின் இலியது காப்பியம்தான் இதன் மீது வைக்க முழுத் தகுதியுடையது.'

நாம் இந்தப் பதிலைக் கேட்டதும் அதிர்ந்து போய் விடுகிறோம். போர்க் களத்தில் கூட அலெக்சாந்தரின் சுவையுணர்ச்சி எப்படி இருக்கின்றது. அவனுடைய இலக்கிய வேட்கையும் கலை நுட்பமும் நம்மை மேலும் வியப்படைய வைக்கின்றது. இன்னும் ஒரு செய்தியைக் கேட்டால் நீங்கள் வியப்பின் எல்லைக்கே சென்றுவிடுவீர்கள்.

அலெக்சாந்தர் பிறந்ததும் அவன் தந்தை பிலிப்மன்னன் அரிஸ்டாடிலுக்கு ஒரு மடல் வரைகின்றான். அதில் தன் மகனை எல்லாக் கலைகளிலும் வல்லவனாக வளர்க்க விரும்புவதாகவும், அதற்கேற்ற கல்வியை அவனுக்குத் தர வாய்ப்பாக அனைத்துக் கலைகளிலும் வல்லவனான நீ வாழ்கின்ற காலத்தில் அவன் பிறந்தானே என்பதற்காகத்தான் நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்று எழுதுகின்றான். இந்த மகிழ்ச்சி ஒன்றும் பாழாய்ப்போய் விடவில்லை என்பதைப் பொற்கிண்ணம் பற்றி அவன் கூறிய புகழுரையில் இருந்தே நாம் தெளிவாக அறிந்து கொள்கின்றோம். எல்லாக் கலைகளிலும் அவன் வல்லவனாகவும் அரிஸ்டாடிலின் மாணாக்கன் என்று பேர் சொல்லத் தக்க வகையிலும்தான் அவன் விளங்கினான் என்பதை அவன் இந்தியத் தத்துவ இயலாருடன் உரையாடிய செய்தியிலிருந்தும் அறிந்து கொள்கிறோம். ஆனாலும் எல்லாக் கலைகளிலும் அறிஞனான அலெக்சாந்தர்கூட போர் என்று வந்தவுடன் டேரியஸ் மன்னனைக் கொள்ளையடிக்கவே செய்தான் என்பதுதான் தேவையான செய்தி.

இன்னொன்றையும் கூட நான் இங்கே குறிப்பிடவேண்டும். கிரேக்கப் போர்வீரர்கள் டேரியஸின் மனைவியைக் கைப்பற்றி அலெக்சாந்தரிடம் கொண்டு வந்த போது அலெக்சாந்தர் அவ்வீரர்களைக் கடிந்துகொள்கின்றான். பெண்களை இப்படி எல்லாம் அச்சுறுத்தக்கூடாது



என்றெல்லாம் கூறுகிறான். பின்னர் அவள் எங்கே செல்ல விரும்புகின்றாளோ அங்கே அவளைப் பாதுகாப்பாகக் கொண்டு சேர்க்குமாறு தன் வீரர்களுக்கு ஆணையிடுகின்றான். ஆனால் டேரியஸின் அரண்மனையில் கொள்ளையடித்த பொருள்களைப் பாதுகாப்பாக டேரியஸிடம் திருப்பிக் கொடுத்ததாக வரலாறு பேசவில்லை. இதிலிருந்து நமக்கு என்ன தெரிகின்றது. கல்விச் சிறப்பும் கலை மேம்பாடும் கொண்ட மன்னனே போர் என்றவுடன் கொள்ளையடிப்பதை விடமாட்டான் என்றால் செங்கிஸ்கானும், தைமூரும் விட்டுவிடுவார்களா? ஆகத் தனிமனிதனிடம் மறைந்து கிடக்கும் வலிமை எளிமையைக் கொள்ளையடிப்பது என்ற குணக்கேடு அரசனானாலும் விடுவதில்லை என்பது மட்டுமில்லை, அது வளர்ச்சிக்கேற்பப் பெரிதாகவும் ஆகிவிடுகிறது என்பது தான் இங்கே குறிப்பிடத்தக்கது.

போர்களில் வலியவன் வெல்வான், எளியவனைக் கொல்வான்; அல்லது சிறைசெய்வான். எளியவர்களின் பொருளைத் தன்னுரிமை ஆக்கிக் கொள்வான். இதுதான் உலகப் போர் நிகழ்ச்சிகளின் பிழிவு. இதனைத்தான் பாவேந்தர் பாண்டியன் பரிசின் முதல் பத்து இயல்களுக்குள் காட்டுகின்றார்.

## போர் எதிர்ப்பு:

வீரயுகத்தைத் தொடர்ந்து வருகின்ற காலகட்டங்கள் சமய வாழ்வைக் காட்டி வீரத்தை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டன. ஏன்? போர்களால் விளையும் அழிவையும் கேடுகளையும் கண்டவர்கள் போர்களில் வெறுப்புக் கொள்வது இயற்கையே. போரை ஒழிக்க ஒரு போராட்டம் தொடங்கவேண்டும் என்று கூட எண்ணியிருக்கலாம். இதனால்தான் வீரம் பின்னுக்குத் தள்ளப்படுகின்றது போலும். வீரத்தை உச்சியிலே வைத்துக் கொண்டு மகளிரே மெச்சுகின்ற காலகட்டத்தில் கூடப் போரெதிர்ப்பு முணுமுணுப்பு நமக்குக் கேட்கவே செய்கின்றது. அத்துணை ஆரவாரமிக்க போர்க்குரலுக்கு நடுவிலும் போர் எதிர்ப்புப் பாடல் மெலிதாகவேனும் ஒலிப்பதைப் புறநானூறு நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இதோ மார்க்கண்டன் என்னும் புலவன் பாடுகின்றான்.

'விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யானெனப் பல்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்தி சினோரே!

புறம்:

நிலமகள் அழுகின்றாளாம், ஏன்? நிலத்து உயிர்களை எல்லாம் ஊட்டிவளர்க்கும் தாயாக விளங்கிக் கொண்டிருக்கும் தன்னை வாளேந்திய அரசர்கள் தனக்குரியவளாக இவள் இருக்கவேண்டும் என்று ஆக்கிக் கொள்கிறார்களாம். அவனைவிட வலிமை வாய்ந்த மற்றொருவன் அவனைத் தோற்கடித்துத் தனக்குரியவள் ஆக்கிக் கொள்கின்றானாம். பிறிதொருவன் தன்னுடைய தோள் வலிமையாலும் வாள் வலிமையாலும் அவனிடமிருந்து அந் நிலமகளைப் பறித்துக் கொள்கின்றானாம். இப்படி வலிமை மிக்க அரசர்களுக்கெல்லாம் மாறி மாறி 'வைப்பாட்டி' போல வாழ நேர்ந்துவிட்டதே என்று நிலமகள் புலம்பும் புலம்பலில் போர் எதிர்ப்புணர்ச்சி தலை தூக்குவதை அறிந்திருப்பீர்களே! மார்க்கண்டனால் போர் எதிர்ப்பை நேரே பாடமுடியவில்லை. ஏனெனில் அது வீரயுகம் அடிவாங்கி மாளாது. அதனால் தான் நிலமகள் கூறுவது போலக் கூறித் தன் போரெதிர்ப்புணர்வை வெளிப்படுத்துகின்றான்.

சங்க காலத்திலிருந்து ஆயிரம் ஆண்டுகள் சென்றபின் வந்த கம்பராமாயணம் போரொழிப்புக்குப் புதியதோர் பல்லவியைப் பாடுகின்றது. பகையை ஒழித்துவிட்டால் போருக்கு வேலையில்லை என்கின்றது.

'யாரொ டும்பகை கொள்ளலன் என்றபின்
போரொ டுங்கும் புகழ்ஒடுங் காதரோ'

இது கம்பன் காணவிழையும் கற்பனை நாடு. புகழ் ஒடுங்காது வளர வேண்டுமா? போரை ஒடுக்குங்கள். போரை ஒடுக்கவேண்டுமா? பகையை விட்டொழியுங்கள். நல்ல அறிவுரை என்ற உணர்வோடு கம்பராமாயணத்தை எடுத்து விரிக்கிறோம். என்ன வியப்பு இராமாயணத்தில் எல்லாக் காண்டத்தையும்விட யுத்த காண்டந்தான் பெரிதாக இருக்கின்றது. ஏனைய காண்டங்களிலும் ஏராளமான போர்ச்செய்திகள். போரை ஒடுக்கிப் புகழைப் பெருக்க வந்த இராமாயணமும் போருக்கே



அதிக இடம் ஒதுக்கவேண்டியதாகிவிட்டது. ஒருவேளை போரைப்பற்றி மிகுதியாகப் பாடி அதனால் விளைந்த அழிவுகளை மிகுத்துக் காட்டிப் போரின் மேலே ஓர் வெறுப்பைத் தோற்றுவிக்க இப்படிப் பாடியிருப்பாரோ கம்பர். இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். என்ன நான் இருந்தாலும் போருக்கெதிராகக் குரல் கொடுத்த கம்பனைப் பாராட்டத்தான் வேண்டும். ஏனெனில் மார்க்கண்டன் அஞ்சிக்கொண்டே நிலமகள் மேல் ஏற்றித்தானே போரை எதிர்க்க முடிந்தது. கம்பன் நேரிடையாகவே எதிர்ப்புக் குரல் எழுப்பிவிட்டானல்லவா?

## போரும் கொள்ளையும்:

பாண்டியன் பரிசில் பாவேந்தர் போரிலே காப்பியத்தைத் தொடங்கி அதனால் விளைந்த கொடுமைகளை விவரிக்கின்றார். நாடுகவரும் போருணர்ச்சியினால் உடன் பிறந்த பாசம்கூட உருவழிந்து போகிறது. வஞ்சனைகள் தலை விரித்தாடுகின்றன. இறுதியாக நாடு கொள்ளையடிக்கப்படுகின்றது. இதோ பாவேந்தர் பாடுகின்றார். வேழ மன்னனின் வீரர்கள் கதிர் நாட்டு அரண்மனைக்குள் விரைந்து செல்கிறார்களாம்; எந்த இலக்கு நோக்கி?

வேழவனின் படைவீரர் அரண்ம னைக்குள்
விரிநீர்போய் மடைதோறும் பாய்வ தைப்போல்
சூழலுற்றார்; பொன்னிருப்புச் சாலைக் குள்ளும்
தொகுசெந்நெற் களஞ்சியத்தும் எவ்விடத்தும்'

இயல்-9

படைவீரர்கள் விரி நீர் போய் மடைதோறும் விரைந்து பாய்வது போல் சென்றார்களாம். ஏன் இவ்வளவு விரைவு? ஏனென்றா கேட்கிறீர்கள்! அகப்பட்டவற்றுள் அதிகமாகச் சுருட்டியவன் என்ற பெருமையை நிலை நாட்டத்தான். இக்கொள்ளை இந்த அளவோடு நின்று விடவில்லையாம். இன்னும் பாடுகின்றார் கவிஞர்.

இடுகாட்டில் நரிக்கூட்டம் உலாவல் போல
எவ்விடத்தும் அரண்மனையில் வேழ நாட்டின்
படைவீரர் உலாவினார்; எலிகள் ஓடிப்
பண்டங்கள் உருட்டுதல் போல் பொருளை எல்லாம்

தடதடென உருட்டினார் அவர வர்கள்
சலிப்பின்றிக் கவர்ந்தார்கள் கலைப்பொ ருள்கள்.
இயல்–16:7

இடுகாட்டின் நரிகள், எலிகள் என்ற உவமையால் வேழ நாட்டு வீரர்களின் கொள்ளைத் திறன் நன்றாகவே வெளிப்படுத்தப் படுகின்றது. பணச்சாலைக்குள் மட்டு மன்று; பண்டங்களை உருட்டுவதிலும் அவர்கள் எவ்வளவு வல்லவர்கள் என்பதை வண்ணப்படம் பிடித்தாற் போலக் கண் முன் காட்டுகின்றார் கவிஞர். அலெக்சாந்தரின் படைவீரர்கள் கூட இப்படித் தான் மன்னன் டேரியசின் அரண்மனைக்குள் உருட்டி யிருப்பார்கள். பாரசீகமாக இருந்தால் என்ன, பழந் தமிழகமாக இருந்தால் என்ன? வலிமை எளிமையை அழிக்கவே செய்யும்; அகப்பட்டதைச் சுருட்டவே நினைக்கும்.

## சொற்குறியீடுகள்:

காப்பியத் தொடக்கத்திலேயே கவிஞர் குறியீட்டு வகை யால் ஒரு செய்தியை நமக்குக் காட்டுகின்றார். கதிர் நாட்டுக்கும் வேழநாட்டுக்கும் இப்பொழுது தொடங்கி யுள்ள போர் எதனால் விளைந்தது என்பதையும் அது எப்படி முடியப் போகிறது என்பதையும் குறியீட்டு வகையால் விளக்கிக் காட்டுவது நம்மை வியப்புறுத்து கின்றது. கதிர்நாடு, வேழநாடு என்ற சொல்லே நல்ல குறியீடாக அமைந்துள்ளது.

கதிர்நாடு என்றால் என்ன பொருள்? கதிர் என்ற சொல்லுக்கு ஒளி என்று ஒருபொருள் இருப்பினும் இங்கே கதிர் என்பதற்கு நெற்கதிர் என்று பொருள் கொண்டு அது செல்வ மிகுதியைக் காட்டும் குறியீட்டுப் பொருளாக வருகின்றது என்று கொள்வதுதான் பொருத்தமானதாகும். உன் விருப்பத்திற்கு ஏற்ப இப்படி எல்லாம் பொருள் கொள்ளவேண்டுமோ என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள். இந்தப் பொருளை நானாக எடுத்துக் கொள்ளவில்லை. பாவேந்தரே எடுத்துக் கொள்ளச் சொல்கிறார். எங்கே சொல்கிறார் என்பீர்கள். இதோ இங்கே இப்படிச் சொல்கின்றார்.



'நன்செய்வாய்ச் செந்நெலெலாம் பொன்மலைபோல்
நனிகுவிக்கும் கதிர்நாடு' 51:2

இப்படிப் பாவேந்தர் கூறுவதனால் தான் கதிர் என்ற சொல் செந்நெற்கதிரை உணர்த்தி வளத்தைக் குறிக்கும் குறியீட்டுச் சொல்லாக நிற்கின்றது என்றேன். இன்னும் காப்பியத்தின் முதற்பாட்டின் முதற்சொல் கூட நம் ஆய்வுக்குரியதாக உள்ளது. 'சீர்மிகுத்த கதிர்நாட்டின் மேலே' என்றுதான் முதற்பாடல் தொடங்குகின்றது. சீர் என்ற சொல்லுக்கு செல்வம், மிகுபுகழ் என்றும் பொருள் உண்டு. கதிர் நாடு சீர்மிகுத்த நாடாம். ஆம் செல்வம் மிகுந்த நாடாம். அதனால் பெரும் புகழைப் பெற்ற நாடாம். கதிர்நாட்டுக்கு அடைமொழியாக வருகின்ற 'சீர் மிகுத்த என்ற சொல்லுக்கு இப்படித்தான் பொருள் கொள்ள முடியும்; வேண்டும். கதிர்நாடு பெற்றிருந்த செல்வமும் அதனால் வந்த மிகுபுகழும் தானே வேழ நாட்டானை வீட்டு முற்றம வரை அழைத்து வந்தது. கதிர்நாட்டின் அழிவுக்கு அதுபெற்ற செல்வமும் சிறப்புமே காரணமாக அமைந்துள்ளது என்பதை வரலாற்று நோக்கில் பாவேந்தர் பாடுகின்றார்.

சரி, இனிவேழநாடு என்ற குறியீட்டைப் பார்ப்போம். கதிர்வளத்தைக் குறிக்குமென்றால் வேழம் வலிமையைக் குறிப்பது தானே இயல்பு. கதிர் என்பது நிலம் பண் படுத்தப்பட்டுப்பின்னர் உருவாக்கப்படுவது. விளைந்த கதிர் பசியைப் போக்கும், பசிபோனால் கலைபிறக்கும். ஆகக்கதிர் என்பது கலை, பண்பாடு நாகரிகங்கள் தோன்றக் காரணமும் ஆகும். ஆனால் வேழம் முரட்டு வலிமையை மட்டுமே குறிக்கும். மென்மை, பண்பாடு என்பன வேழத்திற்குரியதன்று. இங்கேநாம் வேழநாட்டு மன்னனின் செயலிலும் அந்நாட்டு வீரர்கள் செயலிலும் காண்பது என்ன? முரடடுத்தனமான வலிமை ஒன்றைத் தானே! வேழக்காட்டிலே வாழ்வது. இவரும் காட்டுத் தனமான வாழ்க்கையினர். ஆம் காட்டுமிராண்டி வாழ்க்கையினர் என்பதையும் வேழம் என்ற குறியீடு உணர்த்தி நிற்கின்றது. இதனால் தான் முதற்பாடலின் முதல் அடியை இப்படிப் பாடுகின்றார் கவிஞர்:

'சீர்மிகுத்த கதிர் நாட்டின் மேலே அந்தத்
திறல்மிகுத்த வேழநாட் டுப்ப டைகள''

எழுந்தன என்கின்றார். திறல் என்பதன் பொருள் என்ன?வலிமைதானே!வேழம் சாதாரண வேழம் அன்று; வலிமை மிகுந்த வேழம். கதிர் நாடும் சாதாரணக் கதிர் நாடு அன்று; வளம் மிகுந்த கதிர்நாடு. இதுபோதுமே போர் தோன்றியதற்கான காரணத்தைக் காட்ட. இது வரை காட்டிய செய்திகளில்இருந்து நாம் ஒரு முடிவிற்கு வர முடியும். பெரும்பாலான போர்களின் மூலகாரணம் செல்வத்தைக் கவர்வதே என்றும், இதற்கு ஒரு பக்கம் வலிமை-இன்னொரு பக்கம் வளமை என அமைந்து கிடக்கும் அமைப்பு என்பதும் தெளிவாகும், இவ்வுமைப் பும் இவ்வமைப்புமுறையால் போர் எழுவதும் ஒரு மாறா உண்மை என்பதனை உலக வரலாற்றைப் படிப்பவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். உலக வரலாற்றின் கருத்தை உள்வாங்கிக் கொண்டுதான் அதனைத் தமிழக வரலாற்றிலும் காட்ட விழைகின்றார் பாவேந்தர். ஏன்? தமிழக வரலாற்றிலும் அதுதானே எதிரொலிக்கின்றது.

வலிமை உள்ளவன் வெல்வதும்,வளம் உள்ளவன்தோற் பதும் சிலபோது நடக்கலாம். எப்பொழுதும் நடக்கமுடி யாது.வளம் உள்ளவன் வலிமையுள்ளவனாகவும்இருந்து விட்டால்...? இப்படியொரு கேள்வி எழலாம். எப்படி இருந்தால் என்ன? வலிமையுள்ளவன் வளம் உள்ளவ னாகவும் இருந்தால் இரட்டை வலிமையுள்ளவன் ஆகி விடுகின்றான். அப்பொழுது ஒற்றை வலிமையன் தோற் கத்தானே வேண்டும். மேலும் இங்கே நாம் காண வேண்டியது என்ன? வளத்தைக் குறிவைத்துத்தான் வலிமைகள் போரைத் தொடங்குகின்றன. போரின் முடிவில் மிக்க வலிமை குறைந்த வலிமையைத்தோற் கடித்து வளத்தைக் கவர்கின்றது என்ற உண்மையைத் தான்.

இங்கே வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டும் ஒரு பேருண்மையை நாம் கூர்ந்து நோக்குதல் வேண்டும். எந்த நாட்டில் வளம் சிறந்து விளங்குகின்றதோ அந்த நாட்டில் துய்ப்புணர்வு மிகுதியாகிவிடும்.துய்த்தல் பெரு வேட்கையாக மாறுகின்ற பொழுது அதுதன் வலிமை யைச் சிறுகச்சிறுக இழந்துவிடும் என்பதைத் தக்க காரணிகளால் வரலாற்றாய்வாளர்கள் விளக்குகின்றனர். இங்கே ரூசோவின் கருத்து ஒன்றைக் காண்போம்.



## ரூசோ தரும் வரையறை:

'வாழ்க்கைச் சுகங்கள் அதிகமாக அதிகமாக, கலைகள் முழுமையடைய அடைய, ஆடம்பரம் பெருகப் பெருக உண்மையான வீரம் தேய்ந்து போகின்றது'

வாழ்க்கைச் சுகங்கள் எங்கே அதிகரிக்கும்? எங்கே பசி இல்லையோ எங்கே வளம் கொழிக்கின்றதோ அங்கே தான். எங்கே கலை முழுமையடையும்? எங்கே ஓய்வு மிகுதியாகக் கிடைக்கின்றதோ—எங்கே மனம் மென்மைப் பட்டு உள்ளதோ அங்கேதான். எங்கே ஆடம்பரம் வளரும்? எங்கே செல்வமும், கலையும், துய்ப்பும் கை கோர்த்துக் கொள்கின்றனவோ அங்கேதான். ஆக வளம், கலை, சுகம், ஆடம்பரம் என்பன ஏறுமுகமாக வளரும் பொழுதே, உழைப்பு, அஞ்சாமை, வீரம் என்பன இறங்கு முகமாகி விடுகின்றன. இத்தகைய சமுதாயம் உருவத்தில் சமுதாயமாக விளங்கினாலும் உளளீடு இழந்து உளுத்துப்போன மரம்போல் நிற்கவேண்டிய தாகி விடுகின்றது.இத்தகைய சமுதாயத்தில் மனிதனின் போராட்ட உணர்வும் வீரமும் மழுங்கிவிடுகின்றன என் கிறார் ரூசோ.

ஒரு வலிமை மிக்க சமுதாயத்தில் வளம் சேருமானால், கலை செழிக்குமானால் அச் சமுதாயத்தில கொஞ்ச காலம்தான் வீரம் நிலைத்திருக்கும். இது ரூசோவின் தனிப்பட்ட கருத்தில்லை. கிரேக்க, உரோயானிய, சீன வரலாறுகள் எடுத்துக்காட்டும் பாடமும் அதுதான்.

'பாதைகள் எல்லாம் உரோமை நோக்கியே செல் கின்றன'என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப் பழமொழி எப்படி வந்தது? உரோமாபுரியின் அதிகாரச் சிறப்பு, நாகரிக மேம்பாடு, கலை உயர்ச்சி இவை தாம் எல்லா நாடுகளையும் உரோமை நோக்கி வரவழைத்தன. உலக வரலாற்றில் உரோமப் பேரரசின் கீர்த்தி பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டிருப்பதை அறிவீர்கள். இத்தகைய உரோமப் பேரரசு காலமெல் லாம் கீர்த்தி குறையாமல் வாழமுடிந்ததா? முடிய வில்லை. ஏன்? உரோமானியரிடம் துய்ப்பு வெறி, கலை நாட்டம் நாளுக்கு நாள் வளரத்தொடங்கிற்று. பிறகு? பிறகென்ன! வாழ்க்கைச் சுகங்கள், ஆடம்பரங்கள், கலை வளர்ச்சி இவைகளால் உண்மையான வீரம்

தேய்ந்தது. வீரம் வெளியேறிய — உளுத்துப்போன அந்த உரோமானியப் பேரரசை காதியர்கள் (Goths) வாண்டலர்கள், (Wandals) ஊணர்கள் (Huns) என்னும் பெயர்தாங்கிய காட்டுமிராண்டிக் கூட்டத்தார் மிக எளிதாக வீழ்த்தினார்கள். வீழ்த்தியது மட்டுமில்லை; அங்கிருந்த செல்வங்களை எல்லாம் கொள்ளையடித்தார்கள். இதோ நேருவின் உலக சரித்திரம் என்ன கூறுகின்றது என்று பாருங்கள்.

## *உலக சரித்திரம் உரைப்பது:*

'உரோமாபுரியைத் தலைநகராகக் கொண்ட மேற்கு சாம்ராச்சியம் இம்மாறுதலால் விளைந்த அதிர்ச்சியைச் சமாளித்து நெடுங்காலம் நிற்க முடியவில்லை. 'காட்டு மிராண்டிகள்' என்று அது கருதி வந்தவர்களை அதனால் எதிர்த்துப் போரிட முடியவில்லை. காதியர் என்னும் ஒரு செர்மானிய சாதியார் ரோமாபுரியைக் கைப்பற்றிக் கொள்ளையடித்தார்கள். அவர்களுக்குப் பிறகு வாண்டலர், ஊணர் என்னும் சாதியார்கள் படையெடுத்து வந்தனர். இவற்றைத் தாங்கவாற்றாது மேற்கு சாம்ராச்சியம் வீழ்ச்சியுற்றது'

(உலக சரித்திரம் 156, 157. ஓ.வி. அளகேசன்)

உரோமாபுரி மட்டும் தான் இப்படி வீழ்ச்சி பெற்றது என்று நினைக்க வேண்டா. அறிவும் கலையும் நிரம்பி வழிந்த சீனம் கூடக் காட்டு மிராண்டியான செங்கிஸ்கானால் அடித்து நொறுக்கப்பட்டது. அன்றைய இந்தியா முழுவதும் பரவியிருந்த நாகரிக மிக்க திராவிடர்களை மத்திய ஆசியாவிலிருந்து வந்த காட்டு மிராண்டிகளான ஆரியர்கள் அழித்ததையும் நாம் உலக சரித்திரத்தில் காண முடிகின்றது. கலைத் தேர்ச்சியும், அறிவு நாட்டமும் மிக்க கிரேக்கர்களும் கூடக் காட்டு மிராண்டிக் கூட்டத்தார் முன் ஈடு கொடுக்க முடியாமல் சிதறிப் போன காட்சியையும் வரலாறு காட்டிக் கொண்டு தான் நிற்கின்றது. இதிலிருந்து நாம் பெறும் படிப்பினை என்ன? வீரம் மிக்க மக்களேயாயினும் அறிவு, கலை, வாழ்க்கைச் சுகம், ஆடம்பரம் போன்றவற்றின் மீது கொண்ட வேட்கையால் வீரத்தை இழந்து, பண்டைப் பெருமைகள் குலைந்து, சிறுமையுறவே செய்வர். இது காலம் விதித்த கட்டளை என்பதைத் தான் படிப்பினை



யாகப் பெறுகிறோம். இதோ நேரு பெருமகனார் கூறும் ஒரு கருத்து:

'சாம்ராச்சியத் தலைநகரான ரோமாபுரி வீழ்ச்சியடைந்தவுடன் அதன் ஆடம்பரமும் வெளிப்பகட்டும் அஸ்திவாரமில்லாத நாகரிகமும் அதே கணத்தில் மறைந்து விட்டன. வேர் உலர்ந்து போன பிறகு அவை எவ்வாறு நிற்க முடியும்? ஆகவே மனித சாதி பின்னோக்கிச் செல்லும் விசித்திரத்தை நாம் கண் கூடாகக் காணுகின்றோம். 'இந்தியாவிலும் எகிப்திலும், சீனாவிலும், கிரீசிலும், ரோமிலும் வேறு இடங்களிலும் இது நிகழ்கின்றது. இடைவிடாத உழைப்பின் பேரில் அறிவையும் அனுபவத்தையும் சம்பாதித்து, ஒரு கலைப் பண்பையும் நாகரிகத்தையும் உருவாக்கிய பிறகு அவற்றின் போக்கு தடைப்படுகின்றது. முற்போக்கு தடைப்படுவது மட்டுமின்றிப் பிற்போக்கும் ஆரம்பமாகின்றது'.

நேரு, உலக சரித்திரம் பக்கம் 241

நாகரிகமிக்க சமுதாயங்கள் நாசமான வரலாற்றை நேரு பெருமகனார் அருமையாக எடுத்துக் காட்டுகின்றார். அந்த வீழ்ச்சி உலக முழுவதும் காணப்படுகின்றது என்பதையும் காட்டுகின்றார். அந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம்? கலை, நாகரிகப் பண்பாட்டுச் சிறப்புக்கள்தாம் என்றும் அடித்துக் கூறுகின்றார். அதுமட்டுமா? இந்த அழிவை எல்லாம் செய்பவர்கள் வலிமை மிக்க காட்டு மிராண்டிக் கூட்டத்தாரே என்றும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். ஆக வலிமையின் கொடிய கரங்களில் இருந்து வளம் மிகுந்த நாடுகள் தம்மைக் காத்துக் கொள்ள முடிவதில்லை. இதுதான் முடிவற்ற போராட்டமாகத் தொடர்ந்து கொண்டே வருகின்றது என்பதை நேரு மிக அழகாக நமக்கு விளக்குகின்றார்.

இன்றும் அதுதான் நிலையா? ஆம்: இன்றும் அதுதான் நிலை. படைக்கருவிகள்தாம் மாறியிருக்கின்றன. ஆனால் கைகள் — ஆம் வலிமையின் கைகள் எங்கே வளம் இருக்கின்றதோ அந்த இடங்களை நோக்கித்தான் நீளுகின்றன. வாள் துப்பாக்கியாகமாறி—துப்பாக்கி ஏவுகணைஎன்றெல்லாம் வடிவெடுத்து இன்றுபொருளாதார நெருக்கடி,

ஒப்பந்தம், உதவிகள் என்று தம்மை உருமாற்றிக்கொண்டிருக்கின்றன. நீண்டதூரம் சுற்றிவளைப்பானேன். உலகின் வளர்ந்த நாடுகள் என்று சொல்கிறார்களே அந்நாடுகள்தாம் வலிமை மிகுந்த நாடுகள். இவை என்ன செய்கின்றன? உலகவங்கி, ஐ.நா.அமைப்பு போன்றவற்றை வயப்படுத்திக்கொண்டு வளரும் நாடுகளையும் வளரமாட்டாமல் தத்தளிக்கும் நாடுகளையும் நாகரிகமாகக் கொள்ளையடிக்கின்றன. 'காட்' ஒப்பந்தம், 'டங்கல்' திட்டம் என்பன எல்லாம் என்ன? வலிமைமிக்க நாடுகளின் ஆயுதங்கள் தானே! அன்று வலிமைமிக்கவர்களின் கையிலிருந்த வாளுக்கு அடிமையானவர்கள் இன்று வலிமையாளர்களின் கையில் உள்ள ஒப்பந்தங்கள், திட்டங்களுக்கு அடிமையாகின்றார்கள். ஆயுதங்கள்தாம் மாறியுள்ளன. நிகழ்ச்சிகள் முன்போலவேதான் நடக்கின்றன. ஆக வலிமை எளிமையை அடிமைகொண்டு வளத்தைச் சுரண்டுதல் என்பதுதான் என்றும் மாறா மெய்ம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனைத்தான் உலகப்பேரரசுகளின் வீழ்ச்சிக் காப்பியங்களில் எல்லாம் முடிவுரையாக நாம் சந்திக்கின்றோம்.

'திறல் மிகுத்த வேழன்' என்ற குறியீட்டுத்தொடரால் வலிமை வெல்லும் என்பதையும் 'சீர் மிகுத்த கதிர்நாடு' என்ற குறியீட்டுத் தொடரால் வளநாடு கொள்ளையடிக்கக் காரணமாகின்றது என்பதையும் முன்னரே கண்டோம். இப்பொழுது கதிர் நாடு தன்னுடைய வளத்தினாலேயே எப்படி வலிமை இழந்து நின்றது? வளமே எப்படி அதன் வீழ்ச்சிக்குக்காரணம் ஆகின்றது என்பதையும் காண வேண்டும். அப்பொழுதுதானே வளம்-வாழ்க்கைச் சுகம்-ஆடம்பரம்-வீரம்தேய்தல்-இறுதியில் வீழ்ச்சி என்ற உலக வரலாற்றின் போக்கிற்கு ஒத்திசைவாக இக்காப்பியம் விளங்குகின்றது என்பதையும், இத்தகைய வரலாற்று உணர்வோடுதான் இக்காப்பியம் படைக்கப்பட்டது என்பதையும் நாம் காண முடியும்.

கதிரைவேல் மன்னன் போர்க்கலையில் வல்லவன்தான். வலிமைமிக்க வேழனோடு அவன் நடத்தும் தனிப்போரில் வேழன் வெல்ல முடியாமையே அவனுடைய வலிமையையும் போர்த்திறத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆம். அவன் திறமான போர் வீரன்



தான்; ஆனால் அவன் ஒரு திறமையான அரசனா என்றால் இல்லை என்ற பதில் தாமதமாகக்கூட இல்லை, விரைவாகவே கிடைக்கின்றது.

## கதிரைவேலனின் ஆட்சித்திறமும், கலைவேட்கையும்:

வேழமன்னன் படைநடத்தி வருகின்றான். இதனை எப்பொழுது கதிர்நாட்டார் அறிந்து கொண்டனர்? கதிர்நாட்டுக்கு ஒரு காத தூரத்தில் படைவந்தபோதுதான் அறிந்து கொண்டனர். ஒற்றர்கள் அப்பொழுதுதான் அறிந்து வந்து கூறுகின்றார்கள். அறிந்ததும் அறிவிக்க (அரசனுக்கு) ஓடி வருகிறார்கள். இப்படியொரு அரசு இருக்கலாமா? சிலப்பதிகாரத்தில் ஒரு செய்தி. வஞ்சிமாநகரத்தில் எல்லாநாட்டு ஒற்றர்களும் சுற்றித்திரிகின்றார்களாம். வடநாட்டுச் செலவு பற்றி வடநாட்டு மன்னர்களுக்குத் தனித்தனியே தெரிவிககவேண்டா. வஞ்சியில் பறையறைவித்தால் போதும், ஒற்றர்கள் அச்செய்தியைத் தத்தம் நாடுகட்குத் தெரிவித்து விடுவர் என்று சிலம்பில் கூறப்படுகின்றது. வஞ்சியில் பிறநாட்டு ஒற்றர்கள் சுற்றித்திரிந்து செய்தி திரட்டியது போல வேழனின் தலைநகரத்தில் கதிர்நாட்டின் ஒற்றர்கள் ஏன்சுற்றித் திரிந்து செய்திதிரட்டவில்லை? மன்னன் அதில் நாட்டம் செலுத்தவில்லை; ஆகவே கதிர்தாட்டு ஒற்றர்கள் அங்குச் செல்லவில்லை. இது மன்னனின் முதற்குறை.

வேழநாட்டு அரசனிடம் கதிரைவேல் மன்னனின் மைத்துனன் நரிக்கண்ணன் படைத்தலைவனாக இருக்கின்றான். கதிர்நாட்டின் பாதுகாப்பைத்தன் மைத்துனன் காப்பாற்றுவான் என்றும், வேழன்படைகொண்டு வர எண்ணினால் நரிக்கண்ணன் நமக்கு முன்கூட்டியே தெரிவித்து விடுவான் என்றும் கதிர்வேல் மன்னன் நம்பிக்கொண்டிருந்தானாம். சாதாரண மனிதர்களாக இருந்தால் மைத்துனன் காப்பாற்றுவான் என்பது சரிதான். ஆனால் மன்னர் பரம்பரையில் இப்படி நம்ப முடியுமா? சாசகான் தன்மகனையே (ஔரங்கசீப்பு) நம்பமுடியவில்லையே! நம்பியதனால் தானே இறுதிவரை சிறையிலே கிடந்து செத்தொழிந்தான். நலங்கிள்ளிகூடத் தன்மக்களை நம்பமுடியவில்லையே! அம்

மக்கள் தம் தந்தையின் மீதே படைகொண்டு செல்ல வில்லையா? அரசபரம்பரையில் மகனையே நம்பமுடியாது என்றால் மைத்துனனை நம்பிக்கிடந்த கதிரை வேல் மன்னனைச் சிறந்த மன்னன்என்று கூறமுடியுமா? பகைவர் படை கோட்டைக் கதவைத் தட்டிக்கொண்டு நிற்கின்றது. படைத்தலைவன் பதறிப்போய் மன்னனிடம் கூறுகின்றான். மன்னன் தன் மனைவியை நோக்கி என்ன பேசுகின்றான் பாருங்கள்.

என்கண்ணுக் கினியாளே! அனபே உன்றன்,
எழில்அண்ணன் நரிக்கண்ணன் வேழ நாட்டில்
வன்மையுறு படைத்தலைவ னாயி ருந்தும்
வேழர்படை வருவதை ஏன் என்னி டத்தில்
முன்னமே சொல்லவில்லை; வேழ நாட்டான்
முழுதும்நமை ஆதரிப்ப தாக அன்றோ
சொன்னான்; இந் நாட்டினிலே நம்ப டைகள்
தோதில்லா திருக்கையிலே நமைஎ திர்த்தார்.

3:2

இது அரசனின் ஓலம் மட்டுமில்லை; ஒப்புதல் வாக்கு மூலமும் கூட. மன்னன் மைத்துனனை நம்பியிருந்ததே முதற்பிழை; அடுத்தபடியாக வேழன் கதிர்நாட்டு மன்னனை ஆதரிப்பதாக ஒரு பொய் வேறு சொல்லி யிருக்கின்றான். இதனை ஆராய்ந்து காணாது அப்படியே நம்பியது இரண்டாவது பிழை. நாட்டில் மன்னனின் ஆணைச் சக்கரமும் படைகளும் எப் பொழுதுமே உறங்கக்கூடாது என்பார்கள். இங்கே மன்னனின் படை எப்படி இருக்கிறது? மன்னனே கூறு கின்றான்; 'தோதில்லாமல்' இருக்கின்றதாம். எதற்குத் தோதில்லாமல் இருக்கின்றது? போரிடுவதற்குத்தான். போரிடத் தோதில்லாமல் ஒரு படையிருந்தால் அது நூலாம் படையாக இருக்கலாம்; போர்ப்படையாக இருக்கமுடியாது. அதுசரி; அப்படைகளைத் தோதில் லாத நிலையில் வைத்திருந்தது யார் பிழை?

சீனாவை இந்தியா நம்பிக்கெட்டது. நம்படை தோதில்லாதிருக்கும் நேரம் பார்த்துத்தான் சீனா படை எடுத்தது. விளைவு? நாம் பன்னிரண்டாயிரம் சதுர மைல்களைப் பறிகொடுத்தோம் சீனாவிடம். நாம் தோதாக இருந்திருந்தால்...? இந்தியாவின் நிலையும்



கதிர் நாட்டின் நிலையும் ஒன்று போலவே இருக்கின்றது இல்லையா? தோதில்லை என்றது மன்னன் கதிரை வேலனின் மூன்றாவதுபிழை. இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? மன்னன் ஆற்றல் உள்ளவன்தான். அந்த ஆற்றல் முறைப்படி செயல் படுத்தப்படாமல் முடக்கப்பட்டுள்ளது. அதனை முடக்கிப் போட்டது எது? மன்னனின் கலை வேட்கைதான்.

வேழ நாட்டுப் படைகள் வீட்டுக் கதவிலே முட்டிக் கொண்டு நிற்கின்றன. படைத் தலைவன் பதறிப் போய் ஓடி வருகின்றான். அந்நேரத்தில் மன்னன் எங்கே இருக்கின்றான் தெரியுமா? போர் முகத்திலா? ஆயுதக் கிடங்கிலா; இல்லை. இதோ கவிஞன் பாடுகின்றான்.

கதிர் நாட்டின் கதிரைவேல் மன்னன் தானும்
காதல்மனை யாம்கண்ணுக் கினியாள் தாமும்
**சதிராடு கூடத்தில் தவிச மர்ந்து**
**தமிழ்ப்பூவால் இசைப்பாக்கள் புனைந்**
**திருந்தார்;**
அதிர்படைகள் கூட்டிவந்தான் வேழ நாட்டான்
அதோ ஒருகா தத்திலென்றான் படைத் தலைவன்.

1:3

அரசனும் அரசியும் நடன மண்டபத்திலே அமர்ந்து இசைப்பாக்கள் புனைந்து பாடி மகிழ்கிறார்கள். கவிஞன் அதிர்படைகள் என்கின்றான், வேழநாட்டுப் படைகளை. அந்த அதிர்ச்சியிலும் கூட அலுங்காமல் இசைப்பாக்கள் புனைந்திருந்தனர் என்றால் அவர்களின் கலை வேட்கையை என்னென்பது? உரோம் பற்றி எரிந்த போது நீரோ பிடில் வாசித்தான்; கதிர்வேல் மன்னன் இசைப்பாக்கள் புனைந்திருந்தான். இருவர் நிலையும் ஒன்று தான் என்றால் உரோமுக்குக் கிடைத்த பரிசு தானே கதிர்நாட்டுக்கும் கிடைக்கும்! மன்னன் நிலை இப்படி என்றால் அரசியின் நிலை எப்படி? இனிக் காண்போம்.

'நரிக்கண்ணன் என்னை ஏமாற்றி விட்டான். என் நாட்டை அபகரிக்கத் திட்டமிட்டு விட்டான். அவனே இனி எனக்குப் பகைவன். நான் என் மக்கட்கு உரிய கடமையை ஆற்ற வேண்டும் என்றெல்லாம் கொட்டித்

தீர்க்கின்றான் மன்னன். அப்பொழுது சினங்கொண்ட அரசி பேசத் தொடங்குகின்றாள்.

'முன்னொரு நாள் என் அண்ணன் இங்கு வந்தான்
ஏதேதோ மொழிந்திட்டான் என்னிடத்தில்
அன்னவற்றின் பொருளை இந்நாள் அறிய லானேன்;
அழகிய என் திருநாட்டை அவன்ப றிக்கத்
திட்டமிட்டான்' 3:4,5

நரிக்கண்ணன் தன் வஞ்சனை எண்ணத்தை ஓரளவு தன் தங்கையிடம் இலை மறை காயாக வெளிப்படுத்தியும் இருக்கின்றான். ஆனால் அவளோ அதைப் பற்றிச் சிறிதும் ஐயப்படவே இல்லையாம். இன்றைக்குத் துடிக்கின்றாள். தன் அண்ணனைப் பழி வாங்குவேன் என்றெல்லாம் சூளுரைக்கின்றாள். எல்லாம் சரிதான்; அவன் வெளிப்படுத்திய செய்தியை அவள் ஏன் தன் மனத்தில் நிறுத்தவில்லை; மன்னனிடம் ஏன் வெளிப் படுத்தவில்லை? நரிக்கண்ணன் உரைத்த அச்செய்தி யைக் காதில் வாங்கியிருக்கின்றாளே தவிரக் கருத்தில் இருத்திக் கொள்ளவில்லை என்று தெரிகின்றது. வஞ்சகன் உள்ளத்தை அவளேயறியவில்லை என்றால் அரசனிடம் எப்படிக் கூறுவாள்? அவள் ஏன் நரிக் கண்ணன் மீது ஐயப்படவில்லை? சூதாடிக் கொண்டிருக் கின்ற ஒருவனிடம் சென்று ஒரு செய்தியைச் சொல்லிப் பாருங்கள். அவன் காதிலே அச்செய்தி விழும். ஆனால் கவனத்திலே கொள்ளப்படமாட்டாது. ஏன்? அவன் கவனத்தை அச்செய்தி ஈர்க்கவில்லை. அவன் கவனம் சூதாட்டத்திலே மொய்த்து நின்றதுதான் காரணம். இங்கே அரசி ஏன் கவனமின்றி இருக்கின் றாள்? அவள் கவனத்தை வேறொன்று கவர்ந்திருக்க வேண்டும். அது என்னவாக இருக்கக்கூடும்? கவிஞன் காட்டுவது என்ன? அவள் கலை நாட்டம் உடையவள் என்பதுதான். அவளுடைய கலை வேட்கை கதிர் நாட்டின் பாதுகாப்புக்கு வரவிருந்த கேட்டை அறிந்து கொள்ளும் வாய்ப்பிருந்தும் அறியவிடாமல் தடுத்து விட்டது. பொறுப்பற்ற அரசன்; அவனுக்கேற்ற பொறுப்பற்ற மனைவி. என்ன பொருத்தம்? இவர் களுடைய பொறுப்பற்ற தன்மைக்குப் பின்புலமாக இருப்பது எது? கலை! கலை! கலைதானே! அரசன் அரசி நிலை இது என்றால் அவர்களின் ஒரே மகள்



அன்னம் எங்கே இருக்கின்றாள்? என்ன செய்து கொண் டிருக்கின்றாள்? அதையும் பார்த்துவிடுவோம்.

கதிரைவேல் மன்னன் வாளெடுத்துப் போர்புரியப் போகின்றான். அரசியோ அண்ணனைப் பழிவாங்கு வேன் என்று தேரேறிச் செல்கின்றாள். இந்நிலையில் அன்னம் என்ன செய்கின்றாள். இதோ கவிஞன் கூறு கிறான்.

'மன்னவன்தான் பெற்றெடுத்த அன்னம் என்பாள்
அணிமலர்ச்சோ லைவிட்டே அரண்ம னைக்குள்
அடிவைத்தாள் நொடிப்பொழுதில் நிலைமை கண்டாள்'
3:7

பகைவர்கள் கதிர் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருந்த போது அன்னம் அழகிய மலர்ச் சோலையிலே அமர்ந்து இயற்கை அழகையும் இனிய மலர்களின் மணத்தையும் நுகர்ந்து கொண்டிருக்கின்றாள் என்று காட்டுகின்றான் கவிஞன். ஏன் இப்படிக் காட்டுகின்றான்? அரசி, அரசன், மகள் அனைவருமே சுவை உணர்ச்சியில் ஊறித் திளைத் தவர்கள் என்பதை வெளிப்படுத்தத்தான். கவிஞன் நினைத்திருந்தால் வேறு வேறு இடங்களில் அவர்கள் இருந்ததாகக் காட்டிவிட முடியும். ஆனால் அவன் குறிக் கோளோடு அல்லவா காப்பியத்தைப் படைக்கின்றான். கலையுணர்வின் முதிர்ச்சி சமுதாயத்தின் வீழ்ச்சியாக எப்படி உருமாற்றம் அடைகின்றது என்பதைக் காட்டும் கட்டப்பாட்டையல்லவா அவன் மேற்கொண்டிருக்கின் றான். அதனால்தான் அன்னத்தை அணிமலர்ச் சோலை யிலிருந்து வருபவளாகக் காட்டுகின்றான்; அரசன் அரசியை சதிராடு கூடத்திலே தமிழ்ப்பாக்கள் புனைய வைக்கின்றான்.

இம்மூவரும் வீரம் உள்ளவர்களாகவேவிளங்குகின்றனர். ஆனால் வலிமை இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். வெறும் வீரம் வெற்றியைத் தரமாட்டாதே! ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு வகையில் இந்த வலிமைக் குறை பாடு இருக்கின்றது. சுவையுணர்ச்சியும் வலிமைத் தாழ்ச்சியும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்பதைக் கவிஞன் அழகாக எடுத்துக்காட்டுகின்றான். கதிரைவேல் மன்னனின் ஆட்சியில் கலைகள் உயசிய

இடத்தில் இருந்தன என்றும், கலையாராய்ச்சிகள் சிறப்பாக நடந்தன என்றும் காப்பியம் போகிற போக்கிலேயே கவிஞன் சுட்டிக்காட்டி விடுகின்றான். அங்கே எல்லாம் அவன் கலைபற்றிய பேச வேண்டிய இன்றியமையாமை கூட இல்லை. இருந்தும் நாட்டின் கலையாதிக்கத்தை வெளிப்படுத்தியே தீர வேண்டும் என்பதுபோல அவன் வெளிப்படுத்துகிறான் என்றால் அதில் வேறு ஏதோ ஒரு பொருள் இருக்கின்றது என்பதை நாம் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

அரண்மனைக்குள் இருந்து மாறுவேடத்திலிருந்த வீரப்பன் வெளியேறும் பொழுது மாறுவேடத்திலிருக்கும் ஆத்தா அவனைப் பின் தொடருகின்றாள். அவன் ஓட அவள் துரத்த என்று சென்று கொண்டிருக்கின்றார்கள். இதோ கவிஞன் கூறுகின்றான்.

> 'அரசநெடுந் தெருநீங்கிப் பல்கலைகள்
> ஆய்கூடம்......நீங்கி' (37:1)

ஓடினார்களாம்.

அரச நெடுந்தெருவை ஒட்டி அமைந்திருந்தது எது? பல்கலைகள் ஆய்கூடந்தான். அரண்மனையும் கலை ஆய்கூடமும் எவ்வளவு அருகருகே இருந்தன என்பதைக் கூறுமுகத்தான் கவிஞன் சொல்ல நினைப்பது என்ன? அரசகுடும்பத்திற்கும் கலைகளுக்கும் இருந்த நெருக்கத்தையும் இறுக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நினைப்புத்தான். இன்னொரு செய்தியையும் பார்ப்போம்.

பேழையைத்தேடும் நரிக்கண்ணன் கூட்டத்தார் எல்லா இடத்தையும் தோண்டிப் பார்த்துவிட்டார்கள். அவ்வாறு தோண்டிப் பார்த்த இடங்களின் பட்டியலில் வருவது இது.

> ஈடற்ற கலைப் பொருள்கள் இருக்கும் மன்றம்
> எண்ணற்ற ஆய்கூடம்' 56:

கதிர்நாட்டின் கலைச்செழிப்பைத் தேவையற்ற இடத்தில் கூடக் கவிஞன் எடுத்துக்காட்டுவதன் நோக்கம் என்ன? இக்கலையார்வம் தான் உண்மையான வீரத்தை உருக்குலைத்தது என்ற உண்மையை எடுத்துக்காட்டத் தானே!



அரசி அண்ணனொடு போர் செய்யத்தேர் ஏறுகின்றாள். (தேர்ஏறினாள் 'எரியும் கண்ணாள்' 3:6) அரசன் எப்படிப் போருக்குப் புறப்படுகின்றான்? ('தணல்சிந்தும் விழியாலே நாற்புறத்தும் தமிழ்மறவர் தமைஏவி' 3:7) பகைவர் வந்ததை அறிந்த அன்னம் எப்படி இருக்கின்றாள்? (கிளியுதடுகனல்சிந்தும்துடிக்கும்அஞ்சும்' 4:1) பகைவரை எண்ணியவுடன் மன்னன் விழிகள்நெருப்பைச் சிந்துகின்றன. அரசிக்கோ நெருப்பு கண்ணிலேயே எரிகின்றதாம். அன்னத்தின் கிளிஉதட்டிலும் அனல் பறக்கின்றதாம். மன்னன் முதல் மகள்வரை நெருப்பாகத் தான் நிற்கிறார்கள். ஆனால் அந்த நெருப்பு பகைவரைச் சுட்டெரிக்க வில்லை என்பதையும், பகைவர் வலிமை, வஞ்சனைகளின் முன் நெருப்பே அவிந்து போகிறது என்பதையும் காப்பியம்நன்றாகவே எடுத்துக் காட்டுகின்றது. என்ன இதன்பொருள்? கலையுணர்ச்சி எல்லை கடந்து பெருகும்போது வலிமை குன்றும், வீரம் தேயும் என்ற ரூசோவின் கருத்துத்தானே? மன்னனின் கலையுணர்ச்சி தகுதியற்றவரை எல்லாம் நம்ப வைக்கின்றது. தக்கனவற்றையெல்லாம் மறக்க வைக்கின்றது.

மற்றொரு நோக்கில் நாம் காப்பியத்தை ஆராய்ந்தால் மன்னனின் ஆட்சித்திறமின்மையை நன்றாகவே கண்டு கொள்ள முடிகின்றது. சமுதாயம் குறைகளின் கொள் கலனாக விளங்குகின்றது என்றால் நல்ல–திறமையான மன்னனால் நாடு ஆளப்படவில்லை என்பதுதான் பொருள். கதிரைவேல் மன்னனின் ஆட்சியும் ஆளுமையும் குலைந்து போய்க் கிடந்ததனை இன்னும் ஒரு சான்று விளக்கி நிற்கின்றது. வேழநாட்டுப்படைகள் கதிர் நாட்டுக்குள்ளே வந்துவிட்டார்கள். கதிர்நாட்டு வீரர்கள் எதிர்த்து நிற்கின்றார்கள். என்றாலும் பின் வாங்குவது (கதிர் நாட்டுப்படைகள்) என்பது தவிர்க்க முடியாதது ஆகி விடுகின்றது என்கின்றான்கவிஞன். ஏன் பின்வாங்கும் நிலை? இதோ கவிஞன் கூறுகின்றான்.

> 'என் செய்வார் கதிர்நாட்டார்? வேழவர்க்கோ
> இரும்படைகள் அணைகடந்த வெள்ளத் தைப் போல்
> பின்னுதவி செய்தனமேல் வந்து வந்து'
>
> 5:3

வேழநாட்டான் வெளிநாட்டிலிருந்து வருகின்றான். கதிர்நாட்டானோ உள்நாட்டிலே நின்று—தன்சொந்த

மண்ணிலே நின்று போராடுகின்றான். வேழன் அடிமை கொள்ளத்தான் போராடுகின்றான். கதிர்நாட்டானோ உரிமைக்காகப் போராடுகின்றான். மேலும் வேழ நாட்டான் இன்னும் படைதேவை என்றால் வேழ நாட்டிலிருந்துதான் கொண்டுவர வேண்டும். கதிர் நாட்டானோ உள்நாட்டில் உள்ள இளைஞர்களைத் திரட்டிவிடமுடியும். அதுவும் உடனே காலம் தாழ்த் தாமல் திரட்டிவிடமுடியும். இருந்தும் வேழநாட்டானுக் குப் படைகள் வெளிநாட்டில் இருந்துகூட வேகமாக வந்து சேர்கின்றன. கதிர்நாட்டானுக்கு உள்நாட்டிலே கூட இளைஞர்கள் படை வேகமாகத் திரளவில்லை. ஏன் திரளவில்லை? இளைஞர்களே கதிர்நாட்டில் இல்லையா? இருந்தார்கள். வேழனை எதிர்த்துப் போராட முன் வர வில்லை என்று தெரிகின்றது. முன்வரவில்லை என்றால் ஆட்சியின் மீது மக்களுக்கு வெறுப்பு இருந்திருக்க வேண்டும். வேழனிடம் அடிமையானால் கூடப்பரவா யில்லை. கதிரைவேல் மன்னனின் ஆட்சி காப்பாற்றப் படவேண்டிய ஆட்சியில்லை என்ற கருத்து மக்களுக்கு இருந்திருக்கும் போலும். இவ்வெறுப்புதான் மக்களைத் திரளவிடாமல் தடுக்கின்றதோ என்று எண்ணுமாறு நிகழ்ச்சிகளை அமைத்துக் காட்டுகின்றான் கவிஞன். கவிஞன் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவது இதுதான் என்று கொள்ள வேண்டியுள்ளது.

கதிரைவேல் மன்னன் வாட்போரில் வல்லவன்தான். ஆனால் ஆட்சிமுறையில் வல்லவனல்லன் என்பதைத் தானே இது எடுத்துக்காட்டுகின்றது. ஆகக் கதிரைவேல் மன்னன் மக்களின் நம்பிக்கையை இழந்தவனே என்ப தையும் இந்நம்பிக்கை இழப்புக்கு அவனுடைய எல்லை யற்ற கலைப்பித்தே காரணம் என்பதையும் மிகுந்த கலைநயத்தோடு வெளிப்படுத்துகின்றான் கவிஞன். இது மட்டுமன்று, நாட்டில் சமூகத் தீங்குகள் மலிந்து கிடப்ப தாகவும் காட்டுகின்றான். வீரப்பனும் அவனைச் சார்ந்தோரும் இக்காப்பியத்தில் பெறும் இடம் குறிப் பிடத்தக்க ஒன்று. சமுதாய அவலங்களின் பிழிவாகவே இவ்வியல்கள் விளங்குகின்றன.

## *திருடர் பற்றிய ஒரு தீர்ப்பு:*

காப்பியத் தொடக்கத்தில் வீரப்பன் திருட்டு எண்ணம்



கொண்டவனாகவே சித்திரிக்கப்படுகின்றான். ஆனால் காலப்போக்கில் அவன் திருடுவதை விட்டுவிட்டது போலத் தோன்றுகின்றது. அவன் தன் மனைவி ஆத்தாவை விட்டுப்பிரியத் திருட்டுத் தொழில்தான் காரணமாக இருந்தது என்பதைக் காப்பியம் அழுத்த மாகவே தெரிவிக்கின்றது. ஆனால் ஆத்தா, வேலன் ஆகியோரைப் பிரிந்த துயரமும், அதனால் விளைந்த தனிமையும் வீரப்பனைப் பெருமளவிற்குத் திருத்தியிருப்ப தை நாம் உய்த்துணர்ந்து கொள்ள முடிகின்றது. இக் காப்பியத்துள் எந்த இடத்திலும் வீரப்பன் நேரிடையாகத் திருடிய செய்தி கூறப்படவில்லை என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டுகிறேன். பாண்டியன் பரிசு பேழையைக் கூட வீரப்பன் திருடவில்லை. நரிக்கண்ணன் கொடுத்ததைத்தான் அவன் வாங்கிக் கொண்டு செல் கின்றான். மேலும் காப்பியத்தின் இறுதியில் கதிர்நாட் டைப் பற்றியிருக்கும் தீமைகளை அகற்றுவதிலும், பாண்டியன் பரிசை மீட்டுத் தருவதிலும், மக்களின் நல் வாழ்வை விரும்பிச் செயலாற்றுவதிலும் வீரப்பன் தன் கூட்டத்துடன் ஈடுபடுவதைக் கூர்ந்து நோக்கினால் நாம் ஓர் உண்மையைக் கண்டுகொள்ள முடியும். என்ன உண்மை அது?

‘திருடர்கள் தாமே விரும்பித் திருடர்கள் ஆனவர்கள் அல்லர். சமூகத்தின் உயர் நிலையில் இருப்பவர்களின் தன்னலத்தால் உருவாக்கப்பட்டவர்களே அவர்கள்’ என்ற உண்மைதான் அது. சமூகம் ஏன் திருடர்களை உருவாக்குகின்றது? அரசுகளின் கையாலாகாத் தனத் தினால்தான் திருடர்கள் உருவாக்கப்படுகின்றார்கள். அரசுகள் மக்கள் நலம் பேணலை மட்டுமே கவனமாகக் கொண்டிருந்தால் ஆடம்பரத்தையும் சுகவாழ்வையும் விட்டொழித்திருந்தால் சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தியிருந்தால் திருடர்களே தோன்றியிருக்க மாட்டார்கள். இதைத்தான் பாவேந்தர் திருடர்கள் பற்றிய பகுதியிலே தெளிவுபடுத்துகின்றார்.

வீரப்பன் நரிக்கண்ணன் கொடுத்த பாண்டியன் பரிசு பேழையைக் கொண்டு வந்தபின் அதனைத் தன் தோழர்களிடம் காட்டுகின்றான். அப்போது ‘‘நரிக் கண்ணன் தன்னுடைய ஆள் என்று என்னைக் கருதி

'இப்பேழையைத் தேரோட்டியிடம் சேர்ப்பித்து விடு' என்று கூறினான். நான் எடுத்து வந்தேன்; இதனைப் பாருங்கள் என்று காட்டுகின்றான். இங்கே வீரப்பனும் அவன்றன் தோழர்களும் பேசிக் கொள்ளும் பேச்சு நம்முடைய கவனத்திற்கு உரியது. இது திருடர்கள் பற்றிய பாவேந்தரின் கருத்தைத் தெளிவு படுத்துவது. வீரப்பன் பேழையைக் காட்டியதும் ஒருவன் சிரிக்கின்றான். சிரித்தபடியே அவன் கூறும் கருத்து சிந்தித்தற்குரியது'

'சிரித்திட்ட திருடர்களில் ஒருவன் சொல்வான்
திருடர்களைக் குறைவாகச் சொல்வார் மக்கள்
இருக்கின்ற பேழையினைத் தேடித் தூக்கி
எடுத்துப்போ என்றானே அவனை யாரும்
ஒரு பேச்சும் பேசார்கள்; சும்மா நின்ற
உம்மையவன் திருடனென்று சொன்னான் அன்றோ!
பொருளாளி திருடர்களை விளைவிக் கின்றான்
பொதுவுடைமை யோன்திருட்டைக் களைவிக்
கின்றான்'
17:2

கதிர் நாட்டு மன்னனுக்கு உரிய பேழையை நரிக்கண்ணன் அரண்மனைக்குள் புகுந்து தேடி எடுத்த போது அவனை யாரும் திருடன் என்று சொல்லவில்லை. ஆனால் நரிக்கண்ணன் தந்த பேழை குப்பன் என்னும் தேரோட்டியிடம் சேரவில்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் நரிக்கண்ணன் என்ன சொல்கின்றான். 'ஊனமில்லா நம் மறவன் போலேயன்றோ உடையுடுத்து நின்றிருந்தான்; ஏய்த்தான் போலும்' என்கின்றான். வீரப்பன் ஏய்த்து விட்டானாம். நரிக்கண்ணன் வீரப்பனைத் திருடன் என்கின்றான். அது சரி. நரிக்கண்ணன் யார்? கதிர்நாட்டுக்குரிய பாண்டியன் பரிசு பேழையை யாருமறியாமல் திருடியவன் தானே! இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? எவன் திருடனோ- உண்மைத்திருடனோ— பெருந்திருடனோ அவன்தான் மற்றவனைப் பார்த்து மிக வேகமாகத் திருடன் என்று கூறுகின்றான் என்பது தான்.

## முப்பெரும் திருடர்கள்:

ஒரு சமுதாயம் எப்படி எல்லாம் திருடர்களை உருவாக்கு



கின்றது என்பதனை இன்னும் தெளிவாக விளக்குகின்றார் பாவேந்தர்.

'வேண்டும் என்றே
பொன்னையோ காசையோ நாமெ டுத்துப்
போம்படிசெய் கின்றார்கள்; அதன்பின் நம்மை
வன்சிறையில் அடைப்பார்கள்; திருட ரென்று
மக்களிடம் சொல்வார்கள்; இவைஏன் என்றால்
மன்னர்பழம் புலவர்வணி கர்கட் கெல்லாம்
வரும்பெயரை நமக்காக்கும் முயற்சி என்றான்'
17:3

அரசர்களும் பழைமைப் பற்றுடைய புலவர்களும், வணிகர்களும் தனக்குரிய திருடடுப் பட்டத்தை தாம் சுமக்காமல் வேண்டுமென்றே ஒரு சூழ்ச்சி செய்து பொன்னையோ காசையோ நாம் எடுத்துச் செல்வதற்கான எல்லா வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்து பிறகு நாம் குற்றம் புரிந்ததாகச் சொல்லி நம்மைச் சிறையில் அடைப்பார்கள். பின்னர் மககளிடம் சென்று இவன் தான் திருடன் என்று நம்மை அடையாளம் காட்டுவார்கள். ஏன் இப்படிச் செய்கிறார்கள்?

அரசர்கள் என்பவர்கள் யார்? பிறருடைய உரிமைகளை — உடைமைகளை வீரத்தின் பெயரால் திருடிக் கொண்டவர்கள். ஆயிரக்கணக்கான மக்களின் உழைப்பின் பயனை அபகரித்துக் கொண்டவர்கள். இந்த மண்ணும் விண்ணும் கூட எனக்கே உரிமையுடையது என எல்லா உயிர்களுக்கும் உரிமை உடைய இயற்கையையே திருடித்திரிபவர்கள். ஆனால் இவர்களுக்கெல்லாம் திருடர் என்று பெயரில்லை மன்னர் என்ற மதிப்பான பெயரால் அழைக்கப்படுகின்றார்கள். உண்மையில் திருடர் என்ற சொல்லின் முழுப்பொருளுக்கும் உரியவர்களாக விளங்குபவர்கள் இவரையல்லாமல் வேறுயார் இருக்கின்றார்கள்?

அடுத்துப் பழம்புலவர் என்பவர் யாவர்? அவர்களின் செயற்பாடு என்ன? கடவுள் என்றும், மதம் என்றும் மோட்சம் என்றும், நரகம் என்றும் கூறி மனிதனுடைய மூளையை மட்டுமல்லாமல் அவன் முயற்சியைப் பாழ் செய்து மக்களுடைய செல்வத்தையெல்லாம் ஒரு

சாராரே உண்டு கொழுக்கத்தக்க கதைகளை எடுத்துக் கூறி அதன் வாயிலாகச் செல்வர்கள், அரசர்கள் இவர்களிடம் இருந்து பெருஞ்செல்வத்தைக் கவர்ந்து உழைக்காமல் உண்டு திரிபவாகள். இவர்கள் கைலா யத்தையும்- வைகுந்தத்தையும் காட்டிக் காசுபறிப்பார் களே தவிரக் கழனியையும் வயல் வரப்புகளையும் –அங்கே நிகழும் உழைப்பு—உற்பத்தி மேன்மையையும் எடுத்துக்காட்டத் தக்கவகையில் உழைப்பின் முன்னோடி களாக விளங்கியவர்கள் இல்லை. தன்னுடைய கற்பனைத் திறத்தையே மூலதனமாக்கிக் கொண்டு (கருத்துமுதல் வாதத்தையே) ஏழை, எளிய மக்களின் மூடத்தனத்தைக் கருவியாக்கிக் கொண்டு உழைக்கா மல் உண்ண வழிதேடிக் கொண்டவர்கள். இதனால் தான் பாவேந்தர் பழம் புலவர்களையும் பக்காத் திருடர்கள் என்று காட்டுகின்றார். அரசனும்சரி, பழைமைப் பித்துள்ள புலவனும்சரி, தேவைக்காகத் திருடியவர்கள் அல்லர். இத்தேசம் தன்னுடைய சுரண்டல்களமாக என்றென்றும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டவர்கள். இங்கே பாவேந்தர் பொதுவாகப் புலவர்கள் அனைவரையும் திருடர்கள் என்று கூறிவிட்டார் என்று யாரும் கோபம் கொள்ளத் தேவையில்லை. புதுமைப்புலவர்கள் இவ்வாறு சுரண்டல் மனப்பான்மையுடையவர் அல்லர் என்பதைக் காட்ட வேண்டும் என்பதனால்தான் 'பழம் புலவர்' என்றுவிதந்து கூறுகின்றார். இந்த நுட்பத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

இனி வணிகர்களைப் பற்றிப் பாவேந்தர் என்ன கூறு கின்றார்? அவர்களையும் திருடர் பட்டியலிலேதான் சேர்த்து வைக்கின்றார். ஏன்? பிறருடைய உழைப்பை உறிஞ்சும் இடைத்தரகர்களாக இவர்கள் இருப்பதனால் தான். வணிகர்களுக்கு இலக்கியத்தில் ஒரு பெயர் உண்டு. என்ன அது? 'மன்னர் பின்னோர்' என்பது தான் அது. அரசர்களைவிடப் பெருஞ் செல்வம் படைத்த வணிகர்கள் புகாரிலும் மதுரையிலும் இருந்ததாகச் சிலம்பு பேசுகின்றது. மன்னர் பின்னோர் என்றால் மன்னருக்கு அடுத்த நிலையில் உள்ளோர் என்று பொருள். செல்வச் செழிப்பைப் பொறுத்த வரையில் 'மன்னர் முன்னோர்' ஆக விளங்கியுள்ளார்கள் என்ப



தைச் சிலம்பு மட்டும் செப்பவில்லை; இன்றைய அரசிய லும் கூட அதனை எடுத்தியம்பவே செய்கின்றது.

இன்றைக்கு ஆட்சிக்கு வரும் கட்சிகள் எல்லாம் ஆட்சிக்கு வந்ததும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள் வது உண்மைதான். ஆனால் அவர்கள் ஆட்சி அதிகாரத் தைக் கைப்பற்றத் தேவையான பொருளை யார் கொடுக் கிறார்கள்? வணிகர்கள் தாம். ஆட்சிக்கு அவர்கள் வந்த பின்னர் ஆள்வோர் பின் நின்று தத்தமக்கு வேண்டிய சலுகைகளை அரசிலிருந்து பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். நாம் ஒன்றை நன்றாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. வணிகர்கள், அரசியலார் அதிகாரத்திற்கு வந்ததும் ஆள்வோர் பின்னோராக இருந்து (மன்னர் பின்னோர்) சலுகை பெறுவார்கள். அவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வருமுன்னர் ஆள்வோர் முன்னோராக (மன்னர் முன்னோர்) இருந்து அரசு களையே ஆக்குவார்கள். இதுதான் பண்டை நாளி லிருந்து இன்றை நாள் வரை வணிகர்களின் வழக்கமாக இருக்கின்றது.

அதுசரி. வணிகர்கள் ஆள்வோர் முன்னோராக இருந் தாலும் சரி; ஆள்வோர் பின்னோராக இந்தாலும் சரி; இத்தகைய உயரிய இடத்தை (சமுதாயத்தில்) எப்படிப் பெற்றார்கள். இவ்விடத்தைப் பெற உதவியாக இருக் கும் பெருஞ்செல்வம் இவர்களிடம் சேர்ந்த வரலாறு என்ன? உறுதியாக இவர்கள் உழைப்பு ஒன்றினாலேயே இதனை அடைந்து விடவில்லை என்பதும், இடைத் தரகு வேலைகளும் சுரண்டலும் தாம் இத்தகைய பெருஞ் செல்வத்தைத் தந்தது என்பதுப் வரலாறு வழங்கிய பாடம். அப்படி என்றால் என்ன பொருள்? அரசினால் அங்கீகரிக்கப்பட்ட திருட்டுக்குத்தான் வாணிகம் என் றொரு ஆடம்பரமான பெயர் வழங்கப்பட்டு வருகின்றது என்பதுதானே! இதனால்தான் அரசனையும், பழம் புலவனையும், வணிகனையும் திருடர் பட்டியலின் முதல் மூவராக மட்டுமில்லை, மூலவராகவும் பாவேந்தர் காட்டுகின்றார். இம்மூவரும் தத்தம் திருட்டை மறைப்ப தற்காகவே சமுதாயத்தில் அப்பாவிகளான சிலரைத் திருடர்கள் ஆக்கிவிட்டனர் என்று சொல்வதோடு விட்டு விடவில்லை. திருட்டின் மூலத்தையே பிடித்து ஓர் உலுக்கு உலுக்குகின்றார்.

எவன் தேவைக்கு மேல் பொருள் வைத்திருக்கின் றானோ அவன்தான் உண்மைத் திருடன். அவன் திருடன் மட்டுமில்லை. திருடர்களை உருவாக்கும் நாற்றங்கால் என்கின்றார் கவிஞர். திருட்டைத் தடுப் பவன் யார்? பொருள் எல்லார்க்கும் பொது என்று எவன் எண்ணுகின்றானோ அவன்தான் சமுதாயத்திலிருந்து திருட்டை அப்புறப்படுத்துபவன் என்றும் கூறுகின்றார். ஆமாம்.

'பொருளாளி திருடர்களை விளைவிக் கின்றான்
பொதுவுடைமை யோன்திருட்டைக் களைவிக் கின்றான்'

என்ற பாவேந்தர் கூற்றில் அவர் பார்வையின் அகலம் மட்டுமில்லை ஆழமும் நன்றாக விளங்குகின்றது. இந்த ஆழமும் அகலமும் நமக்கு எடுத்துக் காட்டுவது என்ன? எல்லாத் திருடர்களுக்கும் ஆதிமூலமான திருடன் — பிறரைத் திருடராக மாற அனுமதித்தவன் – தன் சட்டத்தினாலும், வலிமையினாலும் மிகப் பலரைத் திருடன் ஆக்கியவன் அரசன்தான் என்ற மாபெரும் உண்மையைத்தான். அரசன், வணிகன், புலவன் என்று திருடர்கள் வரிசையிடப்பட்டிருந்தாலும் அரசன் என்பது அதிகாரத்தையும், வணிகன் என்பது சுரண்டலையும் புலவன் என்பது மதத்தையும் குறித்து நிற்கும் குறி யீட்டுச் சொல் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இம்மூன்றும் தாம் உலக மக்கள் சமுதாயத் தைச் சீரழித்த பெருமைக்குரியவை.

## கிழியட்டும் பழம் பஞ்சாங்கம்:

பாண்டியன் பரிசில் திருடர்கள் பற்றிய பகுதி ஒரு வியப் புறுத்தும் பகுதி என்பதைக் கண்டோம். சமுதாயத்தில் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய ஒரு பிரிவினரைப்பற்றிய செய்தியாக அது விவரிக்கப்படவில்லை. திருடர்களா? அவர்கள் கருணைக்கு உரியவர்கள் அல்லர்; கழுவிலே ஏற்றப்படவேண்டியவர்கள் என்று காட்டப்படவில்லை. மாறாக மிக உயரிய கருத்துகள் – கவிஞன் உயர்ந்த கதை மாந்தர் வாயிலாக வெளிப்படுத்தப்பட வேண்டிய கருத்துகள் திருடர்களின் வாயிலாக வெளிப்படுத்தப் படுகின்றன. புதிய உலகத்தின் வரவு கூறும் தூதுவர் களாக நின்று அவர்கள் பேசுகின்றார்கள். இன்றுவரை



நாம் சமுதாயத்தின் தீமை திருடர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இங்கே வரும் திருடர் களோ சமுதாயத்தின் தீமைகளை எல்லாம் ஒருங்கு கூட்டி அறிவு நெருப்பிலே சுட்டுப் பொசுக்கவும், புதிய வாழ்வைக் கட்டி எழுப்பவும் வழிவகை பேசுகின்றனர். இதோ அப்பேச்சு.

இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்.

எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான
இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்;
கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்;
இல்லாரும் அங்கில்லை; பிறந்த லத்தை
ஏனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே!
நல்லாரே எல்லாரும் அவ்வை யத்தில்
நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்.

56:3,4

உலகம் பெரியதுதான்: ஆனால் அதைவிடப் பெரிய இருள் அதனைக் கப்பிக்கொண்டு கிடக்கின்றதாம். அந்த இருட்டறைக்குள்ளே என்ன நடைபெறுகின்றது? மதத் தலைவர்கள் மருட்டுகின்றார்கள்; வாயடிகள் கையடிகள் வளர்ந்த வண்ணம் உள்ளன. வாயடிகள், கையடிகளின் முடிவில் என்ன நிகழ்கின்றது? சுருட்டல்தான் நடை பெறுகின்றதாம்; அதுவும் கிடைத்தவற்றை எல்லாம். ஒரு கூட்டுக் கொள்ளை. அரசன் வணிகன், மதவாதி களின் கூட்டுறவில் ஏகபோகமாக நடைபெறுவதை யார் வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள்? திருடர்கள்தாம் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். வெளிப்படுத்திக் காட்டுபவர்களோ முன்னாள் திருடர்கள்; அரசன், வணிகன், மதத்தலைவன் இவர்கள் எல்லாம் எந்நாளும் திருடர்கள் என்பதையும் இந்தத் திருட்டை உலகை

விட்டே ஓட்டுவது எப்படிஎன்பதையும் கூட அம் முன்னாள் திருடர்கள் பேசுகிறார்கள்.

எல்லார்க்கும் எல்லாம் கிடைத்து விட்டால் அங்கே திருட்டுக்கு வேலையில்லை என்பதை எடுத்துக்காட்டு கின்றார்கள். திருடுவதும் தீது; திருட்டுக் கொடுப்பதும் தீது. இரண்டுமே தடுக்கப்பட வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? திருடுவது தீமை என்ற உணர்வைத் தரும் கல்வி அவனுக்கு (திருடனுக்கு) வழங்கப்பட வேண்டும். எவனாவது திருட வந்தால் திருட்டுக்கு இலக்காகாமல் காத்துக் கொள்ளும் அறிவைத் தரும் கல்வி மற்றவனுக்கு (திருட்டுக் கொடுப்பவனுக்கு) வழங்கப்பட வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? இரண்டு நிலைகளையும் ஒழுங்கு படுத்தும் கல்வியை யார் தர மறுக்கிறார்களோ அவர் களுக்குத் தூக்குமரந் தான் பரிசு என்கிறார்கள். அத்தகைய கசடர்கள் ஒழிக்கப்பட்டு உலகம் ஒடுங்கிக் கிடக்கும் இருட்டறைக்குள் கல்வி வெளிச்சம் பரவு மானால் அந்தச் சமுதாயம் எப்படி இருக்கும்? அங்கே ஏழைகள் இருக்க மாட்டார்கள். எத்தனிமனிதனும் பிறனுடைய நலத்தை எனக்குரியதென்று பேசமாட்டா னாம். அங்கே எல்லாரும் நல்லவர்களாகவே இருப்பார் களாம். அங்கே ஒன்றேயொன்று மட்டும் கழிந்து போய்க் கிடக்குமாம். அது என்ன? அது தான் பழம் பஞ்சாங்கம். பழம் பஞ்சாங்கம் என்பதன் பொருள் என்ன? சுரண்டலும், ஆதிக்கமும், ஏமாற்றும் நிறைந்த சமூக அமைப்பு முறையைக் கவிஞர் பழம் பஞ்சாங்கம் என்ற குறியீட்டால் வெளிப்படுத்துகின்றார். பழம் பஞ்சாங்கம் கிழித்தெறியப் பட்டது என்றால் ஒரு புதிய பஞ்சாங்கம் தோற்றுவிக்கப்பட வேண்டுமே! ஆம். தோற்றுவிக்கப்படத் தான் வேண்டும். அது தான் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற அமைப்பை உயிர்ப்பாகக் கொண்ட சமூக அமைப்பு முறை.

இங்கே திருடர்களின் பேச்சைக் கேட்டு நாம் வியந்து போகின்றோம். இவர்கள் திருடர்கள் அல்லர். இவர்கள் திருடர்களை எல்லாம் தீர்த்துக்கட்ட வந்தவர்கள் என்ற எண்ணந்தான் நமக்கு மேலோங்கி நிற்கின்றது. பொது வாகக் கவிஞர்கள் உயரிய குறிக்கோள்களை நெறி கெட்ட கதை மாந்தர்களின் வாயிலாக வெளிப்படுத்துவ



தில்லை. இங்கே திருடர்கள் என்று அறிமுகப்படுத்தப் பட்ட வீரப்பனும் அவன் தோழர்களும் உயரிய குறிக் கோளை வெளிப்படுத்தும் தகுதியுடையவர்தாமா? திருடர்கள் உயரிய குறிக்கோள் பேசுவது குடித்தவன் மதுவிலக்குப் பரப்புரை செய்வது போலல்லவா முடியும் என்ற வினாக்கள் எழவே செய்யும், பாவேந்தர் இவ்வாறு தகுதியில்லாக் கதை மாந்தர் வாயிலாகத் தத்துவங்களை வெளியிடுதல் ஒரு முரண்பாடு அல்லவா என்று கூடச் சிலர் கேட்கக் கூடும்.

இவற்றிற்கெல்லாம் விடை என்ன? காண்போம். வீரப்பனையும் அவனைச் சார்ந்த தோழர்களையும் கவிஞர் எப்படி நோக்குகின்றார் என்பதைக் காண வேண்டும். வீதியோரத்திலே சிறியபள்ளம். அதில் கழிவு நீர் தேங்குகின்றது. அதனால் கொசு உற்பத்தி யாகின்றது. அது இரவில் நம்மைக் கடிக்கின்றது. நமக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகின்றது. இக் கோபத்தை நாம் எதன் மீது காட்டுவது? கொசுவின் மீதா? கொசு தோன்றக் காரணமாக இருந்த குழியின் மீதா? கொசுத் தொல்லைக்கு ஒரு முழுமையான முடிவைக் காண விரும்புபவர்கள் குழியின் மீது தான் கோபத்தைக் காட்டுவர். மண்ணைக் கொட்டிக் குழியைத் தூர்ப்பர். குழி தூர்ந்து விட்டால் நீர் தேங்காது; நீர் தேங்கவில்லை என்றால் கொசு தோன்றாது, கொசு தோன்றவில்லை என்றால் கொசுக்கடித் தொல்லையும் இராது. இதனை வேறுசிலர்வேறுவகையிலே அணுகுவர். கொசுவின் மேல் உள்ள கோபத்தினால் கொசுவர்த்தி, கொசுவலை போன்றவற்றை நாடுவார்கள். நாள் தோறும் கொசுவோடு போராட்டம் நடத்திக் கொண் டிருப்பார்கள். தொல்லை என்னவோ சாவா வரம் பெற்ற தாக நிலைத்து நிற்கும். இங்கே பாவேந்தர் திருடர் களைப் பற்றி எண்ணுவது என்ன?

திருடர்கள் உள்ளத்தில் திருடும் எண்ணம் எப்படிக் குடியேறியது? அந்த வரலாற்றை எண்ணிப் பார்க் கின்றார். குழியில் கழிவுநீர் தேங்கினால் கொசுவின் தோற்றத்தை யாரும் தடுக்க முடியாது. குழி தூர்க்கப் பட்டு விட்டால் கொசுவே இருக்காது. சுரண்டல் மிகுந்த சமுதாயமாக—உழைத்தும் கூடத் தேவையை நிறை

வேற்றிக் கொள்ள முடியாத சமுதாயமாக—உழைக்க மனம் இருந்தும் வேலை கிடைக்காத சமுதாயமாக நாடு இருந்தால் அந்நாட்டில் திருடர்கள் தோன்றுவதை யாராலும் தடுக்கமுடியாது. சுரண்டல் ஒழிக்கப்பட்டால் உழைக்க வாய்ப்புக்கிடைத்தால்—அவ்வுழைப்பின் பயன் தேவைகளை நிறைவு செய்தால் திருட்டுக்கு வேலையே இருக்காது. இதுதான் பாவேந்தரின் பார்வைச் சிறப்பு. திருடர்களைத் திருத்துவது அன்று அவர் கருத்து. திருட்டின் மூல வேரையே வெட்டி எறிவதுதான் அவர் கருத்து. அதனால் சிறிய திருடர்கள் (வீரப்பன் போன்றோர்) மனம் திருந்திப் பெரிய திருடர்களை (அரசன், வணிகன், மதவாதி) ஒழிக்கும் போராட்டத்தில் ஈடுபடுவதாகக் காட்டுகின்றார். அரசர்கள் திருடர்களாக மாறுகின்ற பொழுது அவர்களை ஒழிக்கத் திருடர்கள் அரசர்களாக மாறியிருப்பதை உலக வரலாற்றேடுகள் மிகத் தெளிவாகவே காட்டிக் கொண்டிருக்கின்றன.

## *மண்ணியல் சிறுதேர் தரும் செய்தி:*

மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்) என்ற வடமொழி நாடகத்தில் சருவிலகன் (சஜ்ஜாலகன்) என்றொரு திருடன் வருகின்றான். இவன் கதைத் தலைவியாகிய வசந்த சேனையின் பொன்னணிகளைக் கன்னமிட்டுத் திருடுகின்றான். ஆனால் இப்படிப்பட்ட திருடன் காப்பியத்தில் இறுதிவரை திருடனாகவே காட்டப்பெற வில்லை. அந்நாட்டையாண்ட பாலகன்என்னும் அரசனும் அவன் மைத்துனன் சகாரனும் நடத்தும் கொடுங் கோன்மைக்கு எதிராக ஆரியகன் தலைமையில் சிலர் திரளுகின்றனர். கொடுங்கோலனாகிய பாலகன் அரசை வீழ்த்தும் போராட்டத்தில் முன்னாள் திருடானான சருவிலகன் தீவிரமாக ஈடுபட்டு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதாகக் காட்டுகின்றான் ஆசிரியன் சூத்திரகன். மண்ணியல் சிறுதேரிலாவது சருவிலகன் நாம் அறியுமாறு வசந்த சேனையின் அணிகளைத் திருடும் செயலைச் செய்கின்றான். ஆனால் பாண்டியன் பரிசில் வரும் வீரப்பனோ நாம் அறியக் கதையில் எத்திருட்டையும் செய்யவில்லை; திருடன் என்று பிறரால் சொல்லப்படுவதைத் தவிர.

பாலகன் என்னும் கொடுங்கோல் மன்னனால் பாதிக்கப்பட்ட சமுதாயத்திலிருந்து மாதுரன், தருத்துரகன், ஆரியகன், சருவிலகன் போன்றோர் ஒன்று கூடிய போது ஒருகொடுங்கோல் அரசு அழிக்கப்பட்டுச் செங்கோல் அரசு நிறுவப்பட்டது என்று காட்டுகிறான் சூத்திரகன். இதன் உட்பொருள் என்ன? அரசன் அல்லது ஆதிக்கச் சக்திகளால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றுகூடவே செய்வர் என்பதும், ஒன்று கூடிய அவர்கள் உருப்படியான ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவே செய்வார்கள் என்பதும், இப்படிக் கொண்டு வரும்போது அவர்களைச் சமுதாயம் முன்னாள் குற்றவாளிகள் என்று இகழ்வது இல்லை என்பதும், அதனை அப்படியே ஏற்றுச் சமுதாயம் தன்னை ஒரு புதிய நெறியில் வடிவமைத்துக் கொள்கிறது என்பதும்தாமே. இதனைத்தாம் நாம் பாண்டியன் பரிசிலும் பார்க்கின்றோம்.



கதிரைவேல் மன்னனின் ஆட்சித் திறம் பற்றி நேரிடையான செய்திகள் குறைவுதான். ஆனால் மறைமுகமான செய்திகள் ஏராளமாக இருக்கின்றன. கவிஞர்.அவனை மாபெரும் வீரன் என்றும், நல்லகலையுணர்ச்சி உள்ளவன் என்றும் நேராகவே அறிமுகம் செய்கின்றார். ஆனால் நாட்டில் திருடர்கள் இருப்பதும், படைகளை எப்பொழுதும் ஆயத்தமாக வைத்துக் கொள்ளாமையும், அடுத்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை ஒற்றியறிந்து கொள்ளாமல் கவனமின்றி இருப்பதும், மைத்துனன் என்பதற்காக அப்படியே நம்புவதும், பூதம் என்ற கட்டுக்கதையை நம்பிப் புத்திகெட்டு ஓடும் இயல்புள்ளவர்களாக மக்களை அறிவு நெறிப்படுத்தாது வைத்திருந்ததும் நமக்கு மறைமுகமாக உணர்த்துவது என்ன? கதிரைவேல்மன்னனின் ஆட்சியில் குறைபாடுகள் குன்றுபோல் குவிந்து கிடந்தன என்ற உண்மையைத் தானே! கவிஞர்கள் காப்பிய மாந்தர்களின் இயல்புகளை நேர்முகமாகவும் வெளிப்படுத்துவர்; மறைமுகமாகவும் வெளிப்படுத்துவர். இரண்டு முகங்களும் ஒன்றாக இணைக்கப்படுகின்ற பொழுதுதான் உண்மை உருவம் புலப்படும்.

## *கொடி காட்டும் குறிப்பு:*

கதிர்நாடு உட்குழப்பங்களினாலோ – சட்டத்தின் ஆட்சி இல்லாமையினாலோ, மக்களின் வெறுப்புக்கு இலக்

காகி உள்ளது என்பதைக் கவிஞன் கலைத்திறத்தோடு வெளியிடும் அழகு வியத்தற்குரியது. நேரிடையாகக் குற்றம் கூறாமல் நிகழ்ச்சிகளால் நம்மை உய்த்துணர வைத்துக் கதிர்நாட்டின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றான் கவிஞன்.

வேழநாட்டுப் படைகள் கதிர்நாட்டின் கோட்டை மதில்முன் வந்துசேர்கின்றன. மதில் உச்சியில் கொடி பறக்கின்றது. காற்றிலே அசைந்தாடும் அக்கொடி என்ன சொல்லி ஆடுகிறது? கவிஞனின் கற்பனைதான் என்றாலும் அதனுள்ளே ஒரு கருத்து இருக்கின்றதே!

'கதிர்நாட்டின் நெடுங்கோட்டை மதிலின் மீது
கைகாட்டி வாபகையே என அழைக்கும்'
1:3

என்கின்றார் கவிஞர். சிலப்பதிகாரத்திலும் மதுரைக் கோட்டையின் உச்சியில் ஒரு கொடியாடுகிறது. அது என்ன சொல்லியாடுகின்றது. கோவலனையும் கண்ணகியையும் 'வராதே' என்று சொல்லி ஆடுகிறதாம். இப்படித் தான் இளங்கோ கூறுகின்றார். 'சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்' என்றுதான் பாரதியும் பாடினான். பகைவனை 'வாராதே' என்று கூறித்தான் கொடியாடியதாகப் பாவேந்தர் பாடியிருக்க வேண்டும். அதுதான் கதிர்நாட்டாரின் வீரத்தை வெளிப்படுத்துவ தாக அமையும். சிலர் இதற்கு வேறுவகையில் விளக்கம் கூறலாம். 'வாபகையே' என்று கூறிய கொடி, பகை வந்தால் அழிக்கப்படும்என்பதைஎச்சரிக்கையாக வெளிப் படுத்தியது என்பர். ஆனால் இது உண்மையில்லை. ஏனெனில்கதையில் கதிர்நாடு பகையை அழிக்கவில்லை. ஆகவே முரணான வகையில் குறிப்புப் பொருள் காணுதல் தவறு. அப்படியானால் கவிஞன் 'பகையே வா' என்று கூறியதன் பொருள் என்ன? இப்படிப் பாடுவதன் வாயிலாகக் கதிர்நாட்டின் வலிமை இழப்பைக் கவிஞன் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றான்என்றுதான் கொள்ள வேண்டும். இந்தக் குறிப்புதான் கதையின் போக்குக்கு ஒத்தகுறிப்பு.

வலிமை மிக்கவனை யாராவது அடிக்க முன்வருவார் களா? மாட்டார்கள். எவன் நோஞ்சானாக இருக்கின் றானோ அவனைத்தான் எவனும் அடிப்பதற்குக்



கையோங்கிக் கொண்டு வருவான். நோஞ்சானின் வலிமை இன்மைதான் எவனையும் அடிக்குமாறு உள்ளத் தில் ஆசையைத் தூண்டுகின்றது. இதுபோல் தான் அரசு களும் இருக்கின்றன. வலிமைகுன்றிக் கிடக்கின்ற நாடு என்றால் எவனும் படையெடுத்து வருவானே.

'காலாழ் களரின் நரியடும்; கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு'

என்றார் திருவள்ளுவர். வலிமையான யானைதான் என்றாலும் அதன் கால்கள் சேற்றுள் புதைந்து விடுமா னால்-வேலேந்திய வீரனை வென்ற களிறே என்றாலும் சின்னஞ்சிறிய நரி கூட அதனைக் கொன்றுவிடும். நரிக்கு எப்படி யானையைக் கொல்லும் துணிச்சல் வந்தது? யானை சேற்றுட்புதைந்து வலிமை குன்றிக் கிடந்ததனால்தான். நரிக்கண்ணனுக்கும் வேழனுக்கும் கதிர்நாட்டின்மீது படையெடுக்க எப்படித் துணிச்சல் வந்தது? கதிர்நாடு கலைகளிலும் ஆடம்பரத்திலும் மூழ்கி-ஆட்சிநெறியின் கட்டுக்குலைந்து வலிமையின்றி நின்றதுதான். கதிர்நாட்டின் வலிமைக் குலைவைக் கொடிமீது ஏற்றி 'வாபகையே வந்தால் எங்களை எளிதில் வெல்லலாம்' என்று கூறுவதாகப் பாடுகின் றான். இந்தக்கொடி நிகழ்ச்சி நமக்குக் காட்டும் குறிப்பு என்ன? கதிரைவேல் மன்னனின் ஆட்சித்திறம் அலங் கோலமாக இருந்தது என்ற உண்மையைத்தானே.

## ஆட்சி அவலம்.

கதிர் நாட்டில் நடைபெறுகின்ற இன்னும் சில நிகழ்ச்சி களை உற்று நோக்கினால் கதிரை வேல் மன்னனின் ஆட்சியில் அலங்கோலங்கள் அதிகமாகவே இருந்தன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. வீரப்பன் கூட்டாளிகளின் பேச்சிலிருந்தே நாம் நாடு சுரண்டல் களமாக இருந்தது என்பதை அறிந்து கொண்டோம். கதிர் நாட்டாட்சியைப் பெற நரிக்கண்ணன் நடத்தும் பல கூத்துகள் அறிவு என்ற ஒன்றே கதிர் நாட்டை விட்டு விடை பெற்றுச் சென்று விட்டதோ என்று எண்ணுமாறுள்ளது. நரிக்கண்ணன் ஒரு பூதத்தை உருவாக்குகின்றான். எப்படி?

'எட்டி எனும் ஓர் ஆளை அழைத்து வந்தே
எரிவிழியும் கருமுகமும் நீண்ட பல்லும்
குட்டை மயிர் விரிதலையும் கொடுவாள் கையும்
கூக்குரலும் நீர்ப்பாம்பு நெளியும் மார்பும்
கட்டியதோர் காருடையும் ஆக மாற்றிக்
காணுவார் நிலைப்படியே பூதம் ஆக்கி
விட்டார்கள் மலையின்மேல்'

48:1

நரிக்கண்ணன் விட்ட பூதத்தைக் கண்டு நாட்டு மக்கள் நிலை குலைந்து போகிறார்கள். முன்னால் நடந்து செல்வோர் பின்னால் வருவோர் காலடியோசை கேட்டால் போதும். பூதம்! பூதம்! என்று அலறத் தொடங்கி விடுகின்றனர். இதன் வாயிலாகக் கவிஞன் எதனை நமக்கு உணர்த்த நினைக்கின்றான்? நாட்டு மக்கள் யார் எதனைச் சொன்னாலும், எதனைக் கண்டாலும் ஆராய்ந்து பார்த்துத் தெளியும் அறிவற்ற வர்களாகவும், ஏமாற்றுவோர்க்கு இடம் கொடுக்கும் முழு மூடர்களாகவும் இருந்தனர் என்பதைத் தானே! இது தான் கதிர் நாட்டு மக்களின் நிலை என்றால் மக்களை இந்நிலையில் வைத்திருந்த மன்னன் ஆட்சித் திறத்தை எப்படிப் பாராட்டுவது? கதிரை வேல் மன்னன் கொடுங்கோலனாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாட்டு மக்களை நன்னெறிப்படுத்தி யாண்டவன் என்றோ—தீமைகள் கால் கொள்ள இடந் தராது கண்டிப்பாக ஆட்சி நடத்தியவன் என்றோ கூற முடியாது.

நரிக்கண்ணன் ஒரு பூதத்தைவிட, அதற்கு எதிராக வீரப்பன், கணக்காயர் குழுவினர் எதிர்ப் பூதத்தை உரு வாக்கி விடுகின்றார்கள். முதற்பூதத்தை உருவாக்கிய நரிக்கண்ணனே வீரப்பன் குழுவினர் விட்ட பூதத்தைக் கண்டு அஞ்சியோடுகின்றான். இறுதியில் நீலனுடைய ஏற்பாட்டின்படி நரிக்கண்ணன் குழுவினர் அனைவருமே பூதமாக வேடமிடுகின்றனர். இறுதியில் கணக்காயனும், வீரப்பனும், வேலனும் அறிவார்ந்த முறையில் பூதங் களைக் கொன்று போடுகின்றனர். மூடத்தனம் முறி யடிக்கப்படுகின்றது. அறிவு வெற்றி கொள்கின்றது. இப்பூதங்கள் பற்றிய செய்தி காப்பியத்தில் ஏதோ இரண்டொரு இடங்களில் மட்டும் வருவதாக அமை



வில்லை. மிகப்பெரிய அளவில் பேசப்படுகின்றது. பெரிய அளவிலே இது ஏன் பேசப்படவேண்டும்? நாட்டின் நிலையை நாட்டு மக்களின் நிலையை நன்கு வெளிப் படுத்திக்காட்டத்தான் இதனைப் பெரிதாக வளர்த்துச் செல்கின்றான் கவிஞன். ஆகக் கதை முழுவதும் வெளிப் படையாகவும் மறைமுகமாகவும் கூறும் செய்தி என்ன?

1. மன்னர்கள் என்ற பெரிய பெயரைப் பெற்றிருந் தாலும் அவர்கள் எல்லாம் ஆடம்பரத்தையும், தன் முனைப்பையும், இன்பத்தையுமே முக்கியமாகக் கருதுவார்கள்.
2. வலிமை, வீரம் என்ற பெயரால் நாடுகளைக் கொள்ளையிடுவார்கள்.
3. தங்களுடைய தன்னலத்தின் பொருட்டு சுரண்டல் சமுதாய அமைப்பு முறையை ஏற்றுக் கொள்வார் கள்.
4. மக்களை அறியாமையில் வைத்திருப்பதுதான் ஆட்சிக்குப் பாதுகாப்பு என்றால் அதனையே செய் வார்கள்.
5. ஆட்சியில் ஒட்டிக் கொள்வதற்காக எத்தகைய வழி முறையையும் கையாளுவார்கள்.

கதிர் நாட்டின் அரண்மனை வட்டாரங்களில் இருந்து ஆலமரத்தடி வரையில் நடக்கின்ற அரசியல் போராட்ட நிகழ்ச்சிகளின் பிழிவைத்தான் நீங்கள் மேலே காண் கிறீர்கள். இதே நிகழ்ச்சிப் போக்கில்தான் உலக வரலாற்று நிகழ்வுகளும் சென்றன என்பதை முன்னரே கண்டோம். ஆகக் கதிர்நாடு வேழநாடு இவற்றைக் கொண்டு பாவேந்தர் வெளிப்படுத்திய செய்தி என்ன? தமிழ்நாடு உட்குழுப் போராட்டங்களாலும், வஞ்சனை யாளர்களின் வரம்பு மீறிய தலையீடுகளினாலும் எப்படி எல்லாம் மொழி இன உணர்வுகள் சிதைக்கப்பட்டுப் பண்டையப் பெருமையை இழந்து தேய்ந்தது என்ற செய்தியைத்தான். இச்செய்தியையும் நேரிடையாகவும் கூறுகின்றார்; வேழநாடு, கதிர்நாடு போன்ற குறியீடு களாலும் விளக்குகின்றார். இதுவரை நாம் கண்டது கடந்த கால வரலாறு; இனி நாம் காணவேண்டியது எதிர்காலம் பற்றிய செய்தியை. ஒரு நாடு அல்லது சமுதாயம் எப்படி இருந்தது என்று கூறுவது வரலாற்

றாசிரியனின் பணியாக இருக்கலாம். ஆனால் கவிஞனின் பணி 'எப்படி இருந்தது' என்பதைக் கூறுவதோடு முற்றுப்பெற்றுவிடாது. எப்படி இருக்கவேண்டும் என்பதையும் அவன் கூறாமல் விடமாட்டான். ஏனெனில் அவனுடைய காப்பிய நோக்கமே அதுதானே. எதிர்காலம் பற்றிக் கவிஞன் கூறுவது என்ன?

1 தமிழன் தான் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

2 தன் அடிமை வாழ்வை உதறியெறிந்து ஆட்சி உரிமையை எய்த வேண்டும்.

3 தமிழன் மீண்டும் எதிர்காலத்தில் யாருக்கும்அடிமையாகாத வீர உணர்வைப் பெறவேண்டும்.

4 தன்னுடைய கலை, நாகரிக, பண்பாட்டு வளங்களை மீண்டும் பெற வேண்டும்.

5 தமிழ்நாடு தமிழர்க்கே உரியதாதல் வேண்டும்.

இவைதாம் எதிர்காலத்தில் நிகழவேண்டிய ஆக்கம் என்பதனைக் காப்பியம் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. இச்செய்தியைக் கவிஞன் வெளிப்படையாகக் கூறவில்லை குறியீட்டு வகையாலே கூறுகின்றான். இனி அதுபற்றிக் காண்போம்.

### *பாண்டியன் பரிசுப் பேழை:*

இக்காப்பியத் தலைப்பு என்ன? பாண்டியன்பரிசு என்பதுதான். பாண்டியன் பரிசு என்று காப்பியத்துள் எது சுட்டப்படுகின்றது? பாண்டியன் பரிசு என்பது சில பொருள்கள் அடங்கிய பேழை. அதனுள்ளே முடி, வாள், பட்டயம், ஆடைகள், அணிகலன்கள் உள்ளன. அதனுள் அது யாரால் யாருக்கு, எதற்காகக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் காணப்படும். இதோ அன்னம் பேழையின் வரலாற்றையும் அடையாளத்தையும் கூறுகின்றாள்.

'பழநாளில் பாண்டியனின் படைநடத்திப்
பகைகொண்ட சோழனையும் வெற்றி கொண்ட
அழல்வேலான் என்னருமை மூதா தைக்கு
அளித்தானோர் பேழையினைப் பரிசாய்; அந்த



எழிலான பேழையிலே ஞால மெச்சும்
இழைஆடை வாள்பலவும் இருக்கும்; மேலும்
அழகான கதிர் நாட்டின் வரலா றெல்லாம்
அப்பேழை சொல்லி விடும்' 31:2

'... ... ... ... ... . . . . . . . . . . . . . . . . .
என்பேழை மன்னவரின் வாளின் நீளம்;
உள்ளகலம் மூன்றுசாண்; உயரம் நாற்சாண்;
ஒளிதிகழும் கிளிச்சிறைப்பொன் தகடு தன்னால்
வெளிப்புறமும்; பொதிகைமலைச் சந்த னத்தின்
வெண்பலகை உட்புறமும் காணும்; மேலே
உளிஅழுந்தும் எழுத்தாலே உள்ளிருக்கும்
உயர் பொருள்கள் அத்தனைக்கும் பெயர்கள் காணும்?
33:2

இப்பேழை யாரோ ஒரு பாண்டிய மன்னனால் அன்னத்தின் மூதாதையர்க்குப் பரிசாக வழங்கப்பட்டதாம். இதனைத் திரும்பப் பெறவேண்டும் என்று அன்னம் கூறுகின்றாள். தன்னுடைய அரண்மனையில் இருந்து அது திருடப்பட்டுள்ளதாகவும் அதனை யார் தேடிக் கொண்டு வருகின்றாரோ அவரையேதான் மணக்க விரும்புவதாகவும் கூறுகின்றாள். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? இன்னாரைத்தான் மணக்கவேண்டும் என்ற குறிக்கோள் அல்லது காதல் அன்னத்திற்கு இல்லை என்று தெரிகின்றது. பேழையை யார் கொண்டு வந்தாலும் அவனை நான் கணவனாக ஏற்றுக் கொள்வேன் என்று அன்னம் கூறுவதனால் இதனை நாம் தெளிவாக அறிகின்றோம். ஆனால் உண்மையில் என்ன நடக்கின்றது?

அன்னம் வேலனை உளமார விரும்புகின்றாள். எப்பொழுது அவள் அவனை விரும்பத் தொடங்கினாள்? செய்யாற்றில் அவள் ஓடத்தில் தடுமாறி மயங்கியபோது அவளைக் காப்பாற்றிய வேலன் அவளைத் தன் குடிசையில் சேர்த்த பிறகுதான் அவள் அவனை விரும்பத் தொடங்கினாள். இந்த நிகழ்ச்சி நடப்பதற்கு முன்னரே வேழ மன்னனிடம் நரிக்கண்ணன் சூழ்ச்சியிலிருந்து தப்புவதற்காகப் பேழையை யார் மீட்டுக் கொணர்வாரோ அவருக்கே மாலையிடுவேன் என்று கூறு

கிறாள். இங்கே ஓர் முரண்பாடு கால் கொள்ளத் தொடங்கிவிட்டது. பேழை கொண்டு வருவோன் வேறொருவனாக அமைந்துவிட்டால் வேலனை விரும்பியது என்னாவது? கதைத் தலைவி விரும்பிய வேலனே பேழையைக் கொண்டு வருமாறு கவிஞனால் செய்து விட முடியும் என்றாலும் காதல் கொள்வதைப் பின்னும் சூளுரைப்பதை முன்னுமாக அமைத்திருப்பதில்—கதைக் கட்டுக் கோப்பில் சிறு குலைவு இருப்பதைக் காண முடிகின்றது.

கதிர் நாட்டுரிமையைப் பெறுவதுதான் அவள் நோக்கமென்றால் என்ன செய்திருக்க வேண்டும்? நரிக் கண்ணன், தன் மகனை மணந்துகொண்டு அன்னம் இந் நாட்டின் அரசியாக விளங்கட்டும் என்று கூறிய போது, வேழ மன்னனும் 'ஆமாம்! இது நல்லமுடிவு' என்று ஒத்துப்பாடிய நேரத்தில் 'வேழ மன்னா! நான் நரிக் கண்ணன் மகனை விரும்பவில்லை. என் திருமணத்தைப் பிறகு நான் பார்த்துக் கொள்வேன். நான் இந்நாட்டின் அரசியாக மணிமுடி புனைய விரும்புகின்றேன்' என்று கூறியிருக்க வேண்டும். அப்படிக் கூறியிருந்தால் அதனை வேழ மன்னன் ஏற்றுக் கொண்டே இருப்பான். ஏனெனில் கதிர் நாட்டைத் தன்னாட்டோடு இணைத்துக் கொள்ளும் விருப்பம் அவனுக்கு இல்லை. மாறாகக் கதிர் நாட்டில் ஒரு அரசை நிறுவி கப்பம் பெறுவதையே அவன் விரும்புகின்றான். இதோ அவன் கூற்று.

'ஒடுகபாண் டியன்பரிசை நோக்கி நீவிர்;
    உமைத்தடுத்தால் நமதாணை அவர்க்குச் சொல்க;
தேடுகஎன் றான்பின்னர் சென்றிட் டார்கள்;
    திருநாட்டை வென்றேன்நான் எனினும் அந்த
நாடுதனை உரியவர்க்கே நான ளித்து
    நாளடைவில் அவரிடத்தில் கப்பம் கொள்ளல்
பீடுடைய அறமாகும்; இந்த நாட்டின்
    பேருரிமை ஆராய்வேன் என்றான் மன்னன்'

## உரிமைக் குழப்பம்:

இக்கதிர் நாடு யாருக்குரியது என்று நான் ஆராய்வேன் என்கின்றான் வேழன். ஏன் அவன் ஆராய வேண்டும்?



கதிர் நாட்டு மன்னனின் மகள் அன்னம் என்பது வேழனுக்குத் தெரியாதா? தெரியும். ஆனால் நரிக கண்ணன் ஒரு பொய்ச் செய்தியை வேழனிடம் கட்ட விழ்த்து விட்டிருக்கின்றான். இந்நாடு தனக்குரியது என்றும் இதனைக் கதிரைவேல் மன்னனின் முன்னோன் கைப்பற்றிக் கொண்டுவிட்டான் என்றும் புளுகியிருந்தான். இதோ அப்புளுகு வரலாறு. வேழன் நரிக் கண்ணனிடம் வினவுகின்றான்.

நரிக்கண்ணா பழநாளில் இதுவுன் பாட்டன்
    நாடென்றாய் அதற்குள்ள சான்று முண்டோ?
அது இருந்தால் காட்டுகநீ இந்த நாட்டின்
    ஆட்சியினை உனக்களித்து விடுவேன் என்றான்.

:8:1

இவ்வினாவிற்கு விடை வருகிறது நரிக்கண்ணனிடமிருந்து. இது விடையா? மிகப்பெரிய பொய் மூடை.

பதிவிருந்தால் ஏனுனை நான் நத்த வேண்டும்?
    பாட்டனுக்குப் பாட்டனாம் பறைக்கண் ணற்குக்
குதிரைதிரை கொண்டநெடு முடியான் என்னும்
    கொடு நாட்டு மன்னன் அளித் தான்இந் நாட்டைப்
பதினாயி ரம்பேரை வென்ற தாலே
    பரிசாகத் தந்ததன்றி வேறொன் றில்லை

அந்நாளில் மன்னவனால் கொடுக்கப் பெற்ற
    அருட்செப்புப் பட்டயத்தைக் கதிரை வேலன்
முன்னோனாம் முத்தப்பன் மறைத்த தோடு
    முனறாம் நாள் தூங்கையிலே கொலையும் செய்தான்;
என்னையுமக் கதிர் நாட்டான் விட்ட தில்லை;
    இங்கிரா தேயென்றான் அங்கு வந்தேன்.

'இந்நாட்டை நானாள வேண்டு மென்ற
    எண்ணமே எனக்கில்லை; என்றன் தந்தை
அந்நாளில் சாகுங்கால் எனைய ழைத்தே
    அங்கையினைத் தன்மார்பில் அழுத்தி 'அப்பா
உன்னைநான் ஒருறுதி கேட்கின் றேன்நீ
    ஒப்பிடுக; உன்நாளில் வேழ நாட்டின்
மன்னவரின் அருள்பெற்றுக் கதிர்நாட் டுக்கு
    மன்னவனாய் இரு; நமது மானம் காப்பாய்'
'எனக்கூறி உயிர்நீத் தான்' 15:2-5

இதுதான் அப்பேபாய் மூடைக்குள்ளிருந்து புறப்பட்டு வந்த செய்தி. வேழமன்னனுக்கு ஒரே வேதனை. கதிர் நாட்டுக்குரியவர் அன்னமா? நரியா? இதனால் தான் கதிர் நாட்டுரிமை யாருக்கு என்பதனை ஆராய்கின்றேன் என்கின்றான். நரிக்கண்ணனோ ஆதாரங்கள் எல்லாம் கதிர்வேல் மன்னனின் முன்னோன் முத்தப்பனால் மறைக்கப்பட்டுவிட்டது; ஆகவே ஆதாரமாக இருப்பது சாகும் வேளையில் என் அப்பன் சொல்லிய சொற்கள் தாம் என்று ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடுகின்றான். ஆனால் அன்னம் தனக்கு ஆதாரம் இருப்பதாகக் கூறுகின்றாள். அந்த ஆதாரம் தான் பாண்டியன் பரிசு என்ற பேழையாக நின்று கதையைச் சுற்றிச் சுழல விடுகின்றது.

கவிஞன் நினைத்திருந்தால் பாண்டியன் பரிசு என்ற இப்பேழை இல்லாமற்கூட இக்கதையை நடத்திவிட முடியும். ஆனால் அப்படி நடத்தாமல் பாண்டியன் பரிசு என்னும் பேழையைக் கதையில் மையப்படுத்தி நடத்துவது ஒரு காரணம் கருதித் தான் போலும் என்று கருத வேண்டியுள்ளது.

பாண்டியன் பரிசு பேழையை யார் யார் தேடுகின்றார்கள். நரிக்கண்ணனும் அவனைச் சார்ந்தோரும் தேடுகிறார்கள். எதற்காகத் தேடுகிறார்கள்? கதிர் நாடு அன்னத்திற்குரியது என்பதைக் காட்டும் ஆதாரத்தை அழிப்பதற்காகத் தேடுகிறார்கள். இன்னும் யார் தேடுகிறார்கள்? வேலன், கதிர்நாட்டு மக்கள் இவர்கள் எல்லாம் தேடுகிறார்கள். எதறகாக? கதிர் நாடு அன்னத்திற்குரியது என்பதை நிலை நிறுத்த. இன்னுமகூட ஒருவன் தேடுகின்றான். அவன் யார் என்கிறீர்களா? அவன் தான் அமைச்சனின் மகன் நீலன். இவன் எதற்காகத் தேடுகிறான்? பேழையைக் கொண்டு அன்னத்தை அடைந்து அதன் வாயிலாகக் கதிர் நாட்டுரிமையைக் கவர்ந்து கொள்வதற்காக. ஆக ஓர் உரிமையைப் பெற மூவர் போட்டியிடுகின்றனர்: உண்மையில் உரிமையுடையவர் ஒருவர் தான். மற்றையோர் ஏமாற்றிப் பெற எண்ணுவோர்.

கதிர் நாட்டுக்கு உரிமை கொண்டாடிய நரிக்கண்ணனும் அவன் மகனும் பூதம்போல் வேடமிட்டு வந்து அன்னத்தின் வாளால் அழிகின்றனர், இடையிலே கதிர் நாட்டுரிமையைத் தட்டிச் செல்ல வந்த நீலன் வேலனாலோ பிறராலோ இறந்ததாகத் தகவல் இல்லை. பேழையைக் கவர நீலன் குழுவினர் முயல்வதை அறிந்த வீரப்பன் வேழ மன்னன் அதனை அறியுமாறு செய்ய அவன் தன் வீரர்களை எல்லாம் எங்கும் நிறுத்தி வைத்து இடைக் கொள்ளையர்களைத் தடுத்து விடுகின்றான். ஆகப் போட்டியாளர்கள் அரங்கிலிருந்து மறைகின்றனர். கதிர் நாட்டுரிமை அன்னத்திற்குத்தான் என்பதைக் காட்டும் பேழையும் வீரப்பனிடமிருந்து வேலன் வழியாக அன்னத்திடம் வந்து சேர்ந்து விடுகிறது.



வேழ மன்னன் அதனை ஏற்றுக் கொண்டு வேலன் அன்னம் திருமணத்தை நடத்தி வைப்பதோடு வேலனைக் கதிர் நாட்டின் மன்னனாகவும் முடிபுனையச் செய்கின்றான். பெருமக்கள் வாழ்த்துக்களோடு காப்பியம் நிறைவு பெறுகின்றது. என்றாலும் இக் காப்பியத்தின் முடிவு பாவேந்தரின் இயல்புக்குகந்த முடிவாக அமையாமல் முரண்பட்டதாக அமைந்து நிற்கின்றது. இம் முரண்பாடுதான் காப்பியப் புதையலை இனங்காட்டும் அடையாளமாகத் திகழ்கின்றது. அதனைக் காண்போம்.

## முரண்பட்ட முடிவு:

வரலாறு போன்று தோற்றமளிக்கும் காப்பியங்கள் பலவற்றைப் பாவேந்தர் படைத்துள்ளார். அளவிற் சிறியனவும் உண்டு; பெரியனவும் உண்டு. அவை பண்டைக் காலத்து முடிமன்னன் கதைபோலத் தோற்றமளிக்கும் குறிப்பாகப் புரட்சிக்கவி, வீரத்தாய், கடல் மேற் குமிழிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பாண்டியன் பரிசும் இந்த வகையைச் சார்ந்ததுதான். இக்கதைகளில் எல்லாம் அதாவது வீரத்தாய், புரட்சிக்கவி, கடல் மேற் குமிழிகள் ஆகிய இவற்றில் எல்லாம் தவறாமல் ஒரு முடிவைக் காப்பியத்தின் இறுதியில் நிறைவேற்றி வைக்கின்றார். இதனை ஒரு குறிக்கோளாகவே கொண்டிருக்கின்றார். இம்முடிவுதான் அவர் உள்ளம்கவர்ந்த முடிவு. என்ன அம்முடிவு?

முடிமன்னர் ஆட்சிக் காலத்தில் நடந்ததாகக் கூறும்

அக்கதையில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியாட்சி தோற்றுவிக்கப்படும். மக்களாட்சி மலரவேண்டும் என்ற பெரு வேட்கையின் விழைவுதான் முடியாட்சிக் கதைகளில் கூடக் குடியாட்சி முடிவுகளைக் கூறவைத்தது. புரட்சிக்கவி என்ற காப்பியம் அளவிற் சிறியதுதான். ஆனால் முடியாட்சியின் அதிகார ஆணவங்களை வெளிப்படுத்துவதில் அது சிறிய காப்பியம் அன்று. இக்காப்பியத்தில் மன்னராட்சி மக்கள் வலிமையால் மாற்றப் படுகின்றது. கொலைக் களத்திலிருந்த கவிஞனும் அவன் காதலியும் மீட்கப்படுகின்றார்கள். பொதுமக்கள் கூடி ஒரு முடிவைச் செய்ததாகக் காப்பியம் கூறுகின்றது. என்ன முடிவு அது?

கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்;
காவலன்பால் தூதொன்று போகச் சொன்னார்
புவியாட்சி தனையுனக்குத் தாரோம் என்று
போயுரைப்பாய் என்றார்கள்; போகா முன்பே
செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்;
செல்வமெல்லாம் உரிமையெல்லாம் நாட்டா ருக்கே;
கவையின்றி எய்துதற்கும் சட்டம் செய்தார்
நலிவில்லை நலமெல்லாம் வாய்த்த தாங்கே.

(புரட்சிக்கவி. முதல்தொகுதி)

இதோ இன்னொரு சிறிய காப்பியமான வீரத்தாயின் முடிவைப் பாவேந்தர் எப்படி அமைத்துள்ளார் என்று பாருங்கள். மன்னனின் மகன் சுதர்மனுக்கு மணிமுடி சூட்ட விழைகின்றனர். ஆனால் சுதர்மனோ முடியாட்சி முறையை ஒழித்துக் குடியாட்சி முறையைக் கொண்டு வர எண்ணுகின்றான். அரசன் மகன்தான் சுதர்மன். என்றாலும் அவன் வாயிலாகவேதன்னுடைய குடியாட்சி வேட்கையை எப்படி நிறைவேற்றுகின்றார் பாருங்கள்.

'இந்த மணிபுரிதான் இங்குள்ள மக்களுக்குச்
சொந்த உடைமை; சுதந்தரர்கள் எல்லாரும்;
ஆதலினால் இந்த அழகு மணிபுரியை
ஓதும் குடியரசுக் குட்படுத்த வேண்டுகிறேன்"

என்று கூறுகின்றான் சுதர்மன். அவையில் இருந்த எல்லாரும் அவன் முடிவை ஏற்றுக் கொள்கின்றனர்.



இறுதியில் சுதர்மன் இப்படி அறிவிக்கின்றான்.

'எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமை யெலாம்;
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே;
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக;
எல்லாக்கும் நல்ல இதயம் பொருந்திடுக;
வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக;
வில்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே!'

இந்த ஆர்ப்பரிப்போடு வீரத்தாய் காப்பியம் நிறைவு பெறுகின்றது. இந்நிறைவில் பாவேந்தரின் குடியாட்சி வேட்கை எத்தகையது என்பது புலனாகின்றது.

கடல்மேற்குமிழிகள் என்ற காப்பியத்தின் முடிவு எப்படி உள்ளது? அதனையும் காண்போம். அளவிற் சற்று பெரிய காப்பியம் இது; வீரத்தாய், புரட்சிக் கவியை விட திறல்நாட்டின் அரண்மனையில் நின்று செம்மறித்திறல் இப்படிக் கூறுகின்றான். இதுவும் இக்காப்பியத்தின் இறுதிக் காட்சிதான்.

நாட்டினிலே குடியரசு நாட்டிவிட்டோம் இந்நாள்.
நல்லபல சட்டங்கள் அமைத்திடுதல் வேண்டும்;
காட்டோமே சாதிமணம்; கலப்புமணம் ஒன்றே
நல்வழிக்கும் கைகாட்டி; கட்டாயக் கல்வி
ஊட்டிடுவோம் முதியவர்க்கும் மாணவர்க்கும் நன்றே;
உழையானை நோயாளி ஊர் திருடி என்போம்;
கேட்டைஇனி விலைகொடுத்து வாங்கோமே; சாதி
கீழ்மேல்என் றுரைப்பவர்கள் வாழுவது சிறையே.

செம்மறித்திறலின் குரலில் கொப்புளிக்கின்ற குடியாட்சி வேட்கையைக் கேட்டீர்கள். இனி இக்காப்பிய ஆசிரியன் தன் கருத்தாக இறுதியில் மொழிவதையும் கேளுங்கள்.

'செம்மறியே முதலாகப் பதின்மர்களைத் தேர்ந்தார்;
திறல்நாட்டின் குடியரசைச்செயற்படுத்தச்சொன்னார்
செம்மறிக்கும் பொன்னிக்கும், மின்னொளிக்கும் வையத்
திறலுக்கும் நடைபெற்ற திருமணம்பா ராட்டி

நம்மருமை நாடன்றிப் பெருநாட்டை இந்த
நன்னிலையில் சேர்ப்பதற்கும் திட்டமிட்டார் மக்கள்;
செம்மையுறத் திருநாட்டில் மணிக்கொடியும் ஏற்றித்
திகழ்ந்திடுக உலகமெலாம் குடியரசே என்றார்

(கடல்மேற் குமிழிகள்)

பார்த்தீர்களா! மூன்று காப்பியங்களிலும் கவிஞன் ஆசை எப்படி நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை. பாவேந்தர் பாண்டியன் பரிசில் கூட குடியாட்சிக் கருத்துக்களை விதைக்காமல் இல்லை. 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற புரட்சிகரமான கருத்துக்களை எல்லாம் பேசுகின்றார். இதுதான் கவிஞரின் உயிர்க்கோட்பாடு. இந்த உயிர்க்கோட்பாட்டை புரட்சிக்கவி, வீரத்தாய் கடல்மேற்குமிழிகளின் முடிவில் அமைத்துக் காட்டினாற் போலப் பாண்டியன் பரிசில் கூறவில்லையே ஏன்? கூறாதது மட்டுமில்லை; மாறாக வேலனுக்கு முடிசூட்டு விழாவல்லவா நடத்துகின்றார்! இது ஏன்?

இங்கே அன்னம் காப்பியத்தின் இறுதியில் தனக்குரிய அரசுரிமையைத் துறப்பதாகவும், குடியாட்சிக்கு நாட்டை உட்படுத்துவதாகவும் காட்டியிருக்க முடியும். இது மிகவும் எளிதானது தான். எளிதான இச்செயலை — பிற எல்லாக் காப்பியங்களிலும் எளிதாக நிறைவேற்றிய இச்செயலை இங்கே நிறைவேற்றாமல் விடுவது ஒரு முரண்பாடு போலத் தோன்றவில்லையா? இம்முரண்பாட்டைக் களைவதில் பாவேந்தருக்கு உள்ள சிக்கல் என்ன? சிலர் இதற்கு வேறு வகையாக விளக்கம் கூறக் கூடும்.

எல்லாக் காப்பியங்களையும் அதன் முடிவுகளையும் ஒன்றுபோலவேதான் முடித்துக் காட்டவேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவும் கவிஞனுக்கு இல்லை. மேலும் கவிஞனுக்குள் ஏற்படுகின்ற கருத்து வளர்ச்சி அல்லது மாறுதல் காரணமாகக்கூட அவன் முடிவுகளை மாற்றி அமைக்கலாம். இதனை எல்லாம் குற்றமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. கவிஞனின் படைப்புரிமை என்று விட்டுவிட வேண்டும் என்றெல்லாம் சொல்லக்கூடும். உண்மைதான். ஆனால் நம்மை மேலும் மருளவைப்பது எது என்றால் இந்நான்கு காப்பியங்களையும் இயற்றிய



காலகட்டத்தில் கவிஞர் கருத்தில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை என்ற செய்திதான். இதனையும் காண்போம்.

1937-இல் புரட்சிக்கவி காப்பியம் வெளியாயிற்று. இக்காப்பியத்தில் தான் முதன் முதலாக முடியாட்சி ஒழிப்பும் குடியாட்சி மலர்ச்சியும் வற்புறுத்தப்பட்டது.

1938-இல் பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி வெளியாயிற்று. இதில்தான் வீரத்தாய் நாடகம் இடம் பெறுகின்றது. இதிலும் முடியாட்சி ஒழிப்பும் குடியாட்சி மலர்ச்சியும் சற்று விரிவாகவே வலியுறுத்தப்படுகின்றது. புரட்சிக்கவி, வீரத்தாய் இரண்டும் ஏறத்தாழ சமகாலத்தில் இயற்றப்பட்டதாகத்தான் கொள்ள வேண்டும். ஏனெனில் இரண்டும் ஓராண்டு இடைவெளியில்தான் வெளியாயின.

1948-இல் 'கடல் மேற் குமிழிகள்' வெளிவந்தது. இதிலும் இறுதிக் காட்சியில் முடியாட்சி அகற்றப்பட்டுக் குடியாட்சி அமைக்கப்படுகின்றது. ஆக 1937-இல் இருந்து 1948 வரையில் முடியாட்சி ஒழிப்பிலும் குடியாட்சி தோற்றுவிப்பிலும் கவிஞர்க்கு எத்தகைய மாறுபாடான கருத்தும் இல்லை என்பதும், கருத்து வளர்ச்சி என்ற பெயரால் முரண்பாடுகளுக்குள் அவர் சிக்கிக் கொள்ளவில்லை என்பதும் தெளிவாகப் புலப்படுகின்றது.

சரி, பாண்டியன் பரிசு எப்பொழுது எழுதப்பட்டது? வெளிவந்த ஆண்டு என்ன? பாண்டியன் பரிசு 1943-இல் வெளிவந்தது. அதாவது முடியாட்சி குடியாட்சி பற்றிய கருத்தில் எவ்வித மாற்றத்திற்கும் பாவேந்தர் ஆளாகாதிருந்த (1937-1948) பன்னிரண்டாண்டுகளின் இடைப்பட்ட காலத்தில்தான் (1943) பாண்டியன் பரிசு இயற்றப்பட்டுள்ளது. அப்படி என்றால் பாவேந்தர் தன்னுடைய உயிர்க் கருத்தாகிய குடியாட்சி அமைப்பு முறையையும் முடியாட்சி ஒழிப்பையும் கூறாமல் விட்டுவிட்டது ஏன்? இன்னும் சொல்லப் போனால் இக்கருத்திற்கு எதிராக முடிசூட்டு விழா நடத்துவது ஏன்? இவ்வினாக்கள் நம்முன் பெரிதாக எழுகின்றன.

இதுமட்டுமன்று; இன்னொரு சிக்கலும் இங்கே தோன்றுகின்றது. பெண்ணுரிமையில் தீவிரமான கருத்துடையவர் பாவேந்தர். ஆணுக்கு நிகராக அனைத்துத் தொழில்களிலும் அவள் ஈடுபடவேண்டும் என்பதை வற்புறுத்தும் இயல்பினர். ஆத்தா, அன்னம் இருவரையும் புரட்சிப் பெண்களாகவே படைத்துக் காட்டியவர் (இவர்களின் புரட்சித் தன்மையை இந்நூல் இறுதியில் காண்க) இத்தகைய புரட்சிப் பெண்ணாகிய அன்னத்தை நாட்டின் அரசியாக்க வாய்ப்பிருந்தும் அவளுக்கு முடி சூட்டாது வேலனுக்கு முடி சூட்டுவது ஏன்? கவிஞர் இதுவரை கொண்டிருந்த பெண்ணுரிமைக் கோட்பாட்டிலிருந்து பின்வாங்குகின்றாரா, என்றெல்லாம் புதிய வினாக்கள் முளைக்கின்றன.

மேலும் பேழையைக் கொண்டு வருபவனுக்குத் தன்னைத் தருவேன் என்றுதான் கூறினாளேயன்றி ஆட்சியைத் தருவேன் என்று எங்கும் கூறவில்லை. அப்படி இருக்கப் பேழையைக் கொண்டுவந்த வேலனைக் கதிர் நாட்டின் மன்னனாக மூடி சூட்டுவது ஏன்? முடியாட்சி ஒழித்துக் குடியாட்சி காட்டாமை; பெண்ணுரிமை பேசியவர் பெண்ணுக்கு ஆளும் வாய்ப்பு வரும்போது அதனை அவளுக்கு வழங்காது வேலனுக்கு வழங்குவது – இவை எல்லாம் இங்கே பெரும் சிக்கலாக உருவெடுக்கின்றன. பாவேந்தரின் இயல்பான சிந்தனைப் போக்கிற்கு முரணி நிற்கின்றன. இச்சிக்கலுக்கெல்லாம் பின்னர் விடை காண்போம். நாம் அவ்விடையைக் கண்டு கொள்கின்றபோது அங்கே காப்பியத்தின் நோக்கமும் குறியீட்டு வழியாக எதிர்காலம் பற்றி அவன் கூற விரும்பிய செய்திகளும் தெளிவாகப் புலப்பட்டுவிடும்.

## கதை மாந்தரும் உரிமைப் போரும்:

பாண்டியன் பரிசினுள் வரும் கதை மாந்தர் பலர். இவர்களை நாம் மூன்று பிரிவினுள் அடக்கிவிடலாம்.

1. வலிமையைக் காட்டி உரிமையைப் பறிப்பவர்கள்
2. வஞ்சனையால் பிறர் உரிமையைக் கவர்பவர்கள்.
3. தத்தம் உரிமையைப் பிறர் கவராதவாறு காத்துக் கொள்ளப் போராடுபவர்கள்.



1. வலிமை காட்டி உரிமை பறிப்போர்: வேழன்
2. வஞ்சனையால் உரிமை கவர்வோர்: நரிக் கண்ணன், நீலன்.
3. உரிமை காக்கப் போராடுவோர்: கதிரை வேலன், அன்னம், வேலன், ஆத்தா, வீரப்பன், சீனி எனும் கணக்காயர், பொதுமக்கள்.

இம் முத்திறத்து மாந்தருக்கிடையில் நடைபெறும் போராட்டத்தின் மூலகாரணமாக இருப்பது எது? உரிமைதான். வலிமை உரிமையைப் பறிக்க எண்ணுகிறது, எளிமை உரிமையை இழந்து விடுகிறது; பல எளிமைகள் ஒன்றாக இணைகின்ற பொழுது ஒரு முழு வலிமை கிடைத்து விடுகின்றது; அம்முழு வலிமைதான் பிற வலிமைகளைத் துரத்தியடித்துத் தன்னுரிமையைக் காத்துக் கொள்கின்றது என்று காட்டுவதுதான் காப்பியத்தின் உள்ளீடான பொருள் என்பதை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

வேழன் வலிமையின் குறியீடு. இவன் தன்னினும் குறைந்த வலிமையுள்ளவனாகிய கதிரை வேலனின் உரிமையைப் பறித்துக் கொள்கின்றான்.

நரிக்கண்ணன், நீலன் போன்றோர் குறைந்த வலிமையுடையவர்கள். கணக்காயன், வீரப்பன், வேலன் ஆகியோரின் கூட்டு வலிமையின் முன் தோற்கடிக்கப் படுகிறார்கள். இந்த உரிமைப் போராட்டம் தான் இங்கேயோர் கதையாக உருவகம் செய்யப்பட்டுள்ளது என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும்.

தமிழர்கள் தங்கள் உரிமையைப் பெற வேண்டும். எது உரிமை என்பதை முதலில் இனங்கண்டு கொள்ள வேண்டும். தெளிந்த உரிமையைத் தேடியும் பெற வேண்டும்; போராடியும் பெற வேண்டும். இதற்கான செய்திகள் தாம் இக்காப்பியத்துள் குறியீட்டு முறையில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இந்நூலினுள் எல்லாராலும் தேடப்படுவது எது? போராடியும் பெற வேண்டியதாக இருப்பது எது? பாண்டியன் பரிசு என்ற பேழை தான். இப்பேழையும் இதனுள்ளிருக்கும் பொருள்களும் தாம் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## பேழை-குறியீடு:

பாண்டியன் பரிசு என்னும் பேழையுள் என்னென்ன இருக்கின்றன?

1. வாள் இருக்கின்றது.
2. முடி இருக்கின்றது.
3. உரிமைப் பட்டயம் இருக்கின்றது.
4. ஆடைகள், அணிகலன்கள்.
5. பகைவரை ஒழிப்பதற்கான குறிப்பு.

இவை ஐந்தினையும் உள்ளடக்கிய பேழையும் இருக்கின்றது. இவையனைத்தும் வஞ்சனையாளரால் இடம் மாற்றப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது என்கின்றார் கவிஞர். இக்குறியீடு உணர்த்தும் பொருள் என்ன என்பதை இனிக் காண்போம்.

வாள் என்பது எதன் அடையாளம்?—வீரத்தின் அடையாளம்.

முடி என்பது எதன் அடையாளம்?—ஆட்சியுரிமையின் அடையாளம்.

பட்டயம் எதன் அடையாளம்?—ஒரு மனிதனை அல்லது குழுவை எப்பிரிவைச் சார்ந்தோர்—சார்ந்தது என அடையாளம் காட்டுவது.

ஆடைகள், அணிகள் காட்டுவன:- இவை கலை, நாகரிக பண்பாட்டுச் சின்னங்களின் குறியீடாக வருகின்றது.

பேழை எதன் அடையாளம்?: மேலேகூறிய அனைத்தையும் இழந்து நிற்கின்ற தமிழ்நாட்டுக்குக் குறியீடாக வருகின்றது.

தமிழனிடமிருந்த வீரம், ஆட்சியுரிமை, தான் யார் என்ற பெருமை, கலை நாகரிகச் சிறப்புகள் யாவுமே தொலைந்து விட்டன—கடத்தப்பட்டுவிட்டன என்கிறார் கவிஞர்.

வாள் தொலைந்தது என்றால் வீரம் தொலைந்து விட்டது என்று பொருள். முடிதொலைந்துவிட்டது என்றால் ஆட்சியுரிமை தமிழனிடமிருந்து தொலைந்து



விட்டது என்று பொருள். பட்டயம் தொலைந்துவிட்டது என்றால் தான்யார் என்பதையும் அதனை உணரும் அறிவையும் அவன் தொலைத்துவிட்டான் என்று பொருள். ஆடை அணிகளை அவன் தொலைத்து விட்டான் என்றால் தனக்குரிய கலை நாகரிகப் பண்பாட்டுச் சிறப்புகளை அவன் தொலைத்துவிட்டான் என்று பொருள். இவையனைத்தையும் உள்ளடக்கிய பேழையும் தொலைந்துவிட்டது என்றால் வீரம் முதல் பண்பாடு ஈறாக உள்ள அனைத்திற்கும் இடமாக நின்ற நாட்டையும் தொலைத்துவிட்டான் என்று பொருள். (பாவேந்தர் பாடிய காலத்தில் தமிழ் நாட்டிற்கு சென்னை இராசதானி என்பது பெயர்) இந்தப் பேழையை மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்று அன்னத்தை வற்புறுத்தச் சொல்வதன் வாயிலாகக் கவிஞன் எதனைச் சொல்ல விரும்புகின்றான்?

தமிழன் தான் யார் என்பதை உணர்ந்து பண்டைய வீரத்தையும், ஆட்சி உரிமையையும் எய்த வேண்டும். அவனுடைய கலை, நாகரிகப் பண்பாட்டு வளங்கள் மீண்டும் இம்மண்ணில் தழைத்துச் செழிக்கவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் உரிமையோடு விளங்கிய பண்டைத் தமிழகம் மீண்டும் இங்கே மீட்டுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பதுதான். பேழையை மீட்டுக் கொணர்வதன் வாயிலாகப் பண்டைய தமிழகத்தை மீண்டும் இங்கே காணவேண்டும் என்ற தீராவேட்கை தான் பாண்டியன் பரிசு என்னும் பேழையினுள் மறைந்து கிடக்கும் குறியீட்டுச் செய்தி.

தமிழனின் வீரமும், ஆட்சியுரிமையும் தான் யார் என்று எண்ணிப் பார்க்கும் பெருமையும், கலையும்,நாகரிகமும் பண்பாடும், இவற்றை உள்ளடக்கிய நாடும் யாரால் பறிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வரலாற்று ஏடுகளைப் புரட்டுவீர்களேயானால் இக்குறியீட்டின் ஆழத்தையும் அழகையும் கண்டு கொள்வீர்கள். வலிமை மிகுந்த அரசர்களால் வெளிநாடுகளில் இருந்து இங்கே வந்து உறவு பேசி உள்ளே புகுந்த வஞ்சனையாளர்களால் — இவர்களுக்கு இடையிலே நின்று செயல்பட்ட இடைக் கொள்ளயர்களால் மேற்குறித்த அனைத்தும் பறிக்கப்பட்டுள்ளன என்பதை வரலாற்றின் துணை கொண்டு நாம் கண்டறிய முடிகின்றது. இதனைத்தாம்

பாவேந்தர் தம் காப்பியத்துள் வலிமைமிக்க அரசர்களுக்கு வேழனையும், வஞ்சனையாளர்களுக்கு நரிக்கண்ணனையும் இடைக் கொள்ளையர்க்கு நீலனையும் குறியீடாக்கிக் காட்டுகின்றார். கதிர் நாட்டையும் வேழநாட்டையும் கொண்டு தமிழகம் வீழ்ச்சியுற்ற வரலாற்றை எடுத்துக் கூறுகின்றார். பேழையை மீட்டுக் கொணர்வதன் வாயிலாக மலரவேண்டிய புதிய தமிழகத்தைக் குறியீட்டு வகையில் கூறப் போகின்றார்.

## குறியீட்டின் வரலாறு:

இலக்கியங்களில் குறியீடு என்பது ஒரு கலையாக உருப்பெற்று வளர்ந்த வரலாற்றை சங்க இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. எல்லா இலக்கியங்களிலுமே அரைகுறையாகவோ முழுமையாகவோ இக்குறியீடு பேணப்பட்டு வந்துள்ளமையை நாம் கண்டு கொள்ள முடிகின்றது. இத்தகைய குறியீட்டு நெறியை முதன்முதலில் கண்டுபிடித்து வாழ்க்கையில் பயன்படுத்திக் கொண்டவர்கள் கலைநலம் நிரம்பிய புலவர்கள் அல்லர். வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள அறிவார்ந்த முறையில் சிந்தித்த கல்வியறிவில்லா மக்கள்தாம் இக்குறியீட்டுக் கலையைப் பெற்றெடுத்தவர்கள் என்று கூறினால் வியப்பாகக் கூட இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை.

குறியீடு (Symbol)என்பது என்ன? ஓர் அடையாளத்தின் (குறியீட்டின்) மூலமாக அது தொடர்பான ஒன்றையோ பலவற்றையோ. நினைவு கூரச் செய்வதுதான். இதற்கு ஓர் எடுத்துக்காட்டை நாம் காண்போம். அழுக்குத் துணிகளை வெளுத்துத் தூய்மை செய்யும் கல்வியறிவில்லாத கிராமத்து வண்ணான் ஒவ்வொருடைய துணியையும் அடையாளம் கண்டு கொள்வதற்காக வேட்டியின் ஒரு மூலையில் ஓர் குறியிட்டிருப்பதைக் கணடிருப்பீர்கள். மேலிருந்து கீழ்நோக்கி ஒரு கோடு இடப்பட்டிருந்தால் அத்துணி கண்ணன் என்பவரையும், அக்கோட்டின் மேல் ஒரு புள்ளி இடப்பட்டிருந்தால் மாறன் என்பவரையும், இரண்டு கோடுகள் இடப்பட்டிருந்தால் முருகன் என்பவரையும், படுக்கை வசமாகக்கோடு



இடப்பட்டிருந்தால் மணி என்பவரையும், குறிப்பதாகவும் கொள்வார்கள். இவ்வாறாக ஒரு குறியைப் பயன்படுத்தி வேறு ஒன்றையும் (ஒருவரையும்) அது அல்லது அவர் தொடர்பான செய்திகளையும் வெளிப்படுத்துவதுதான் குறியீடு எனப்படுகின்றது.

அவர்கள் ஏன் இக்குறியீடுகளைப் பயன்படுத்தினார்கள்? எழுத்துக்களை அவர்கள் அறிந்திருக்க வில்லை. கல்விக் கண்களை அவர்கள் பெறவில்லை. ஆனால் துணியை அவரவர்க்கு உரிய வகையில் சேர்க்கவில்லை என்றால் தொழில் சிக்கலாகிவிடும். தொழிலும் வாழ்க்கையும் சிக்கலின்றி நடப்பதற்குஎன்ன வழி?ஒரு நெருக்கடியான சூழல் அவர்களைச் சிந்திக்க வைத்தது அதன் பயனாகக் குறியீடுகள் பிறந்தன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். அப்பாமரமக்களின் கையிலிருந்து படித்துணர்ந்த புலவர்களின் கைக்கு இக்குறியீடுகள் வந்தவுடன் அதன்மீது ஒரு கலைத்தன்மை ஏற்றப்பட்டுப் பின்னர் அது குறியீட்டுக்கொள்கை (Symbolism) என்ற தகுதியைப் பெற்றது.

இடுகுறிப் பெயர்கள் கூட ஒரு வகையில் பார்த்தால் குறியீடுகள் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் இவ்விடுகுறிப் பெயர்கள் தன்னை மட்டுமே உணர்த்திக் கொண்டிருக்கும். குறியீடுகளோ தன்னையும் உணத்தும் குறியீடுகளையும் உணர்த்தும். தன்னை உணர்த்தும், போது குறியீட்டுப் பொருள் தோன்றாது. குறியீட்டுப் பொருள் வெளிப்படும் போது தன்னை இழந்து விடும். இது தான் இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாடு.

கல், மண் என்பன இடுகுறிப் பெயர்கள்தாம். இவை முறையே கல்லையும் மண்ணையும் உணர்த்தி நிற்கின்றன. அதாவது தன் பொருளையே உணர்த்தி நிற்கின்றன. ஒரு மனிதன் ‘இந்த மண்ணை வைத்துக் கொண்டு எப்படி முன்னேறுவது’ என்று ஒரு நிலத்தைப் பற்றிக் குறிப்படுவானேயானால் அது தன்னை மட்டுமே உணர்த்தி நிற்கின்றது. இதனையே ஒரு மனிதனைப் பற்றிக் குறிப்பிடுவானேயானால் அப்பொழுது மண் என்பது அறிவு வளர்ச்சியோ–செயல் திறனோ குன்றிய ஒரு மனிதனுக்குக் குறியீடாகி விடுகின்றது.

குறிஞ்சி என்று சொல்கின்ற போது பன்னிரண்டு ஆண்டு கட்கு ஒருமுறை பூக்கும் தாவரம்–கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரத்திற்கு மேல் மட்டுமே வளரக் கூடிய தாவரம் என்பதை உணர்த்துமானால் அது தன்னை உணர்த்துகின்றது என்பது பொருள். ஆனால் குறிஞ்சி என்னும் சொல் ஓர் ஆணும் பெண்ணும் காதல் வயப் பட்டுக் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய செய்தி களைக் குறிக்கின்றது என்றால் அது தன்னை உணர்த் தாமல் வேறொன்றுக்குக் குறியீடாக ஆகி விடுகின்றது என்று பொருள்.

பிறர் அறியாதவாறு மறைத்துத் தன் கருத்தை மற்றவர்க்குப் புலப்படுத்தவும், இக்குறியீடுகள் பயன் படுத்திக் கொள்ளப்படுவதுண்டு. சில வணிகர்கள் பொருள்களின் மீது சில எழுத்துக்களை எழுதியிருப்பார் கள். விலை கேட்டால் அவ்வெழுத்துக்களைப் பார்த்து விட்டு விலை கூறுவர். இடப்பட்ட அவ்வெழுத்துக்கள் உணர்த்தும் பொருள் அவர்க்கும் அவரைச் சார்ந்தவர்க் கும் மட்டுமே புரியும் அப்பொருளின் மீது எழுதியுள்ள எழுத்துக்கள் நமக்கு அறிமுகமான எழுத்துக்களாகக் கூட இருக்கும். ஆனால் அது உணர்த்தும் பொருள் நாம் அறியாதது. அவ்வெழுத்துக்கள் நமக்குத் தம்மை உணர்த்தி நிற்கின்றன. வணிகர்களுக்கோ வேறொன் றையும் உணர்த்துகின்றன. இவையெல்லாம் மனிதன் தன் தேவைக்கேற்பப் படைத்துக் கொண்ட குறியீடு களே. எழுத்தறிவற்ற எளிய மக்களால் கண்டு பிடிக்கப் பட்ட இக்குறியீடுகள் படித்த அறிஞர்களால் போற்றப் பட்டுப் பலகலை நுட்பங்கள் பொருந்தியதாக இலக்கியங் களில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய வேண்டுகின்றேன்.

இத்தகைய குறியீட்டின் தோற்றமும் வளர்ச்சியும், அது இலக்கியங்களில் பெற்ற நிலைபேறும் ஆகிய செய்தி களை ஆராய்வது அன்று நம் நோக்கம். அது நம் வேலையும் அன்று. என்றாலும் ஒரு நூல் முழுவதும் (பாண்டியன் பரிசு) குறியீட்டுச் செய்திகள் நிரம்பி வழிகின்றதைக் காணும் வேளையில் அதன் முழு அழகையும் உணர்ந்து சுவைக்க வாய்ப்பாக இருக்கும் என்ற கருத்தில் தான் இங்கே குறியீட்டின் வரலாற்றைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டினேன். இனி நாம்



பாண்டியன் பரிசு தரும் குறியீட்டுச் செய்திக்குள் நுழைவோம்.

## பாண்டியன்–குறியீட்டுப் பொருள்:

பாண்டியன் பரிசு என்னும் பேழை இழந்துபோன நாட்டுரிமைக்குக் குறியீடாக வருகின்றது என்பதை வலியுறுத்தும் மற்றொரு சான்றையும் காண்போம். வேழமன்னனிடம் அன்னம் பாண்டியன் பரிசு அடை யாளம் கூறுகின்றாள். பேழையுள்ளே இருக்கும் பொருள் பற்றி எல்லாம் கூறுகின்றாள். இறுதியில் அது அரண் மனையுள் எப்பகுதியுள் இருக்கும் என்பதையும் கூறுகின் றாள். இதோ அப்பகுதி.

> 'சேணுயர்ந்த அரண்மனைக்குள் ஆடற் கட்டின்
> தென்னறையில் அப்பேழை இருக்கும் என்றாள்'
>
> 33:2

இங்கே பேழை என்பது அனைத்தையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டின் குறியீடுஎன்பதனைமுன்னரே கண்டோம். சேணுயர்ந்த அரண்மனை என்பது எது? நாவலந்தீவு தான். (இந்தியா) நாவலந்தீவின் எப்பகுதியில் தமிழ்நாடு அமைந்துள்ளது? தென்பகுதியில்தான். நாவலந்தீவின் தென்பகுதியில் தான் தமிழ்நாடு அமைந்துள்ளது. அது தான் தன் எல்லா உரிமைகளையும் இழந்து விட்டாலும் இனத்தை அடையாளம் காட்டி உணர்த்தும் எஞ்சிய சில ஆதாரங்களை வைத்துக் கொண்டு இருக்கின்றது என்பதைக் காட்டத்தான் அரண்மனைக்குள் ஆடற் கட்டின் தென்பகுதியில் அப்பேழை உள்ளது என்கின்றார் கவிஞர்.

அரண்மனை என்பது ஒரு பெரிய பகுதி. அதில் ஒரு சிறிய பகுதியாக விளங்குவது ஆடற்கட்டு. அவ்வாடற்கட்டின் ஒரு பகுதியாக விளங்குவது பேழையிருக்கும் தென்பகுதி அறை. இதனை நாவலந்தீவு என்பது ஒரு பெரிய பகுதி; அதில் ஒரு சிறிய பகுதி திராவிடம் அல்லது தென் னிந்தியா; அதனுள்ளும் தென்பாகத்தில் உள்ள சிறிய பகுதிதான் தமிழ்நாடு இத்தமிழ்நாட்டில்தான் அப்பேழை (பேழையால் பெறப்படும் இனத்தை அடையாளம்

காட்டும் செய்திகள்) உள்ளது என்று பொருத்திப் பாருங்கள். இது குறியீடுதான் என்பது பளிச்சென்று புலப்படும்.

இப்பரிசு பாண்டிய மன்னனால் கதிர் நாட்டுக்கு வழங்கப் பட்டதனால் தான் இது பாண்டியன் பரிசு எனப்பட்டது. இப் பாண்டியன் பரிசு என்ற சொல்லில் கூட ஓர் உட் பொருள் கரந்து நிற்பதை நம்மால் அறிய முடிகின்றது. இது சேரனால் வழங்கப்பட்டதாகவோ சோழனால் வழங்கப்பட்டதாகவோ சொல்லப்படவில்லை. பாண்டி யன் பேரால் இப்பரிசு அழைக்கப்படுவதை மனிதகுல வரலாற்று நோக்கில் பார்த்தால் ஒரு புதிய பொருள் கிடைக்கும். பாண்டியன் என்ற சொல்லின் மூலம் பண்டு என்பதுதான். பண்டு என்பது எதைக் குறிக்கின்றது? வரலாற்றிற்கு எட்டாத ஒரு பழங்காலத்தை குறித்து நிற்கின்றது. வரலாற்றிற்கு எட்டாத பழங்காலத் திலேயே இயற்கை எங்களுக்குப் பரிசாக வழங்கியது தான் இத்தமிழ்நாடு என்று பார்க்கின்ற பொழுதும் இஃதோர் குறியீடேஎன்பதை அறியமுடிகிறது. இயற்கை யால் பண்டே எங்கட்கு வழங்கப்பட்ட தமிழ் நாடுதான் இன்று தன் மக்களால் தொலைக்கப்பட்டுவிட்டது. அதைத்தேடி மீண்டும் கொணர்ந்து பண்டை வாழ்வை மீட்டுருவாக்கம் செய்யவேண்டும் என்பதுதான் கவிஞரின் உள்ளக் கிடக்கை என்பதும் தெளிவாகும்.

பேழை குறியீடாகப் பயன்படுத்தப்படவில்லை என் றால் கவிஞன் இதனை எப்படிக் கூறியிருக்கவேண்டும். கதிர் நாட்டின் ஆட்சியுரிமையைத் தெரிவிக்கும் பட்டயம் ஒன்று உள்ளது. அப்பட்டயம் இருந்த பேழை தொலைந்துவிட்டது. அதனைத் தேடிக் கொணர வேண்டும் என்று கூறினாலே போதும். ஏனெனில் ஆட்சி உரிமைக்குரியவர் அன்னமா நரிக்கண்ணனா என்பதுதான் சிக்கலுக்குரியது. இச்சிக்கலைத் தீர்க்கப் பட்டயம் ஒன்றே போதும். ஆனால் நாம் இங்கே என்ன பார்க்கிறோம். பட்டயத்தோடு முடி, வாள், ஆடை, அணிகலன் பேழை முதலியவற்றை. முடி முதலாகிய ஏனைய பொருள்கள் எதற்காகக் கூறப்படவேண்டும்? உரிமையைக் காட்டும் பட்டயத்தோடு நிறுத்தாமல் முடி, வாள், ஆடை, அணி என்றெல்லாம் கூறப்படுவதுதான்



இது கதிர் நாட்டின் உரிமையைத் தெரிவிக்கும் பேழை யன்று; தமிழ்நாட்டின் இன்றைய அவலத்தை எடுத்துக் காட்ட வந்த குறியீட்டுப் பொருள் என்பதைத் தெளிவு படுத்தி நிற்கின்றது. கதிர் நாட்டின் உரிமைச் சிக் கலைத் தீர்ப்பதுதான் இப்பேழையின் கருத்து என்றால் இதனுள் வாள், முடி, ஆடை அணி ஆகியவற்றைச் சேர்க்காமல் விட்டிருக்கவேண்டும். விட்டுவிட்டால் கதைக்கு எக்குறையும் வந்துவிடாது என்பதையும் நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

## கதை மாந்தரும் குறியீடும்!

இதுவரை பாண்டியன் பரிசு என்ற பேழையின் குறி யீட்டுச் செய்தி என்ன என்று கண்டோம். இப்பேழையை மீட்கவும், உரிமை கோரவுமான பாத்திரங்களும் கூடக் குறியீட்டுப் பொருளாகவே நிற்கின்றனர் என்று கூறி னால் நீங்கள் நம்பக்கூட மறுக்கலாம். ஆனால் அது தான் உண்மை. இதனால்தான் காப்பியத்தின் இறுதி யில் முடியாட்சி ஒழிப்பு, குடியாட்சி ஏற்பு போன்ற செய்திகளைக் கூறாமல் விலக்கி விடுகின்றார். இவ்வாறு விலக்கியதற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. அதனையும் காண்போம்.

வேலன் கதைத் தலைவன் என்பதும், அன்னம் கதைத் தலைவி என்பதும் இருவருக்கும் இடையில் காதல் என்ப தும், இருவரும் ஒருவரையொருவர் எண்ணி உருகினர் என்பதும், இது ஒரு கதை போல விளங்க வேண்டுமே என்பதற்காகச் செய்யப்பட்ட புறக்கோலந்தான். இதன் அகக்கோலம் என்ன என்பதையும் நாம் காண வேண்டும். இக்காப்பியத்துள் வரும் கதை மாந்தர்களை வலிமையால் உரிமையைக் கவர்பவர்கள், வஞ்சனையால் உரிமையைக் கவர்பவர்கள், உரிமையைக் காக்கப் போராடுபவர்கள் என்று மூன்று பகுதியினராகப் பிரித்துக் காட்டினேன். மூன்றாவது பிரிவினருள் யார் யார் வருகின்றனர்? அன்னம், ஆத்தா, வேலன், கணக்காயன், வீரப்பன், வீரப்பன் தோழர்கள், கணக் காயன் மாணாக்கர், பொதுமக்களிற் சிலர் என இவர்கள் தாம். பாண்டியன் பரிசு பேழையைத் திரும்பக் கொண்டு வர-அதாவது பழந்தமிழகத்தை மீட்டுருவாக்கம் செய்யப்

போராடுபவர்கள் இவர்கள்தாம் என்பதை மறவாமல் நினைவிற் கொள்ளுங்கள்.

ஒரு நாட்டின் உரிமையை மீட்டுப் பழம் பெருமையை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்றால் ஒரு தலைமை வேண்டும். தலைமையின் கீழ் நின்று இயங்கும் இயக்கங்கள் வேண்டும். மக்களுக்கும் மீட்டுருவாக்கத்தில் ஆர்வம் வேண்டும். அப்பொழுதுதான் வெற்றியை எளிதாக அடைய முடியும். இந்திய விடுதலைப் போராட்டத்தை இப்பொழுது நாம் நினைவு கூர்வோம். இந்திய விடுதலைக்குப் பல இயக்கங்கள் பாடுபட்டன. பொதுத்தலைவராகக் காந்தியார் ஏற்றுக் கொள்ளப்பட்டார். மக்களும் தம் விடுதலை வேட்கையை வெளிப்படுத்தினர். மக்கள்- இயக்கம்- தலைமை இவற்றின் கூட்டு முயற்சியின் பலன் விடுதலையாகக் கனிந்தது. இதனை நினைவில் கொண்டு பாண்டியன் பரிசில் வரும் குறியீட்டுச் செய்தியை நோக்குவோம்.

பாண்டியன் பரிசில் மீட்டுருவாக்கப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்போரில் வீரப்பனும் அவன் தோழர்களும் ஒரு பிரிவினர். சீனி என்னும் கணக்காயனும் அவன் மாணாக்கரும் ஒரு பிரிவினர். பொதுமக்கள் ஒரு பிரிவினர். இவர்கள் அனைவரும் வேலனைத் தலைவனாக ஏற்றுக் கொள்கின்றனர். வேலன் தலைமையில் நடந்த போராட்டத்தில் பேழை மீட்கப்பட்டு விட்டதாகக் கதை சொல்கிறது. பேழைமீட்டல் என்பது என்ன? இழந்த உரிமையைத் தமிழர் மீண்டும் பெறுவதுதான். இவ்வுரிமைப் போரையும், இவ்வுரிமைப் போரை நிகழ்த்திய குழுவினர் (இயக்கம்) பற்றிய குறியீட்டுச் செய்தியையும் விரிவாக நோக்குவோம். முதலில் வீரப்பன் அவன் தோழர்கள் பற்றிப் பார்ப்போம்.

## *வீரப்பனும் தலைமறைவு இயக்கங்களும்:*

வீரப்பன் திருடன் என்று அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவன் எங்கும் திருடியதாகக் காப்பியத்தில் காட்டப்படவில்லை என்றும், அவன் திருந்தி நாடு மீட்கும் நல்ல பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளான் என்றும் முன்னரே கண்டோம். அவனுடைய நடிவடிக்கைகளை



விரிவாகப் பார்த்தால் புதிர் தானே விளங்கிப்போகும். அவனும் அவனுடைய தோழர்களும் மிக உயரிய அரசியல் கோட்பாடுகளை விரிவாகப் பேசிய செய்திகளையும் முன்னரே எடுத்துக் காட்டினேன். பழம் பஞ்சாங்கத்தைக் கிழித்துப் போடவும், புதிய பஞ்சாங்கம் படைக்கவும் வல்ல அரசியற் கோட்பாட்டின் தூதுவர்களாக இவர்கள் இனங் காட்டப்படுகின்றனர்.

வீரப்பனுடைய செயற்பாடுகளை உற்று நோக்கினால், அவன் பெரும்பாலும் அரண்மனை வட்டாரத்தில் சுற்றித்திரிகிறான் என்பது தெரியவரும். வேழன் படையெடுப்பாலும் நரிக்கண்ணன் வஞ்சனையினாலும் நாடு குழப்பத்திற்கு இலக்காகி நிற்கும் வேளையில் அவன் அரண்மனை வட்டாரத்தில் சுற்றித் திரிகிறான். அதுவும் மாற்றுடையில் வேடமிட்டுத் தன்னை யாரென்று காட்டிக் கொள்ளாமல்தான் திரிகின்றான். அவ்வாறு மாற்றுடையில் திரிந்தபோதுதான் அடையாளம் தெரியாமல் நரிக்கண்ணனின் ஏவலாள் பேழையை வீரப்பனிடம் கொடுக்கிறான். ஆக ஏதோ அரசியற் காரணங்களை மனத்துட்கொண்டுதான் அரண்மனை வட்டாரத்திலேயே சுற்றித் திரிகிறான் வீரப்பன்.

பேழை வீரப்பனிடம் கிடைத்துவிட்டது. அப்பேழை யாருக்கு உரியது என்பதும்கூட அன்னமும் ஆத்தாவும் பேசிய பேச்சிலிருந்து வீரப்பனுக்கு விளங்கிவிட்டது. எனவே அதனைப் பத்திரமாகப் பதுக்கிவிட்டான். இந்நிலையிலும் நரிக்கண்ணன் ஆள்கள், வேழ மன்னன் ஆணையின்படி பேழை தேடும் ஆள்கள் சுற்றித் திரிகின்ற அரண்மனை வட்டாரத்தில் வீரப்பன் மாற்றுடையில் சுற்றித் திரிகின்றான். அந்நேரத்தில் பிறர் அறியாமல் வீரப்பன் வெளியேறிய போது ஆத்தாவினால் துரத்தப்பட்டுத் தன் கணுக்காலை இழக்கின்றான். இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? வீரப்பன் அரண்மனை வட்டாரத்தில் சுற்றித் திரிவது திருடுவதற்காக அன்று; அரசியற் காரணங்களுக்காகவே என்பதுதான். திருடுவதுதான் நோக்கம் என்றால் அரண்மனையில் திருடியதாகவோ திருட வந்ததாகவோ கவிஞன் கூறியிருக்கவேண்டும். ஆனால் அப்படி எங்கும் கூறப்படவில்லை.

அன்னம் மரத்தடியில் அயர்ந்து உறங்கும் வேளையில் அங்குத் துறவியின் வேடத்தில் வருகின்றான் வீரப்பன். அன்னம் விழிக்கும் வரை காத்திருக்கின்றான். பின்னர் பேழைபற்றிக் குறிப்பிட்டு உனக்குரிய ஆடவனை வரச் சொல் என்கின்றான். அதன் பின்னர் வேறொரு இடத்தில் ஒற்றை மாட்டுவண்டியில் வந்து வேலன் காதில் மறைவாகச் (இரகசியமாக) சில செய்திகளைச் சொல்கின்றான்.

நரிக்கண்ணனும் அவன் ஆள்களும் பூதமாக வர இருப்பதை அறிந்ததும் தன்னுடைய தோழர்களை எல்லாம் திரட்டிப் பூதமாக வருவாரைக் கொல்ல ஏவுகின்றான். இவ்வாறாக அரசியல் நடவடிக்கைகளில் எல்லாம் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான் வீரப்பன். இவனுடைய அரசியல் நடவடிக்கைகளைப் பார்க்கின்ற பொழுது கதிரைவேல் மன்னனின் ஆட்சி அவ்வளவு சிறப்பானதாக இல்லை என்பதும் உறுதிப்படுகின்றது.

வீரப்பனையும் அவனுடைய தோழர்களையும் திருடர்கள் என்று காட்டியதனால் அவர்கள் தலைமறைவு வாழ்க்கை தான் நடத்தியிருக்க முடியும். ஒரு வேளை மக்களோடு வந்து கலந்து கொள்ள வேண்டும் என்றால் மாறு வேடமிட்டுத்தான் வரமுடியும். நாம் பெரும்பாலும் வீரப்பனை மிகுதியாக வேடமிட்ட நிலையிலே தான் காண்கின்றோம். இந்தச் செய்திகளின் உட்பொருள் என்ன? எந்த விடுதலைப் போராட்டத்திலும் இரண்டு இயக்கங்கள் இருக்கும். ஒன்று தீவிரவாத இயக்கம் அல்லது தலைமறைவு இயக்கம். மற்றொன்று வெளிப்படையான இயக்கம். நாம் இந்திய விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை ஆராய்ந்தால் தலைமறைவாக இயங்கிய தீவிரவாத இயக்கங்கள் இருந்ததையும், வெளிப்படையாக மிதவாத இயக்கங்கள் இருந்ததையும் காண்கின்றோம். இங்கே கதிர் நாட்டின் விடுதலைப் போரில் (தமிழ்நாட்டின் இன மீட்டுருவாக்கப் போரில்) வீரப்பன் எதன் குறியீடாக வருகின்றான் என்றால் தலைமறைவு இயக்கங்களின் குறியீடாக வருகின்றான் என்று தயங்காமல் கூறலாம். அப்படியானால் வெளிப்படையான இயக்கங்களின் குறியீடு எது என்ற கேள்வி பிறக்கும்.



## வெளிப்படையான இயக்கங்களின் குறியீடு:

சீனி என்னும் கணக்காயரும், அவருடைய மாணாக்கரும் ஆத்தாவும் வெளிப்படையான இயக்கங்களின்குறியீடாக காட்டப்படுகின்றனர். இதனை அவர்கள் இயங்கும் முறை கொண்டு தெளிவாக அறியலாம். சீனி எனும் கணக்காயர் நாட்டின் நிலைபற்றிப் பேசுகின்றார்; கேட்டுப் பாருங்கள்.

சீனிஎனும் கணக்காயர் வீற்றி ருந்தார்
    சேணுயர்ந்த ஆலடியில்; எதிரில் சிங்கம்
போனிமிர்த்த பார்வையினான் வேலன் மற்றும்
    புலிஇளைஞர் அமர்ந்திருந்தார்; கணக்காயர்தாம்
தேனிகர்த்த தமிழாலே புதிய செய்தி
    செப்பினர்: இளைஞர்களே! அன்புள் ளோரே!
ஏனிந்த நாட்டின்மேல் வேழ நாட்டான்
    எழுப்பினான் தன்படையை? அதுவு மன்றிப்

பெருமைமிகு கதிரைவேல் மன்னன் மீது
    பின்னிருந்தே எவன்ஈட்டி தன்னை எய்தான்?
அரசியினைக் கொன்றவன்யார்? அரசர் பெற்ற
    அன்னத்தைக் கொலைசெய்ய நினைப்போன் யாவன்?
திருநிறைந்த கதிர்நாட்டின் அரச னென்று
    திகழுமுடி தனைச்சூட இந்த நேரம்
அரண்மனையின் நடுவினிலே வேழ நாட்டின்
    அரசனெதிர் நின்றிருப்போன் எவன்கண் டீரோ?

கதிர்நாட்டின் மேலந்த வேழ நாட்டான்
    கடும்பகைகொள் ளச்செய்தோன் நரிக்கண்ணன்தான்;
முதுகினிலே பின்னின்றே ஈட்டி எய்தோன்;
    மொய்குழலைக் கொலைசெய்தோன், அன்னந் தன்னை
எதிர்ப்பட்டால் கொலைசெய்ய இருப்போன் அன்னோன்;
    இப்பொழுது மணிமுடியும் பெறப்போ கின்றான்;
மதியுடையாய்! வேலனே உன்அன் னைக்கும்
    மாகொடுமை நரிக்கண்ணன் ஆக்கக் கூடும்!
18:1-3

உன்அன்னை ஆத்தாவைக் காப்பதற்கே
    உடனேபோ! இந்தாவாள்! குதிரை தந்தேன்!
என்கலைகள் உன்னுயிரைக் காக்க; நாட்டின்
    இகழ்ச்சியினைப் போக்குகநீ! புகழ்ச்சி கொள்க.
19:1

இவ்வாறுமக்களுக்குஎழுச்சியூட்டுகின்றான்கணக்காயன்.

நாட்டின் நிலையை, நாடாள்வார் வஞ்சனையைத் தோலுரித்துக் காட்டுகின்றான். இதனை எதிர்த்தாக வேண்டும் என்று குரல் மட்டும் கொடுக்கவில்லை. குன்றனைய வேலனுக்குக் குதிரையும் கூர்வாளும் கூடக் கொடுக்கின்றான். கூடவே அழைத்துச் செல்ல இளைஞர் கூட்டம் ஒன்றையும் கொடுக்கின்றான். இவற்றை எல்லாம் எங்கோ மலைக்குகையில் மறைவாக இருந்து கொண்டு அவன் செய்யவில்லை என்பதை நீங்கள் நினைவிலே கொள்ள வேண்டும். மாணாக்கர் பலர் கூடும் ஆலமரத்தடியில் தான் அத்தனையும் செய்கின்றான்.

நரிக்கண்ணனுடைய ஆள்கள் (வேழநாட்டார்) தம் குடிசையைச் சூழ்ந்து கொண்டதும் ஆத்தாவும், அன்னமும் மாற்றுடையில் வெளியேறிச் சீனி எனும் கணக்காயரிடம் வருகின்றனர். நிலையை விளக்கியதும் கணக்காயர் கூறுகின்றார்—

வேலவனோ உமைக்காக்க அங்கு வந்தான்;
  வேலவரை எதிர்த்துப்போர் இடவு மானான்:
நாலைந்து பேர்இளைஞர் துணைக்குச் சென்றார்;
  **நரிக்கண்ணன் தெரிந்துகொள்வான் இனி**
**யென் நோக்கம்**

என்னையவன் சிறைப்படுத்த எண்ணும் முன்னம்
  யாமெல்லாம் மாற்றுருவத் தோடு சென்று
மன்னவனாம் வேழவனைத் தனியே கண்டு
  மங்கைநிலை கூறுவது நல்ல தென்றார்;
நன்றென்றார் இருவருமே, உருவம் மாற்றி
  நடந்தார்கள் மூவருமாய் அரண்மனைக்கு

27: 1,2

'நரிககண்ணன் தெரிந்து கொள்வான் இனியென் நோக்கம்' என்ற தொடரே கணக்காயனின் அரசியற் செயற்பாட்டை விளக்கிவிடுகின்றது. என்னை அவன் சிறைப்படுத்த எண்ணுவான் என்று கூறுவது கணக்காயனின் தீவிரமான செயற்பாட்டை நன்கு துலக்குகின்றது. தீவிரமாகச் செயற்படும் கணக்காயன் வெளிப்படையாகச் செயற்பட்டவனேயன்றி தலைமறைவாகச் செயற்பட்டவன் அல்லன் என்பதை அன்னம் ஆத்தா இருவரையும் வேழ மன்னன் அரண்மனைக்கே அழைத்து



வருவதும், நரிக்கண்ணன் வஞ்சனைகளை மன்னனிடமே முகத்துக்கு நேரே எடுத்துக் காட்டிப் பேசுவதும் நன்கு புலப்படுத்தி நிற்கின்றன. கணக்காயன் அரசன் (வேழன்) அறியச் செயற்படுவதனால்தான் கணக்காயனும், அவன் மாணாக்கரும், ஆத்தாவும் வெளிப்படையான இயக்கங்களின் குறியீடாக ஆக்கப்பட்டுள்ளனர் என்று கொள்ளவேண்டியுள்ளது. இதனை இன்னும் ஓர் ஒப்பீட்டில் தெளிவுபடுத்தலாம்.

## *ஒப்பீடு காட்டும் உண்மை:*

வேலன் வீரப்பனிடமிருந்து பேழையைப் பெற்று எடுத்துக்கொண்டு வரும்பொழுது நீலனுடைய ஆள்கள் பேழையைக் கவர்ந்து கொள்ளப் போரிடுகின்றார்கள். இச்செய்தியை வீரப்பனின் தோழன் ஒருவன் விரைந்து சென்று வீரப்பனிடம் கூறுகின்றான். வீரப்பன் துறவியாக வேடமிட்ட நிலையில் இருக்கின்றான். தோழனுக்கு வீரப்பன் என்ன சொல்கின்றான்?

'துறவிஉளங் கலங்கினான்; வேழ வன்பால்
சொல்லுகபோய் இதைஎன்றான்; சென்றான் அன்னோன்'

82:1

பேழை பறிபோக நேரிடலாம். வீரப்பன் உள்ளம் கலங்குகின்றான். மிகவும் இக்கட்டான சூழ்நிலைதான். தானே நேரிற் சென்று வேலனுக்குத் துணையாகப் போரிடலாம் என்றால் அதுவும் முடியாது? ஏனெனில் அவன் கணுக்காலை இழந்தவன். இந்த இக்கட்டான நிலையில் அவன் பேசும்பேச்சு நம் கவனத்திற்கு உரியது. வீரப்பன் தோழனிடம் என்று கூறுகின்றான் 'இதைப் போய் வேழ மன்னனிடம் சொல்'. ஏன் தானே சென்று வேழ மன்னனிடம் கூறினால் என்ன? அவனால் வேழமன்னன் அவைக்கு வர முடியாது. ஏனெனில் அவன் தலைமறைவு இயக்கங்களின் குறியீடு. அதனால் தான் வேறொருவனை வேழமன்னன்பாற் சென்று கூறுமாறு கூறுகின்றான். ஆனால் சீனி என்னும் கணக்காயன் நிலை அப்படி இல்லை. தங்களுக்கு நேர்ந்த இன்னலை அன்னமும் ஆத்தாவும் கூறியபோது அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு வேழமன்னன்

அரண்மனைக்கே வந்து விடுகின்றான். காரணம் என்ன? அவன் வெளிப்படையான இயக்கங்களின் குறியீடு என்பதனால் தான்.

## வேலன்-குறியீட்டுப் பொருள்:

வீரப்பன் தலைமறைவு இயக்கங்களின் குறியீடு என்றும், கணக்காயன் வெளிப்படையான இயக்கங்களின் குறியீடு என்பதும் பெறப்பட்டது. இவ்விரு இயக்கங்களும் ஒன்றாக ஒரு தலைமையை ஏற்றுப் போரிட வேண்டும் என்றும் அப்பொழுது தான் வெற்றி கிட்டும் என்பதனையும் கவிஞன் காட்டத் தவறவில்லை. தன்னுடைய குறியீட்டு அமைப்பை முழுமையாகவே வளர்த்துச் செல்கின்றான். வீரப்பன், கணக்காயன் ஆகியோர் அமைப்புகள் நரிக்கண்ணனால் விடப்பட்ட பூதங்களை அழிப்பதற்காக ஒருங்கிணைந்து வேலன் தலைமையிற் செல்கிறதாம். பாவேந்தர் பாடுகின்றார்—பாட்டின் தொடக்கமே பூதத்தை அழிக்கப்புறப்பட்டதுபோலத்தோன்றவில்லை. அடிமைப்பட்ட நாட்டை விடுவிக்கப் புறப்பட்டது போலத் தோன்றுகின்றது.

பறந்ததுவே லன்குதிரை; அன்னம் ஓர்பால்
 பாய்ந்தேறித் தன்பரியைப் பறக்கச் சொன்னாள்;
**பிறந்ததுநம் விடுதலைநாள்; பிறந்த தின்பம்;**
 **பிளந்ததுபோய் ஆள்வாரின் சூழ்ச்சிப் பாறை**
மறந்ததும் உண்டோநம் வாளும் தோளும்
 மாற்றலர்கள் ஏற்றுவந்த பழியை என்றே
அறைந்தார்கள் வெல்முரசம்; தோழர் எல்லாம்
 அடடாஎன் றரண்மனைக்குள் திரண்டு வந்தார்.

கணக்காயர் வந்திட்டார்; தம்பால் நாளும்
 கற்பாரும் வந்திட்டார்; வீரப் பர்க்குத்
துணைத்தோழர் வந்திட்டார்; நாட்டின் அன்பு
 சுரப்பான நெஞ்சத்து மறவர் எல்லாம்
பணிக்காக உயிர்என்று கொதித்து வந்தார்
 பகையாக வந்தவரைத் தொகையாய் வெட்டிப்
பிணக்காடு செய்கருவி அனைத்தும் தீட்டிப்
 பிழைகாட்ட வழியின்றித் தொழில்பு ரிந்தார்.

71:5,6



முதலில் குதிரை ஏறி வருவதுயார்? வேலன், அடுத்து அன்னம் அதன் பின்னர்க் கணக்காயர், அவரிடம் கற்கின்ற மாணாக்கர்,வீரப்பனின் தோழர்கள்,நாட்டின் மீதுஅன்புகொண்டமறவர்கள் எல்லாரும் வருகின்றனர். யார்தலைமையில்? வேலன் தலைமையில் தான்.அவன் தானே படையின் முன்னணியில் முதல்வனாகவருபவன். இங்கே நாம் காணுகின்றோம்? எல்லாரும் ஒருங்கிணைந்து வருவதைப் பார்க்கிறோம். தலைமறைவு இயக்கத்தாரும் (வீரப்பன் தோழர்கள்) வெளிப்படை இயக்கத்தாரும்(கணக்காயனும் மாணாக்கரும்) இயக்கம் சாராத நாட்டுப்பற்றுடையவரும் வேலன் தலைமையில் புறப்பட்டு வருகின்றார்கள். எதற்காக? பூதங்களில் உருவிலே புறப்பட்டிருக்கும் பகையைப் பூண்டோடு ஒழிப்பதற்குத் தான்.

பேழைகூட இன்னும் வீரப்பனிடமிருந்து வேலன்கைக்கு வந்து சேரவில்லை. வேழமன்னனின் அதிகாரம் கதிர் நாட்டில் கொடிகட்டிப் பறக்கவே செய்கின்றது. இந்நிலையில் இவர்கள் என்ன சொல்லிப் புறப்படுகின்றார்கள். கதையோ பூதங்களை அழிக்கப் புறப்பட்டிருப்பதாகப் பேசுகின்றது. ஆனால் கவிஞன் என்ன பேசுகின்றான்.

'பிறந்ததுநம் விடுதலைநாள்; பிறந்த தின்பம்;
 பிளந்ததுபோய் ஆள்வாரின் சூழ்ச்சிப் பாறை'

என்றுபாடுகின்றார்களாம். இவர்கள் பேழைக்குக் குறுக்கே நிற்கும் நரியின் கூட்டத்தாரை அழிக்கப் புறப்பட்டார்களா? வேழனின் அதிகாரத்தை ஒழித்து கதிர் நாட்டின் விடுதலையைப் பெறப்புறப்பட்டார்களா என்ற ஐயம் நமக்கு வந்து விடுகின்றது. ஒன்று நமக்குப் புலப்படுகின்றது. பேழை பேழை என்று பேசப்பட்டாலும் அதற்குள் மறைந்திருப்பதென்னவோ தமிழின விடுதலையும் மீட்டுருவாக்கமும்தாம். இதனால்தான் 'பிறந்தது நம்விடுதலை நாள்' என்று வேலன் குழுவினர் குதிக்கிறார்கள். 'ஆள்வாரின் சூழ்ச்சிப்பாறை பிளந்தது' என்கிறார்கள். 'கிடைத்தது நம் பாண்டியனார் பரிசாம் பேழை' என்றுபாட வேண்டிய வாய்களைப் 'பிறந்தது நம்விடுதலை நாள்' என்று பேசவைத்த கவிஞனின் நோக்கம் இப்பொழுது தெளிவாக விளங்கி

விட்டது. ஆம்! குறியீட்டுப்பொருள் வெளிப்படையாகி விட்டது.

## இந்திய விடுதலைப்போர்-ஓர்ஒப்பீடு:

இந்திய விடுதலை இயக்கத்தை நீங்கள் மீண்டும் ஒரு முறை எண்ணிப் பாருங்கள். தீவிரவாத தலைமறைவு இயக்கங்கள்-வெளிப்படையான இயக்கங்கள்-இயக்கம் சாராப் பொதுமக்கள் எல்லாரும் காந்தியாரின் சீரிய தலைமையின்கீழ்த் திரண்டதையும், போராடியதையும், பொன்னான விடுதலையைப் பெற்றதையும் எண்ணிப் பாருங்கள். ஆழமாக எண்ண எண்ண இதன் நிழல் பாண்டியன் பரிசில் கூறப்படும் வீரப்பனும் அவன் கூட்டத்தாரும், கணக்காயனும் அவன் கூட்டத்தாரும், வேலனும், பொதுமக்களும் எனவரும் இவர்கள் மீது படிந்திருப்பதைக் கண்டு கொள்ள முடியும். கண்டு கொள்ளவே பேழையும், பேழைக்குள் இருப்பனவும், இதனை மீட்க எழுந்துள்ள கதை மாந்தர்களும் குறியீடாக நிற்கும் அழகைக் கண்டுகொள்ள முடியும். கண்டு கொண்டால் பாவேந்தரின் வரலாற்று வழிப்பட்ட பார்வையும், குறியீட்டு நெறிப்பட்ட இலக்கியக் கொள்கையும் தெற்றென விளங்கி இன்புறுத்தும்.

## அன்னம் குறியீட்டுப்பொருள்:

எல்லா இயக்கங்களும் காந்தியார் தலைமையில் திரண்டு போராடியதன் பலன் விடுதலை. இவ்விடுதலை யாருக்குரியது? இயக்கங்களுக்கா? தலைமை பூண்ட காந்தியார்க்கா? மக்களுக்கா? இது என்ன பொருளற்ற கேள்வி? விடுதலை மக்களுக்குத்தான் என்றே விடையிறுப்பர். இப்பொழுது நாம் மீண்டும் பாண்டியன் பரிசிற்குள் வருகிறோம். பாண்டியன் பரிசில், வீரப்பன், கணக்காயர், அவரவர் தம் கூட்டத்தார் வேலன் தலைமையில் இணைந்து பேழையை மீட்டு விடுகின்றனர். இப்பேழையாருக்குரியது? இந்தியா விடுலை யாருக்குரியது என்று கேட்டபோது தயங்காமல் 'மக்களுக்கே' என்று விடையிறுத்துவிட்டோம். இது போலவே பேழையாருக்குரியது என்ற வினாவிற்கும் நம்மிடம் தயக்கம் இல்லை. அன்னத்திற்கு உரியது



என்றே கூறுவோம். இப்பொழுது ஒரு உண்மையின் பக்கத்தில் தெளிவாக வந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். விடுதலையும் பேழையும் ஒன்றுதான். காப்பியத்தில் பேழையாக வருகிறது. இந்திய வரலாற்றில் விடுதலை என்று பேசப்படுகின்றது. விடுதலை மக்களுக்குரியது என்றால் பேழையும் மக்களுக்குரியதாகத்தானே இருக்க வேண்டும். இங்கே மக்களை உணர்த்தும் குறியீடாகத்தான் அன்னம் என்ற பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. அதனால்தான் மீட்கப்பட்ட உரிமைப் பொருளாகிய பேழை அன்னத்திடம் வேலனால் தரப்படுகின்றது. அன்னத்திடம் தரப்பட்டது என்றால் மக்களிடம் தரப்பட்டது என்று பொருள். விடுதலை (பேழை) நேரிடையாக மக்களிடம் (அன்னத்திடம்) வழங்கப்பட்டு விட்டது என்பது குறியீட்டின் உள்ளுறைப் பொருளாக வருவதனால்தான் பாவேந்தர் ஏனைய நூல்களாகிய வீரத்தாய், புரட்சிக்கவி, கடல்மேற்குமிழிகள் ஆகிய நூல்களில் காட்டிய முறைப்படி முடியாட்சி ஒழிப்பையும் குடியாட்சி ஏற்பையும் இக்காப்பியத்தின் இறுதியில் பாடாமல் விட்டுவிடுகின்றார். மக்கள் விடுதலையைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொள்வதுதானே குடியாட்சியின் அடிப்படை! முடியாட்சியின் முடிவு!

## மேலும் சில சான்றுகள்:

பேழையும் கதை மாந்தரும் குறியீட்டு வழி நின்று வேறு பொருள் சுட்டுவதனைக் காட்டும் இன்னும் சில சான்றுகளையும் காண்போம். அன்னம் தன்னாட்டு மக்களிடம் சென்று 'என்பேழையினைத் தேடித்தரமாட்டீர்களோ' என்று முறையிடுகின்றாள். அப்பேழையைத் தேடித் தருவதன் வாயிலாக எனக்குற்ற துன்பத்தைத் தீர்த்தருள்வீர் என்றெல்லாம் வேண்டுகின்றாள். அப்பொழுது மக்கள் அவளுக்கு ஆறுதல் மொழி பல கூறுகின்றனர்—எவ்வாறு கூறினர்?

> சீரடையும் விழியுடையாள் தெருக்கள் தோறும்
> நிகழ்த்து மொழி கேட்டவர்கள் இருகை ஏந்திக்
> **சீரடைய வேண்டுமெனில் எல்லா மாண்பும்**
> **சென்றடையும் எம்திருவே இந்நாள் இந்தப்**

**பாரடையும் தீமையெலாம் நீங்கி நல்ல**
**பயனடைய வேண்டுமெனில் நல்ல றந்தான்**
**பேரடைய வேண்டுமெனில் பேழை வேண்டும்**
**அதைத்தேடும் பெருங்கடமை எமக்கே என்றார்.**

61:3

இவ்வாறு மக்கள் கூறுகின்றார்களாம். கவிஞர் இப்படித்
தான் கூறுகின்றார். 1 சீரடைய வேண்டுமெனில் பேழை
வேண்டும். 2 பாரடையும் தீமையெலாம் நீங்க வேண்டும்
என்றால் பேழை வேண்டும் 3 இவ்வுலகம் நல்ல பயனை
யடைய வேண்டும் என்றால் பேழை வேண்டும் 4 அறம்
தனக்குரிய பெயரை நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்
என்றால் பேழை வேண்டும் பேழை தேவை என்பதற்
கான காரணங்களை மீண்டும் ஒருமுறை படித்துப்
பாருங்கள். இது கதிர் நாட்டின் இளவரசி அன்னத்
தின் உரிமை பற்றிய செய்தியாகவா விளங்குகின்றது.
கதிர் நாட்டு மக்களின்-இல்லை தமிழ் நாட்டு மக்களின்
சிக்கலுக்கோர் விடிவு தேடும் செய்தியாக அல்லவா
தெரிகின்றது. கதிர் நாடு அடைந்துள்ள தீமைகள்
அகல வேண்டும் என்றோ கதிர் நாட்டு மக்கள் வாழ்வில்
நல்ல பயன் விளைய வேண்டும் என்றோ பேசப்பட
வில்லை. உலகம் (பார்) என்ற பொதுச் சொல் இங்கே
பயன்படுத்தப் பட்டிருப்பதை எண்ணிப் பாருங்கள்.

அன்னத்தின் விருப்பத்தைக் கேட்ட பொதுமக்கள்
அவளுடைய ஆட்சி உரிமையை அவளுக்குப் பெற்றுத்
தர விரும்பினர் என்றால் அவர்கள் இப்படிப் பேசி
இருக்க மாட்டார்கள். வேறு எப்படிப் பேசி இருப்பார்
கள். என்கிறீர்களா? சொல்வேன்.

அன்னமே! நீ வருந்தாதே!
நீரடையும் விழியுடைய நாங்கள் எப்படியும் கண்டு
உனக்குரிய பேழையை அதனைக் கொண்டு உன்
பிடித்துத் தருவோம். இக்கதிர் நாட்டின் அரசியாக
உரிமையை நிலைநாட்டி என்றல்லவா கூறியிருப்
மணிமுடி புனைந்து கொள்க' உலகின் தீமை நீங்க, உலகம்
பார்கள். இதற்கு மாறாக உலகில் நிலைபெற என்றெல்
நற்பயனை எய்த' அறம் ஏன்? அன்னத்தின் வேண்டு
லாம் நீட்டி முழக்குவது நேரிடையாக விடை
கோளுக்குப் பொதுமக்கள்
**சொல்லாது தவிர்க்கிறார்களே இது ஏன்?**



அன்னம் தன்னை ஒருவன் மணந்து கொள்ள வேண்டு மானால் அவன் பேழையைக் கொண்டு வருபவனாக இருக்க வேண்டும் என்று கூறினாள். பேழை கொண்டு வருவோனே கணவன் என்பதைப் பொதுமக்கள் அறிந்தே இருப்பர். ஏனெனில் இதனை அவள் அறிவித்தது வேழ மன்னனின் அவையில்; மறைவாக அன்று. பொது மக்களிடம் அன்னம்,

'தொண்டிருந்த உள்ளத்தீர் மறவர் மக்காள்
தொல்லையினைத் தீர்த்திடுவீர்'

என்று வெளிப்படையாகவே கேட்கின்றாள். அவளுக்கு வந்த தொல்லை என்ன? இரண்டு தொல்லைகள் ஒன்று: நரிக்கண்ணன் மகன் பொன்னப்பனை மணந்து கொள் ளாமல் தவிர்க்க வேண்டும். இதற்குத்தான் அவள் பேழை கொண்டு வருவோனையே மணப்பேன் என்று கூறினாள். இரண்டு: கதிர்நாட்டின் உரிமை தனக்கே உரியது என்றும் நரிக்கண்ணனுக்கு உரியதில்லை என்றும் நிலை நாட்டுவது. இவ்விரண்டு தொல்லைகள் பற்றியும் பொதுமக்கள் ஏதும் கூறாது நாடுநலம்பெற நாங்கள் பேழையைத் தேடுவோம் என்று கூறுவது இயல்புக்கு மாறாக இல்லையா? இது இயல்பற்ற பேச்சுத்தான். இது அன்னம் வேலன் காதல் கடிமணம் பற்றிப் பேச எழுந்த காப்பியம் அன்று; தமிழின மீட்டுரு வாக்கத்தைக் குறியீட்டு நெறியில் சுட்டிக்காட்ட எழுந்த காப்பியம் என்பதைக் காட்டிக் கொடுக்கின்றது.

அன்னம் முன்னர் என்ன கூறினாள். பேழைதான் திருமணத்தின் திறவு கோல் என்று பேசினாள்.

'ஒருத்தன் எனை மணப்பதெனில் அன்னோன் என்றன்'
உயர்பேழை தனைத்தேடித் தருதல் வேண்டும்'

40:2

'முன்பாண்டு வையத்தில் முறைநடாத்தி
முத்தாண்டான் எனும்பெயரை நிலைநிறுத்தி
தென்பாண்டி நாட்டான்பால் என்மு தாதை
சிறைச் சோழனைவென்று பெற்ற தான
என்பாண்டியன்பரிசை எனக்களிப்போன்
எவனெனினும் அவனுக்கே உரியேன் ஆவேன்
அன்பாண்டா ரே இது என் உறுதி யாகும்'

41:1

என்கின்றாள் அன்னம். திருமணம் நிகழ வேண்டுமா

னால் பேழை வேண்டும் என்பது அன்னத்தின் கருத்து. பேழை கிடைத்தால் கதிர்நாட்டின் உரிமைதனக்குக் கிடைக்கும்; கிடைத்துவிட்டால் திருமணந்தான். இது அன்னத்தின் கருத்து. ஆனால் பொதுமக்கள் கருத்தாகக் கவிஞன் காட்டுவது எதனை? நாடு சீரடைய— தீமை நீங்க, நாட்டுமக்கள் பயன்பெற, அறம் நிலைபெறப் பேழைவேண்டும் என்று. இதில் பொதுமக்கள் கூற்றாகக் கவிஞர் கூறியவற்றோடு மேலும் ஒன்றை அதாவது 'உன் திருமணம் இனிது நிறைவேறப் பேழையை நாங்கள் தேடித்தருவோம்' என்ற செய்தியையும் சேர்த்துக் கூறவைத்திருக்கலாம். ஏன் கவிஞன் அதனைத் தவிர்த்து விடுகின்றான்? இப்படி முரண்பாடு தோன்றப் பாடினால்தான் காப்பியத்தின் குறியீட்டுப் பொருளைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ளமுடியும் என்ற எண்ணமாக இருக்குமோ? இருக்கலாம்.

## நீலியின் பேச்சில் ஒருசான்று:

நரிக்கண்ணன் விட்டபூதம்—அதற்கெதிராகக் கணக்காயர்விட்ட எதிர்ப்பூதம் இவற்றால் கதிர்நாடு கலங்கிப் போயிருக்கின்றது. இந்நிலையில் நீலியும் நீலனும் சந்தித்து உரையாடுகின்றனர். நீலன் கேட்டான். 'முன்புபூதம் என்ற ஒன்றே இல்லை என்றாயே! இப்பொழுது எத்தனை பூதம் பார்த்தாயா?என்று. உடனே நீலிவிடையிறுக்கின்றாள்.

'முன்வந்த பூதத்தை நரிவிடுத்தான்
முதற்பூதம் நடுநடுங்கிச் சாகு மாறு
பின்வந்த பூதத்தை இளைய அன்னம்
பெற்றெடுத்தாள் என்றுரைத்துச் சிரித்தாள் நீலி'
68:3

இதனைக் கேட்டதும் நீலன் தெளிவு பெறுகின்றான். 'இதனையறியாமல் நான் பூதத்திற்கு அஞ்சியோடி அலுத்தேனே' என்று அலுத்துக்கொள்ளும் வேளையில் வேலனைப்பற்றியும் அவன் செயற்பாடுகள் பற்றியும் நீலி இப்படிக் கூறுகின்றாள்.

'மீட்படையா மக்கட்கு மீட்பும், சற்றும்
விழிப்படையா மக்கட்கு விழிப்பும் நல்கத்
தோட்படையால் வையத்தை வெல்லும் வேலன்
துணைப்படையாய் அன்னத்திற்கமைந்தான் என்றாள்'
68:3



இங்கே வேலனின் நோக்கம் நன்கு தெளிவுபடுத்தப் படுகின்றது. அதுமட்டும் அன்று. அன்னத்தின் நோக்கமும் தெளிவுபடுத்தப்படுகின்றது. மீட்படையாத மக்களை மீட்டல், விழிப்படையாத மக்களை விழிப்புறச் செய்தல் இரண்டும் அவனுக்கு இரண்டு கண்கள் என்று அறிகின்றோம். இவ்விரண்டும் கதிர்நாட்டுரிமையை அன்னத்திற்குப் பெற்றுத்தரும் செயல்கள் அல்லவே! இன்னும் தெளிவாகச் சொன்னால் அன்னத்தின் நோக்கமே மக்களை மீட்பதும், மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதும் தாம். இதற்கு வேலன் துணைப்படை என்பதாகப் பேசப்படுகின்றது. மீட்படையா மக்கள் என்றால் என்ன பொருள்? விழிப்படையாத மக்கள் என்றால் என்ன பொருள்? எல்லா அடிமைத்தனங்களில் இருந்தும் மீட்படையா மக்கள்-எதனையும் அறிவார்ந்த முறையில் காணும் விழிப்புணர்ச்சி இல்லாதவர்கள் என்பதுதானே பொருள். அப்படி என்றால் பேழையை-கதிர்நாட்டுரிமையை மீட்கப்புறப்பட்டவர்கள் என்று முன்னர்க்கூறியதற்கு மாறாக மக்களை மீட்கப் புறப்பட்டவர்களாக இடமாற்றம் செய்யப்படுகிறார்களே அது ஏன்? இதன் உட்பொருள் என்ன? மக்கள் விழித்தெழ வேண்டும்; மக்கள் இழந்தவற்றை மீட்க வேண்டும். இதற்கு வேலன் துணையாக இருப்பான். அப்படி என்றால்... வேலன் மக்களைத் திரட்டித் தலைமையேற்று நடத்திப் பேழைமீட்டல் என்ற பெயராலே மக்கள் இழந்த ஆட்சியுரிமை முதல் கலை நாகரிகப்பண்பாட்டுச் சிறப்பு ஈறாக உள்ள அனைத்தையும் மீட்பான்என்பது தானே! இதனால்தான் அன்னம் வேலன் காதலுக்கு மிகப்பெரிய பகுதியை ஒதுக்காமல் விட்டு விடுகின்றான் கவிஞன். இது என்ன புதுக்கரடி என்கிறீர்களா? கொஞ்சம் பொறுமையாக மேலே செல்லுங்கள், புலப்படும்.

## வேலன் கூறும் குறிக்கோள்:

அன்னமும் வேலனும் முதன் முதலாகச் சந்தித்துக் கொள்ளும் காட்சி எது என்றால் அது செய்யாற்றில் ஓடத்திலிருந்துஅன்னத்தைக் காப்பாற்றும் காட்சிதான். அதனைத் தொடர்ந்து அவர்களுக்குள் உரையாடல் நடக்கின்றது. அவ்வுரையாடலில் தன்னுடைய குறிக்கோளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றான் வேலன்,

னால் பேழை வேண்டும் என்பது அன்னத்தின் கருத்து. பேழை கிடைத்தால் கதிர்நாட்டின் உரிமைதனக்குக் கிடைக்கும்; கிடைத்துவிட்டால் திருமணந்தான். இது அன்னத்தின் கருத்து. ஆனால் பொதுமக்கள் கருத்தாகக் கவிஞன் காட்டுவது எதனை? நாடு சீரடைய– தீமை நீங்க, நாட்டுமக்கள் பயன்பெற, அறம் நிலைபெறப் பேழைவேண்டும் என்று. இதில் பொதுமக்கள் கூற்றாகக் கவிஞர் கூறியவற்றோடு மேலும் ஒன்றை அதாவது 'உன் திருமணம் இனிது நிறைவேறப் பேழையை நாங்கள் தேடித்தருவோம்' என்ற செய்தியையும் சேர்த்துக் கூறவைத்திருக்கலாம். ஏன் கவிஞன் அதனைத் தவிர்த்து விடுகின்றான்? இப்படி முரண்பாடு தோன்றப் பாடினால்தான் காப்பியத்தின் குறியீட்டுப் பொருளைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ளமுடியும் என்ற எண்ணமாக இருக்குமோ? இருக்கலாம்.

## நீலியின் பேச்சில் ஒருசான்று:

நரிக்கண்ணன் விட்டபூதம்–அதற்கெதிராகக் கணக்காயர்விட்ட எதிர்ப்பூதம் இவற்றால் கதிர்நாடு கலங்கிப் போயிருக்கின்றது. இந்நிலையில் நீலியும் நீலனும் சந்தித்து உரையாடுகின்றனர். நீலன் கேட்டான். 'முன்புபூதம் என்ற ஒன்றே இல்லை என்றாயே! இப்பொழுது எத்தனை பூதம் பார்த்தாயா?என்று. உடனே நீலிவிடையிறுக்கின்றாள்.

'முன்வந்த பூதத்தை நரிவிடுத்தான்
முதற்பூதம் நடுநடுங்கிச் சாகு மாறு
பின்வந்த பூதத்தை இளைய அன்னம்
பெற்றெடுத்தாள் என்றுரைத்துச் சிரித்தாள் நீலி' 68:3

இதனைக் கேட்டதும் நீலன் தெளிவு பெறுகின்றான். 'இதனையறியாமல் நான் பூதத்திற்கு அஞ்சியோடி அலுத்தேனே' என்று அலுத்துக்கொள்ளும் வேளையில் வேலனைப்பற்றியும் அவன் செயற்பாடுகள் பற்றியும் நீலி இப்படிக் கூறுகின்றாள்.

'மீட்படையா மக்கட்கு மீட்பும், சற்றும்
விழிப்படையா மக்கட்கு விழிப்பும் நல்கத்
தோட்படையால் வையத்தை வெல்லும் வேலன்
துணைப்படையாய் அன்னத்திற்கமைந்தான் என்றாள்' 68:3



இங்கே வேலனின் நோக்கம் நன்கு தெளிவுபடுத்தப் படுகின்றது. அதுமட்டும் அன்று. அன்னத்தின் நோக்கமும் தெளிவு படுத்தப்படுகின்றது. மீட்படையாத மக்களை மீட்டல், விழிப்படையாத மக்களை விழிப்புறச் செய்தல் இரண்டும் அவனுக்கு இரண்டு கண்கள் என்று அறிகின்றோம். இவ்விரண்டும் கதிர்நாட்டுரிமையை அன்னத்திற்குப் பெற்றுத்தரும் செயல்கள் அல்லவே! இன்னும் தெளிவாகச் சொன்னால் அன்னத்தின் நோக்கமே மக்களை மீட்பதும், மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதும் தாம். இதற்கு வேலன் துணைப்படை என்பதாகப் பேசப்படுகின்றது. மீட்படையா மக்கள் என்றால் என்ன பொருள்? விழிப்படையாத மக்கள் என்றால் என்ன பொருள்? எல்லா அடிமைத்தனங்களில் இருந்தும் மீட்படையா மக்கள்-எதனையும் அறிவார்ந்த முறையில் காணும் விழிப்புணர்ச்சி இல்லாதவர்கள் என்பதுதானே பொருள். அப்படி என்றால் பேழையை-கதிர்நாட்டுரிமையை மீட்கப்புறப்பட்டவர்கள் என்று முன்னர்க்கூறியதற்கு மாறாக மக்களை மீட்கப் புறப்பட்டவர்களாக இடமாற்றம் செய்யப்படுகிறார்களே அது ஏன்? இதன் உட்பொருள் என்ன? மக்கள் விழித்தெழ வேண்டும்; மக்கள் இழந்தவற்றை மீட்க வேண்டும். இதற்கு வேலன் துணையாக இருப்பான். அப்படி என்றால்... வேலன் மக்களைத் திரட்டித் தலைமையேற்று நடத்திப் பேழைமீட்டல் என்ற பெயராலே மக்கள் இழந்த ஆட்சியுரிமை முதல் கலை நாகரிகப்பண்பாட்டுச் சிறப்பு ஈறாக உள்ள அனைத்தையும் மீட்பான்என்பது தானே! இதனால்தான் அன்னம் வேலன் காதலுக்கு மிகப்பெரிய பகுதியை ஒதுக்காமல் விட்டு விடுகின்றான் கவிஞன். இது என்ன புதுக்கரடி என்கிறீர்களா? கொஞ்சம் பொறுமையாக மேலே செல்லுங்கள், புலப்படும்.

## வேலன் கூறும் குறிக்கோள்:

அன்னமும் வேலனும் முதன் முதலாகச் சந்தித்துக் கொள்ளும் காட்சி எது என்றால் அது செய்யாற்றில் ஓடத்திலிருந்துஅன்னத்தைக் காப்பாற்றும் காட்சிதான். அதனைத் தொடர்ந்து அவர்களுக்குள் உரையாடல் நடக்கின்றது. அவ்வுரையாடலில் தன்னுடைய குறிக்கோளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றான் வேலன்.

அக்குறிக்கோள் என்ன? தாய் நாட்டுக்காகத் தன்னை இழப்பதுதான்.

‘எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாள் ஆகும்’

53:3

இங்கே வேலன் கதிர் நாட்டுக்காகத் தினையளவு நலம் கிடைத்தால் கூடப்போதும், அதற்காக நான் செத் தொழிவேன் என்று தானே அவன் பேசியிருக்க வேண்டும். ஏனெனில் அவன் கதிர் நாட்டின் குடிமகன் தானே; தான் பிறந்த கதிர் நாட்டை மறந்து விட்டுப் பேசுகின்றானே, அது ஏன்? கவிஞன் கதிர்நாட்டை மறந்து விட்டுப் பேசச் சொல்லும் போது பாவம் வேலன் என்ன செய்வான். பேசித்தானே தீர வேண்டும். இப் பாடலில் வேலன் பயன்படுத்தும் மக்கள், இனம், நாடு- வெறும் நாடு இல்லை, மக்கள் இனம் ஈன்ற தமிழ் நாடு என்ற சொற்கள் நமக்கு உணர்த்துவது என்ன? இன மீட்டுருவாக்கம் தானே! இது இங்கே வெளிப்படையாகப் பேசப்படுகின்றது, பேழையுள் மறை பொருளாகப் பேசப் படுகின்றது. இதுதான் வேறுபாடு.

## *பாடலின் இயல்புமுரண் இயம்புவது:*

பேழைக்குள் முடி, வாள், பட்டயம், ஆடை, அணிகலன் என ஐந்து பொருள் இருப்பதாகக் கூறிக் கொண்டு வந்த கவிஞர் வேலனும் அன்னமும் உரையாடும் இவ் விடத்தில் ஆறாவது பொருள் ஒன்றும் அதனுள் இருப்ப தாக வெளிப்படுத்துகின்றார். அது என்ன புதுச்செய்தி!

‘பழம்பெரிய பாண்டியனார் பேழைக் குள்ளே
பகைவர்தமை ஒழித்திடுமோர் குறிப்பும் உண்டு’

இப்படிச் சொல்வது யார்? அன்னந்தான். அன்னந்தான் பேழை பற்றிய எல்லா விவரங்களையும் தருபவளாகக் காப்பியத்துள் காட்டப்படுகின்றாள். பகைவர் ஒழிப்புப் பற்றிய செய்தியை அவள் முன்னர்க் கூறாது மறைத்து விடுகின்றாள். ஏன் மறைக்கின்றாள் என்றால் வே



நாட்டு மன்னனின்முன்நின்றுதான் அவள் பேழைபற்றிய செய்தியை வெளிப்படுத்துகின்றாள். வேழனும் பகைவன் தானே! அவனை வைத்துக் கொண்டே பகைவர்ஒழிப்புப் பற்றிப் பேசுவது சரியானது அன்று. இதனால்தான் அவள் பேழையின் அடையாளம் கூறிய இடத்தில் பேழைக்குள் இருக்கும் பகைவர் ஒழிப்புப் பற்றிய செய்தியை மறைத்து விட்டாள் என்று சிலர் சொல்லக் கூடும். இது ஏற்றுக் கொள்ளத்தக்கதில்லை.

உண்மையில் அப்படி எழுதப்பட்ட குறிப்பு பேழையுள் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். தமிழர்கள் தம்முரிமையை உணர்ந்து, தம் கலை நாகரிகப் பண்பாட்டு உணர்வுகளைப் பெற்று, ஆட்சி உரிமையைத் தேடி வீரத்தோடு எழுவார்களேயானால் அது என்னவாக இருக்கும்? அது பகைவரை ஒழிப்பதாகத்தானே இருக் கும்! இந்த ஐந்தையும் அவர்கள் எய்துகின்ற பொழுது ஆறாவதான பகைவர் ஒழிப்பு என்பது தானே வந்து விடும் என்ற அவாய்நிலைக் கருத்தைத்தான் அன்னம் இப்படிக் கூறுகின்றாளேயன்றி வேறில்லை. இதனை உறுதி செய்வது எது? இப்பாட்டின் தொடக்கத்திற்கும் முடிபிற்கும் இடையே அமைந்துள்ள முரண்பாடுதான். நமக்கு ஐயத்தை ஏற்படுத்துகின்ற பகுதி இதோ:

இழந்தபாண் டியன் பரிசைத் தருவார்க் கென்னை
இழந்துபோ வேனென்று முரசம் எங்கும்
முழக்கிய ஓர் செய்தியினை அறியீர் போலும்
முயலாமே இத்தனைநாள் கழித்தீர் போலும்
பழம்பெரிய பாண்டியனார் பேழைக் குள்ளே
பகைவர்தமை ஒழித்திடுமோர் குறிப்பும் உண்டு,
கொழுத்தபுகழ உமக்குண்டு; கொண்டுவந்தால்
கொடைகொடுத்த தாகுமிந்த நாட்டுக்கென்றாள்.

55:4

இப்பாடலில் சொல்லப்பட்ட செய்திகள் யாவை?

1 இழந்த பாண்டியன் பரிசை மீட்டுத் தருவார்க்கு என்னைத் தருவேன்.
2 பாண்டியன் பரிசினுள் பகைவர் ஒழிப்புக் குறிப்பு
3 கொண்டு வந்தால் கொழுத்த புகழ் கிடைக்கும்.
4 நாட்டுக்குக் கொடைகொடுத்ததாகவும் அமையும்.

பாண்டியன் பரிசை யார் மீட்டுத் தருவாரோ அவர்க்கு என்னைத் தருவேன் என்பதன் வாயிலாக வேலனுக்கு அன்னம் ஓர்ஆசையை மூட்டுகின்றாள். பெண்—அதுவும் அழகிய பெண்- சிறப்பாக அரசன் மகள் கிடைப்பாள். வேலனுக்கு நன்றாகவே ஆர்வமூட்டப்படுகின்றது. பேழை கிடைத்தால் அதனுள் ஓர் அரிய செய்தியும் அடங்கியுள்ளது. அதுஎன்ன? அதுதான் பகைவர் ஒழிப்பு. தினையளவு நலம் கிடைத்தால் போதும் செத்தொழிவேன் எனச்சொல்லும் வேலனுக்கு இதுவும் ஓர் ஆர்வத்தை மூட்டியே இருக்கவேண்டும். முன்னது பாலுணர்வு நோக்கில். பின்னது குறிக்கோள் நோக்கில். இதற்கு மேலும் ஓர் ஆர்வமூட்டல் வெளிப்படுகின்றது. எப்படி?கொழுத்தபுகழ் கிடைக்கும்என்பதாகவும்,கொடை கொடுத்ததாக அமையும் என்பதாகவும். மனித வாழ்க் கையின் உயரிய குறிக்கோள் என்ன? புகழ் பெறுவது தான். அதுவும் உனக்குக் கிடைக்கும் என்பதாக ஆர்வ மூட்டப்படுகின்றது.இவ்விறுதிப் பகுதியை நாம் படிக்கும் போதுதான் பல சிக்கல்கள் தாமாகவே முடிச்சவிழ்ந்து கொள்கின்றன. பாட்டு எப்படி முடிகின்றது? பேழையை நீ கொண்டு வந்தால் அது நீ கதிர்நாட்டுக்குக் கொடை கொடுத்ததாக அமையும். கொடையால் வரும் புகழ் காலத்தால் அழிக்க முடியாத புகழ். ஆகவே அப்புகழ் உனக்கு உண்டு என்று முடிக்கின்றாள் அன்னம்.

இப்பாடலில் ஆர்வமூட்டல் என்னும் உத்தி நன்றாகவே கையாளப்பட்டிருப்பதாகத்தான் அனைவரும் எண்ணு வர்.ஆழ்ந்து நோக்கினால் இப்பாடலில் ஒரு முரண்பாடு அமைந்திருப்பதனை நாம் கண்டு கொள்ளலாம். பேழையை நீ தேடித்தந்தால் உனக்கு நான் என்னைத் தருவேன் என்று பாலுணர்வுச் செய்தியோடு தொடங்கு கின்றது பாடல். ஆமாம்! அன்னமும் வேலனும் காதலர் கள். ஆகவே இவ்வாறு கூறித்தொடங்குவதுதான் பொருத்தம் என்றுகூடச் சிலர்கூறக்கூடும் அதெல் லாம் சரிதான். பாடலை முடிக்கின்ற போது அப்பாலுணர்ச்சிச் செய்தியைத் தொடர்பு படுத்தியோ வற்புறுத்தியோ பாடலை முடிக்க வில்லையே அதுஏன்? அன்னம் வேலன் காதல் உண்மையான காதலாகவும் அதாவது புலன் உணர்வு சார்ந்த காதலாகவும் — அதுவே காப்பியத்தில் வலியுறுத்தப் படுவதாகவும்



பாவேந்தர் கருதியிருந்தால் இப்பாடலின் இறுதியடியை எப்படி முடித்திருப்பார்? இப்படி முடித்திருப்பார்:

'கொழுத்தபுகழ் உமக்குண்டு கொண்டு வந்தால்
குமரியிவள் நின்தோளில் மறவேல் என்றாள்'

இப்படிப் பாடுவதுதான் கருத்து வெளிப்பாட்டு நிலை யில் முரண்பாடில்லாத முடிவைக் கொண்டது என்று கருதப்படும். பேழையைத் தருவார்க்கு என்னைத் தருவேன் என்ற ஆர்வமூட்டலின் கொடு முடியாக அமையத் தக்கது 'குமரியிவள் உன் தோளில்' என்ற தொடர்தானேயன்றிக் 'கொடை கொடுத்த தாகும் இந் நாட்டுக்கு என்பதன்று. குமரியிவள் உன்தோளில் என்று அல்லது இப்பொருளில் ஏன் கவிஞன் பாட வில்லை. இதற்கு ஒரே விடைதான் உண்டு. வேலன், அன்னம் எனப்பெயர் தாங்கியவர்கள் உண்மை மாந்தர்கள் அல்லர். குறியீட்டு வகைப்பட்ட மாந்தர் என்பதுதான். காதல் பற்றிய உணர்வுகள் இப்பாடலில் மட்டுமன்று; இக்காப்பியம் முழுவதுமே ஒழுங்குற அமைத்துக் கூறப்படவில்லை. ஆனால் இனமீட்சி— மீட்டுருவாக்கம் என்பன ஒழுங்குற அமைத்துக் கூறப் பட்டுள்ளன. பகைவரை ஒழித்தல், அதனால் பெரும் புகழ் பெறல் — கதைத்தலைவன் நாட்டுக்குத் தர வேண்டிய கொடை என்பன வேலனின் நோக்கத்திற்கு (எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் என்ற பாடலின் நோக்கத்திற்கு)ஏற்ப இப்பாடலும் ஒழுங்குற அமைக்கப் பட்டுள்ளது. பால் உணர்வைப் பின்னுக்குத் தள்ளி நாட்டுணர்வை முன்னெடுக்கும் இச் செய்தி எதனை வலியுறுத்துகின்றது? இஃதோர் இனமீட்சிக் காப்பியம் என்பதைத் தானே! இனமீட்சிக் காப்பியம் என்ற இடத்தை நாம் அடையும் போதுதான் பேழையும், அன்னமும், வேலனும் குறியீட்டுப் பொருள்களாகி விடுகின்றனர்.

## நகலைக் கொண்டு அசலைத்தேடல்:

வேழ மன்னன் முன்னின்று அன்னம் பேழையின் அடை யாளத்தைக் கூறும் போது இறுதியாக இதனைக் கூறு கின்றார்.

வாள்நகைகள் ஆடைவகை முழுநீளத்தில்
வைத்திடுபொற் பட்டயம்பே ழைக்குள் உண்டு;
காணுகநீர் என்றுரைத்துத் தான்அ ணிந்த
கழுத்தணியைக் கழற்றியதில் அமைந்தி ருந்த
ஆணிப் பொற் பேழையதன் அடையா ளத்தை
அரசற்கும் படையாட்சி தனக்கும் காட்டி'

33:2

எல்லா அடையாளங்களையும் எடுத்துக் கூறியவள் இறுதியாகத்தன் கழுத்தணியில் அமைந்திருந்த பேழையின் மாதிரியை எடுத்து அடையாளம் காட்டினாளாம். இதன் பொருள் என்ன? பேழையும் அதன் மாதிரி வடிவமும் கதையில் பருப்பொருளாக நின்று விளக்கும் செய்தி வேறு. இதுவே நுண்பொருளாக நின்று இன மீட்டுருவாக்கச் செயற் பாட்டில் வெளிப்படுத்தும் பொருள் வேறு என்பதனை நாம் கண்டு கொள்ள வேண்டும். பேழை தொலைந்து விட்டது. அதனை அடையாளம் கண்டுகொள்ள வாய்ப்பாக எஞ்சியிருப்பது எது? கழுத்தணியில் அமைந்திருக்கும் அதன் மாதிரி வடிவம்தான். எஞ்சிய இச்சிறிய அடையாளத்தை (ஆதாரத்தை) வைத்துக் கொண்டுதான் உண்மைப் பேழையைக் கண்டு கொள்ள வேண்டும். இதுதான் நமக்கு வெளிப்படையாகக் கிடைக்கின்ற பொருள். இதன் உள்ளார்ந்த குறியீட்டுப் பொருள் என்ன?

அன்னம் மக்களை உணர்த்தும் குறியீடுஎன்று முன்னர்க் கூறினேன். அன்னத்தின் கழுத்தணியில் அசலை அடையாளம் காட்டும் சிறிய பேழை வடிவம் இருப்பதுபோல, மக்களிடத்திலும் இனத்தை அடையாளம் காட்டும் எஞ்சிய அடையாளங்கள் காலத்தால் கரைந்தது போகச் சில தங்கியுள்ளன. அவற்றை வைத்துக் கொண்டுதான் முழுமையான இனப் பெருமையை உணர முடியும். உணர்ந்து கொண்டால் மீண்டும் அப்பெருமையை ஆக்கலாம். இதுதான் உள்ளார்ந்த குறியீட்டுப் பொருள்.

பழம்பெருமையும், வீரமும், பெருந்தன்மையும் நம் மக்களிடம் முழுமையாகப் பட்டுப்போய்விடவில்லை. இனத்தை அடையாளம் காட்டும் மொழியும் இலக்கியங்களும் உள்ளன. செவிவழிச் செய்திகளும் கல்வெட்டுச் செய்திகளும் சான்றாகக் கூடிய தகல்களாக உள்ளன.



இன்றும் வாழ்கின்ற பல்வேறு கலை வடிவங்களும் தமிழர்களின் வாழ்க்கையில் அமைந்து ஆதாரங்காட்டும் அடையாளச் சின்னங்களாக உள்ளன. இவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்திக்கொண்டுதான் முழுமையான இன, மொழி, ஆட்சியியல், கலை, நாகரிகப் பண்பாட்டு வடிவங்களை மீட்டுக் கொணர வேண்டும். இதுதான் இக் குறியீட்டின் உள்ளார்ந்த பொருள் என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## கருப்பொருளும் அதன் உட்பொருளும்:

வேழ மன்னன் ஒரு சமயம் நரிக்கண்ணன் செயலை நன்குணர்ந்து கொண்டு அவனைக் கண்டிக்கின்றான். 'மன்னனை (கதிர்நாட்டு) மறைந்திருந்து கொன்றாய்; அரசியையும் கொன்றாய்; அன்னத்தையும் கொலை செய்ய முயல்கின்றாய், என்று சினந்து பேசியவுடன் நரிக்கண்ணன் வேழன் காலிலே விழுந்து வணங்கி, 'நான்யாரையும் கொலைபுரியவும் இல்லை; கொலை புரியப் போவதும் இல்லை. கன்னத்தைத் தன் நகமே கீறுமா? என் மருமகளாகிய அன்னத்தை நானே கொல்வேனா?' என்றெல்லாம் பசப்பிவிட்டு இறுதியாக 'என் மைத்துனன் மகள்தான் அன்னம்; என் மகன் யார்? அவளுக்கு மாமன் மகன்தானே! அவனை மணந்து கொண்டு இந்த நாட்டை இவளே யாளட்டும்' என்று கூறியவுடன் வேழ மன்னன் நன்முடிவு! நன் முடிவு என்று தலையாட்டியதோடு நில்லாமல் 'அன்னம்' உன் கருத்தென்ன?' என்று வினவுகின்றான். இதற்கு அன்னம் வெளிப்படையாக ஒரு பதிலும் மறைமுகமாக ஒரு பதிலும் கூறுகின்றாள். எங்கே என்கிறீர்களா? இதோ இங்கே.

குயிலினங்கள்
திருச்சின்னம் ஊதகறுந் தென்றல் வீசச்
செவ்வடியார் அன்னம்உலா வருநா டாள்வீர்!
ஒருத்தன்எனை மணப்பதெனில் அன்னோன் என்றன்
உயர்பேழை தனைத்தேடித் தருதல் வேண்டும்.

40:2

ஒருவன் என்னை மணக்க வேண்டுமானால் அவன் எனக்குரிய பாண்டியன் பரிசு பேழையைத் தேடிக்

கொண்டு வந்து தரவேண்டும். இது அவள் வெளிப்படையாகக் கூறிய பதில். அவள் மறைமுகமாகக் கூறிய பதில் எங்கே இருக்கின்றது. மேலே உள்ள பாடலில் தடித்த எழுத்திலுள்ள கருப்பொருள் வருணனைக்குள் இருக்கின்றது. 'எங்கள் நாடு எப்படிப்பட்டது தெரியுமா' அரசே! குயிலினங்கள் திருச்சின்னம் ஊத, சிவந்த பாதங்களையுடைய அன்னப் பறவைகள் உலாவி வருகின்ற நாடு இக்கதிர்நாடு' என்கின்றாள். உரிமையுள்ள ஓர் அரசனின் உலாவினை அன்னம் எடுத்துக் காட்டுகின்றாள். அவ்வரசன் சோலைகளில் உலா வருகின்றான். எப்படி உலாவருகின்றான்? தனக்குரிய முழு மரியாதைகளோடும் வருகின்றான். அவன் எழுந்தருளிய போது திருச்சின்னங்கள் ஒலிக்கின்றன. கவரிகள் இரட்டப்படுகின்றன (வீசப்படுகின்றன) அரசன் உலாவருகின்றான். யார் அந்த அரசன்? அன்னப் பறவைதான் அரசன். திருச்சின்னம் ஊதுவோர் குயில்கள். கவரி இரட்டுவோர் தென்றல். இவ்வாறாகக் கதிர் நாட்டின் சோலைகளில் காணப்படும் உலாக்காட்சி நம் கண்களைக் கவர்கின்றது என்று கூறலாமா? கூடாது. கண்களைத் திறக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

திருச்சின்னம் என்றால் என்ன? 'தெய்வம், அரசன் முதலாயினாரின் முன்பு சேவிக்கும் ஊது குழல் உள்ள விருது வகை' – இப்படிக் கூறுகின்றது, சென்னைப் பல்கலைக் கழக அகர முதலி. வேழ மன்னா! எம் நாட்டினை வென்றுவிட்டாய். நாங்கள் தோற்றுப் போனோம். தோற்றவர்க்குத் திருச்சின்னம் ஊதப் படுவதுமில்லை; கவரி இரட்டப்படுவதுமில்லை. கதிர் நாட்டு மன்னனின் மகளாகப் பிறந்தும் நான் இவற்றை எல்லாம் இழந்துவிட்டேன். வென்ற உனக்கு இவையெல்லாம் உண்டு. என்னிடமிருந்து இந்த மரியாதைகள் பறிபோயிருக்கலாம். ஆனால் எம் நாட்டுச் சோலைகளில் இருந்து அது இன்னும் பறிபோய் விடவில்லை. இதோ அரச அன்னம் வருகின்றது. குயில்கள் திருச்சின்னம் ஊதுகின்றன. தென்றல் கவரி வீசுகின்றது. என்னிடமிருந்து இம்மரியாதை திருடப்பட்டிருக்கலாம்; என் நாட்டிலிருந்தே அது திருடப்படவில்லை. என்பதை நன்றாகவே சுட்டிக்காட்டுகின்றாள். அன்னம் என்ற சொல்லாட்சி உலாவரும் அரச அன்னத்தையும், உரிமை இழந்த அரசி அன்னத்தையும் (இளவரசி) குறிக்கின்றது. சிவந்த அடிகளையுடைய (செவ்வடியார்) என்ற அடைமொழிகூட இருவரையும் குறித்தே நிற்கின்றது.



இக்கருப்பொருள் வருணனையின் வாயிலாக அரசனுக்கு (வேழன்) அவள் விடுக்கும் (மறைபொருளான) செய்தி என்ன? எம்நாட்டின் பரம்பரைச் சிறப்பிற்கேற்ப அரச அன்னத்தைப்போலத் திருச்சின்னம் ஊதவும், கவரிஇரட்டவும் நான் உலாவர வேண்டுமானால் நான் உரிமையுள்ளவளாக இருக்க வேண்டும். அவ்வுரிமை எனக்குக் கிடைக்க வேண்டுமானால் பேழை கிடைத்தாக வேண்டும். பேழை கிடைத்து விட்டால் (இன மீட்புமுடிந்து விட்டால்) நானும் எல்லா மரியாதைகளோடும் உலாவருவேன் என்கின்றாள் அன்னம். அன்னம் மக்களின் குறியீடு என்பதனை நினைவில் கொண்டு நோக்குங்கள். தமிழர்கள் ஒவ்வொருவரும் உரிமையுள்ள அரசர்கள் போலப் பழம் பெருமையை மீட்டுக் கொணர்ந்தோராக உலாவர வேண்டும் என்ற கருத்துத் தானே வெளிப்பட்டு நிற்கக் காண்பீர்கள்.

தென்றலே! நீ கவரி இரட்ட வேண்டும் என்று அன்னம் கட்டளை இடவில்லை. குயிலே! நீ திருச்சின்னம் ஊத வேண்டும் என்று அன்னம் ஆணை பிறப்பிக்கவில்லை. உரிமை பெற்ற தமிழர்கள் ஒருவர்க்கொருவர் ஆணையிட்டு அதிகாரம் செலுத்தமுடியாது. அது கூடவும் கூடாது. அன்னத்தின் வருகையில் குயிலின் ஊதலும் தென்றலின் வீசலும் இயற்கை நிகழ்வாக அமைந்து ஒவ்வொரு தமிழனும் உரிமை பெற்ற அரசனாக விளங்கவேண்டும் என்ற பாவேந்தரின் உட்கிடை மிக நன்றாகவே வெளிப்படுகின்றது. ஆக இக்கருப் பொருள் வருணனையும் அதன் உள்ளுறை பொருளும்கூட பேழை ஒரு குறியீடே என்றும், அன்னம் வேலன் போன்றோரும் குறியீட்டு வழிப்பட்ட கதை மாந்தரே என்றும் இனமீட்டுருவாக்கமே இக்காப்பியத்தின் உள்ளும் புறமும் ஊடுருவி நிற்கும் பொருள் என்றும் புலப்படுத்திக் காட்டத் தவறவில்லை.

## *நரியின் தடையும் கிளியின் விடையும்:*

பேழை கொண்டு தருவோனையே நான் மணப்பேன்;

இது உறுதி' என்று அன்னம் சூளுரை மொழிந்ததும் நரிக் கண்ணன் சில கேள்விகளை வீசுகின்றான். இதோ அவன் பேச்சு:

'தம்முடிமேல் பேழையினைத் தூக்கி வந்த
தண்டுன்று கிழவரைநீ மணப்ப துண்டோ?'

42:1

'எனக்கேட்டான் நரிக்கண்ணன்; அன்னம் சொன்னாள்;
ஈவார் ஓர் கிழவரெனின் எனைம ணக்க
நினைப்பாரோ? நினைப்பரெனில் கிழவர் அல்லர்;
நெஞ்சத்தில் இளைத்தாரே வயதில் மூத்தார்
எனவுரைக்கப் பின்னும்நரிக் கண்ணன் நோயால்
இடருற்றோன் என்றாலோ என்று கேட்டான்'

42:2

இவ்வாறு நரிக்கண்ணன் கேட்டதுதான் தாமதம். விடை வில்லிலிருந்து புறப்பட்ட கணை போலப்புறப் படுகின்றது அன்னத்திடமிருந்து. இது கேள்விக்கு விடையாக மட்டும் அமையவில்லை. பாவேந்தரின் குறி யீட்டுப் பொருளை விளக்கிக் காட்டும் நல்ல சான்றாக வும் அமைந்துள்ளது. இதோ அவள் விடை:

'தனியரசு போக்காத நோயை நானே
தவிர்க்கின்ற பேறுபெற்றால் மகிழ்வேன் என்றான்'

42:2

நாட்டிலே நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வாறு பெருகியது? நோய் முற்றக் காரணங்கள் இரண்டுதாம். ஒன்று: ஒழுங்கற்ற வாழ்க்கை; உடல் வளர்ச்சிக்கேற்ற உணவின்மை. இரண்டு: நோய் வந்தபின் அதனைத் தீர்த்துக் கொள்ளமுடியாத வறுமை. இவை தாம் நோய் முற்றலுக்கான காரணங்கள். ஒழுங்கற்ற வாழ்க்கை, வறுமை, நல்லுணவின்மை இவற்றுக்கெல்லாம் என்ன காரணம். அரசுகள்தாம் காரணம் என்கின்றாள் அன்னம். அதுவும் முடியாட்சியாகிய 'தனியரசுகள்' தாம் காரணம் என்கின்றாள். மக்களின் நோயைப் போக்கும் கடமை அரசுக்கு இன்றியமையாதது. இந் நாட்டில் பேழையை ஒரு நோயாளி தூக்கி வருவான் என்றால் இதுவரை இருந்த – இருக்கின்ற அரசுகள் தன் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றுதான் பொருள். பிறரால் முடியாத – பேழையைத் தேடிக்



கொண்டு வரும் அளவுக்கு ஆற்றல் உள்ள ஒரு மனிதனையே தனியரசுகள் நோய்க்கு ஆளாக்கி வைத் திருக்கும் என்றால் அந்நோயை நானே தவிர்ப்பேன்; அவனை மணந்து கொள்வதன் வாயிலாக என்கின்றாள் அன்னம். நோய்க்குக் காரணமாக இருந்தது தனியரசு என்றால் அந்நோயைப் போக்குவது எந்த அரசாக இருக் கும்? பொது நல அரசாக – மக்கள் அரசாகத்தானே இருக்க முடியும். ஒரு பொது நல அரசு – அமைக்கும் விருப்பத்தைத்தான் இத்தொடர் உட்பொருளாகக் கொண்டுள்ளது.

நோயை நான் தவிர்ப்பேன் என்கின்றாள். இவள் யார்? இவள்தான் மக்களின் குறியீடு என்று முன்பே பார்த் தோமே! அவ்வாறாயின் மக்கள் அரசு அமைந்துதான் மக்கட் சமுதாயத்தின் நோய்கள் தீர்க்கப்படும் என்ற கருத்து வெளிப்படுகின்றதா இல்லையா? தனியரசு களால் சமுதாயத்தில் நோய்கள் தோன்றியுள்ளன. இவற்றை நான் (மக்கள்) தீர்ப்பேன். அதுவே எனக்குப் பெரும் பேறு என்கின்றாள். இங்கே நமக்கோர் ஐயம் எழுகின்றது. அன்னம் மக்களின் குறியீடு இல்லை என் றால் இத்தொடர் எப்படிப் பொருள்படும்? தனியரசுகள் போக்கத்தவறிய அந்நோயை (பேழைகொண்டு வருவோ ரிடம் உள்ள) அவனை மணந்து கொண்டு என் செல் வாக்கினால் (அரசி என்ற செல்வாக்கு) பொருள் வளத் தினால் போக்குவேன் என்று அவள் கூறியதாகப் பொருள்படும். பேழை கிடைத்தால் அன்னம் அரசி யாவாள். அரசியானால் அவன் நோயை இராச மருத் துவத்தால் போக்குதல் எளிது என்று எளிதாகப் பொருள் பண்ணிவிடலாம். ஆனால் இதனால் தோன்றுகின்ற குழப்பத்தை அகற்றுதல் அத்துணை எளிதன்று.

பேழை கிடைத்துவிட்டது; அன்னம் அரசியாகிவிட்டாள் என்று வைத்துக்கொள்வோம். அவளால் அமைக்கப் படும் அரசு எந்த அரசாக இருக்கும்? தனியரசாகத் தானே இருக்கமுடியும். தனியரசுகள் தாம் நோய் தீர்க்கத் தவறியவை என்று குற்றம் சாற்றிவிட்டு நான் அமைக்கும் தனியரசு நோய் போக்கும் என்று கூறுவது பொருத்தமாக இருக்குமா? இப்படிச் சொன்னால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? இல்லை, கவிஞன்தான் இப்படி

முரண்பாடாகப் பேசவைப்பானா? 'தனியரசு போக்காத நோயை நானே தவிர்ப்பேன்' என்ற தொடர் 'தனியரசுகள் தாம் இந்நாட்டையும் சமுதாயத்தையும் பற்றிய நோய்கள்; அவற்றை நான் தவிர்ப்பேன் (நீக்குவேன்) என்ற கருத்தல்லவா இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்து முகம் காட்டுகின்றது. ஒரு தனியரசு உருவாக்கிய நோயை—ஒரு தனியரசே நோயாக உருமாறிய நிலையை இன்னொரு தனியரசு போக்கமுடியாது. அதனால்தான் இப்பாடலில் உள்ள 'நானே (அன்னம்) என்ற சொற்கு மக்கள் என்று குறியீட்டுப் பொருள் கொள்ளவேண்டும் என்று கூறினேன்.

அன்னத்திற்குத் (மக்களுக்கு) தனியரசில் விருப்பமில்லாமை மட்டுமன்று; வெறுப்பே இருக்கின்றது என்று கூடப் பாவேந்தர் காட்டுகின்றார். பேழையை வேலன் அன்னத்திடம் தந்த பின் இருவரும் பேசிக்கொண்டே செல்கின்றனர். அப்போது,

> 'நானில்லை எனத்தெரிந்தால் நீருமில்லை;
> நடுத்தெருவில் பேழைதான் கிடக்கும்; நீலன்
> தானிந்த நாட்டினையும் எனையும் பெற்றுத்
> தனியாட்சி நடத்திடலாம் எனநி னைத்தான்
>
> 91:2

நீலன் நடத்த எண்ணிய தனியாட்சியை நாம் தோற்கடித்து விட்டோம் என்பதைப் பெருமையோடு கூறுகின்றாள் அன்னம். இதிலிருந்து அறிந்து கொள்ளும் செய்தி என்ன? தனியாட்சியை அன்னம் விரும்பவில்லை என்பது தானே! இவ்வாறு கொண்டால் அன்னம் தான் மட்டும் தனியாட்சி நடத்த நினைப்பாளா? இதனால் தனியரசைத் தானும் நடத்த விரும்பவில்லை; பிறர் நடத்துவதையும் அவள் விரும்பவில்லை என்று அறிந்து கொள்கிறோம். இவள் அரசன் மகள் என்று காட்டப்பட்டிருந்தாலும் கூட அரசன் மகளாக நடந்து கொள்ளாதவள் என்பதையும் நன்கு புலப்படுமாறு காட்டுகின்றான் கவிஞன். ஏன் இப்படிக் காட்டுகின்றான்? அன்னம் மக்களை உணர்த்தும் குறியீடே என்பதைத் தெளிவுபடுத்தத்தான். இன்னொன்றும் கூட இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

இறுதிக் காட்சியில் ஒன்றைக் கூறாமல் தவிர்த்து விடுகின்றான் கவிஞன். என்ன அது? வீரத்தாயில் சுதர்மனும், கடல்மேற்குமிழிகளில் செம்மறித்திறலும் தாம் தம்முடைய முடியாட்சி உரிமையை விட்டுக் கொடுத்துக் குடியாட்சி அமைத்துக் காட்டுவது போல இங்கே அன்னமும் தன்னுடைய அரசுரிமையை மாற்றி குடியாட்சி அமைப்பதாகக் கூறியிருக்கலாம். ஆனால் கவிஞன் அப்படிக் கூறாமல் தடுத்துவிடுகின்றான். ஏனைய காப்பியங்களில் தானே செய்ததற்கு மாறாக இதனை அமைக்கின்றான். ஏன்? இறுதிக் காட்சியில் அன்னம் தான் அரசுரிமையைத் துறப்பதாகவும் குடியாட்சியை ஏற்பதாகவும் கூறினால் அவள் உண்மையிலேயே கதிர்வேல் மன்னனின் மகள் என்று ஆகிவிடும். கவிஞன் இதுவரை காப்பாற்றி வந்த அன்னம் மக்களின் குறியீடு என்ற பொருள் அடிபட்டுப் போய்விடும். இதனால்தான் அன்னம் தனியாட்சியின் தீமைகளை விவரித்துப் பேசியும், அதன் கொடுமைகளை விளக்கியும் கூட மக்களாட்சி பற்றி ஏதும் கூறாமலே முடித்து விடுகின்றாள். முடித்து விடுகின்றாள் என்பதைவிட முடித்து விடுமாறு கவிஞன் கட்டளை இட்டுவிட்டான் என்று சொல்வதுதான் பொருத்தமானது. எதற்காகக் கட்டளை இட்டான்? தன் குறியீட்டுப் பொருளை முரண்பாடில்லாமல் முடித்துக் காட்டத்தான்.



இங்கே யோர் கேள்வி எழும். தனியாட்சி கூடாது என்றால் வேலனுக்கு முடிசூட்டுவது ஏன்? அவன் ஆட்சியும் தனியாட்சியாகத் தானே அமையும்! அவன் குடியாட்சி அமைத்ததாகக் கவிஞன் காட்டவில்லையே என்று சிலர் கேட்கக் கூடும். அன்னம் மக்களின் குறியீடு என்றும் வேலன் இயக்கத் தலைமையின் குறியீடு என்றும் முன்னர்க் கண்டோம். அதனை மீண்டும் நினைவிற் கொள்க. முடிசூட்டுதல் என்பது என்ன? அதன் உட்பொருள் யாது? ஆளும் உரிமையை வழங்குதல் என்பது தான் இதன் பொருள். இந்தியா விடுதலை பெற்றதும் உரிமை மக்களுக்கு வந்தது. மக்கள் ஆளும் உரிமையை என்ன செய்தனர்? இயக்கத் தலைமைக்கு வழங்கினர். இதுதானே நாம்கண்டது. இயக்கத் தலைமை (வேலன்) போராடி உரிமையை அன்னத்திற்கு (மக்களுக்கு) வாங்கித் தந்தது. அன்னம் ஆளும் உரிமையை — ஆட்சி

அமைக்கும் உரிமையை வேலனுக்கு (இயக்கத் தலைமைக்கு) வழங்கினாள். முடிசூட்டுதல் என்பது ஆட்சியதிகாரத்தைத ஒப்படைக்கும் குறியீடாக இங்கே நிற்கின்றது.

இது குறியீடு என்றால் வேலன் தலைமையில் அமைந்த ஆட்சி தனி யாட்சியாக இருக்க முடியுமா? முடியாது தான். அஃதோர் குடியாட்சியாகத்தான் இருந்திருக்க முடியும். கதையின் முடிவு முடியாட்சிபோலக் கூறப்பட்டிருந்தாலும் குறியீட்டுப்பொருளால் இஃதோர் குடியாட்சியே என்பது தெளிவு படுத்தப்படுகின்றது. அன்னத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தாது வேலனை அமர்த்தியதும், பெண்கள் ஆளத்தகுந்தவர்கள் அல்லர் என்ற பத்தாம் பசலிக் கொள்கையினால் அன்று. அவள் பொதுமக்கட்கான குறியீடாகக் காப்பியத்துள் அமைந்து விட்டதனால் இயக்கத் தலைமையிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது அரசியல் வரலாற்றிற்கு ஒப்ப அமைந்து விட்டது. இதுதானேயன்றி யாரேனும் இதனைச் சுட்டிக்காட்டிப் பெண்ணுரிமையை இழிவுபடுத்துவது என்று கூறினால் இரண்டு குற்றங்களைச் செய்தவர் ஆவார். ஒன்று: பாவேந்தரின் பெண்ணுரிமை எண்ணத்தை அறியாதவர்கள் என்பது; இரண்டு: பாவேந்தரின் படைப்பில் துலங்கும் குறியீட்டு நுட்பத்தை அறியாதவர் என்பது மற்றொன்று. அன்னத்திற்கு முடி சூட்டுவதாகக் காட்டினால் குறியீட்டு அமைப்பில் குழப்பத்தை ஏற்படுத்திப் பாண்டியன் பரிசு காப்பியத்தின் பெருமையை அடியோடு அழித்துவிடும் என்பதனால்தான் வேலனுக்கு முடிசூட்டுவதாக முடிக்கின்றார்.

## ஆவேசம் முடிச்சை அவிழ்க்கின்றது:

நோயாளி பேழை கொண்டு வந்தால் என்ன செய்வாய் என்பதற்கு அன்னம் விடைசொல்லியதும் நரிக்கண்ணன் மேலும் அடுக்குகின்றான்; பேழை கொண்டுவருவோன் பகையாளியாக இருக்கலாம்; குழந்தையாக இருக்கலாம்; இழிந்த சாதியாக இருக்கலாம்; அப்பொழுது என்ன செய்வாய் என்று வினவ அதற்கெல்லாம் தக்க விடை இறுக்கின்றாள். நரிக்கண்ணன் மனம் சோர்ந்த நிலையில் இவளை இனி மாற்ற முடியாது போலும் என்ற மனநிலையில் ஒரு புலம்பலை வெளிப்படுத்துகின்றான். இப்புலம்பலாவது அவள் மனத்தை மாற்றாதா என எண்ணினான் போலும்.



கூழையே னும்கொண்டு காட்டு மேட்டுக்
 கொல்லையே னும்சுற்றித் திரியு மந்த
ஏழையே னும்கண்ணுக் கினியான் இன்றேல்
 இம்மியே னும்வாழ்வை இனியான் வேண்டேன்;
கோழையே னும்பெண்டிர் இவ்வா றோதும்
 கொள்கைஏன் இல்லை;காண் இன்பம் இன்றேல்
பேழையேன்? கீர்த்தியேன்? பெற்றி ருக்கும்
 பெண்மைஏன்? இளமைஏன்? என்றான் மாமன்.

42:4

'கூழைக் குடித்துக் காட்டிலும் மேட்டிலும் சுற்றித் திரி
கின்ற ஏழைதான் என்றாலும் அவன் என் உள்ளம்
கவர்ந்தவன் ஆயின் அவனைத்தான் மணப்பேன்.
உள்ளத்திற்கு இசையாதவன் ஆயின் அவனை யான்
விரும்பேன்' — இப்படி எல்லாம் மன உறுதியோடு சொல்
கின்ற கொள்கை ஏன் பெண்களிடம் இல்லை? மண
வாழ்க்கையால் இன்பம் இல்லை என்றால் பேழை எதற்
காக? புகழ் எதற்காக? நீ பெற்றிருக்கும் பெண்மையும்
இளமையும் கூட எதற்காக? — இப்படி நரிக்கண்ணன்
ஆவேசமாகப் பேசி முடித்துவிட்டான்.

இதனைக் கேட்ட அன்னத்திற்கும் சிறிது ஆவேசம்
பிறந்துவிட்டது. மாமன் நரிக்கண்ணனிடம் சூடாகத்
தொடங்குகின்றாள். எவன் சினத்திற்கு ஆளாகி
விட்டானோ அவனையறியாமலேயே உண்மையை
உளறிவிடுவான் என்பதுதான் ஊரறிந்த கதை
யாயிற்றே! இதோ அன்னத்தின் ஆவேசப் பேச்சு உளற
லாக உருமாறவே குறியீட்டுப் பொருள் என்னும்
பூனைக்குட்டி பொத்தென்று கீழே விழுகின்றது.
அன்னமா ஆவேசமாக உளறுகின்றாள்? இல்லை!
ஆவேசச் சூழலில் கவிஞன்தான் அன்னத்தின் வாயால்
உளறுகின்றான். இந்த ஆவேசம்தான் குறியீட்டின்
முடிச்சை அவிழ்த்துவிடுகின்றது.

'ஒத்தஅன்பால் ஒருத்திபெறும் காத லின்பம்
 ஒன்றுதான் இங்குள்ள தென்று ரைத்தாய்;

செத்தவன் ஒருத்திபெறும் இன்பம் உண்டு;
சேதிஇது புதிதாகும்; கேட்க வேண்டும்;
மெத்த, வன்பால் வஞ்சத்தால் மான மின்றி
மிக்கபெரு மக்களெல்லாம் ஏங்க ஏங்கச்
சொத்தவன்பால் பெற்றவன மாற்றி அந்தத்
தூயான்பால் அன்பர்பெறச் செய்தல் இன்பம்'

42:5

இப்பாடலை மேம்போக்காகப் படித்த அளவிலேயே அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் பெறும் காதல் இன்பத்திலிருந்து கடமை இன்பத்தை நோக்கிப் பாடல் தடம் புரண்டு செல்வதை நீங்கள் கண்டு கொண்டிருக்கக் கூடும். ஒத்தவன்பால் தான் ஒருத்தி இன்பம் பெற முடியும் என்று எண்ணாதே செத்தவனிடத்தும் இன்பம் பெறலாம் என்கின்றாள் அன்னம். வேடிக்கையாக இல்லையா? செத்தவனிடம் இன்பம் பெறுவதா? அது முடியுமா? இப்படி எல்லாம் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டா. அன்னம் செத்தவன் என்று யாரைக் குறிப்பிடுகின்றாள். எவன் அடுத்தவர் துன்பத்தைப் பற்றிக் கவலை கொள்ளாதவனோ – எவன் இரக்கமின்மையும் வஞ்சனையும் உடையவனாக இருக்கின்றானோ–எவன் மக்களெல்லாம் ஏங்குமாறு செய்து அவர்களுடைய சொத்துக்களைப் பறித்துக் கொண்டானோ அவன்தான் செத்தவன் என்கின்றாள். அவனிடம் அன்பு செத்துப் போய் விட்டது; இரக்கம் இறந்துவிட்டது; சமுதாய நலம் சவமாகிவிட்டது. ஆகவே அவன் செத்தவன் என்கின்றாள் அன்னம். 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றுதானே வள்ளுவரும் கூறினார்.

அது சரி செத்தவனிடம் எப்படி இன்பம் பெறுவது? மக்களெல்லாம் ஏங்குமாறு சொத்துக்களைப் பறித்துக் கொண்டானே அவனை (சொத்தவன் பால் பெற்றவனை மாற்றி) மாற்ற வேண்டும் என்கின்றாள். எப்படி மாற்றுவது? அன்புடையவனாக இரக்கம் உள்ளவனாக– சமுதாய நலம் பேணுபவனாக மாற்ற வேண்டும், மாற்றினால் என்ன ஆகும். அவன் 'தூயான்' ஆவான். தூயான் ஆனால்? யார்யார் அவனிடம் சொத்துக்களைப் பறி கொடுத்தார்களோ அச்சொத்துக்களை அவர்கள் திரும்பப் பெறுமாறு செய்யலாம். அவ்வாறு செய்தால்



அது தான் இன்பம். எப்படிப்பட்ட இன்பம்? ஒத்த அன்பால் ஒருவனிடம் ஒருத்தி பெறும் இன்பத்தினும் உயர்வான இன்பம், பேராசையும், தன்னலமும் செத்துப் போன தூயான் பால் யான்பெறும் இன்பம் என்கின்றாள் அன்னம்,

இப்பாடலுக்கும் பொருள் கூறுவதில் ஓர் இடர்ப்பாடு உள்ளது. இதனால் பாடலில் அச்சுப் பிழை இருக்குமோ என்ற எண்ணம் உண்டாகின்றது. 'மெத்தவன்பினாலும் வஞ்சகத்தாலும் மானத்தை இழந்து சொத்தை அபகரித்தவன் மனத்தை மாற்றி அவனைத் தூயானாக்கி மானத்தை இழந்து ஈட்டிய அச்செல்வத்தை இழந்தவர்களே பெறுமாறு செய்ய வேண்டும்' என்று இங்கே பொருள் கொண்டிருக்கின்றேன். 'சொத்துக்களை இழந்த 'அன்பர்' பெறச் செய்ய வேண்டும்' என்று பாடல் சொல்கின்றது. அன்பர் பன்மை உணர்த்துவது. யாரிடமிருந்து சொத்துக்களை அவன் கவர்ந்தான்? இவ்வினாவிற்குப் பாடல் சொத்து 'அவன் பால்' கவர்ந்தான் என்று விடை தருகிறது. இது ஒருமை உணர்த்துவது. கொள்ளையடித்த சொத்தை அச்சொத்துக்களுக்குரிய அவர் பால் கொடுத்தான் என்றால் அவன் யார் பால் கொள்ளையடித்திருப்பான்? அவர்பால் என்று தானே இருக்க வேண்டும். ஆனால் பாடலில் 'சொத்து அவன் பால்' பெற்றான்; அச்சொத்துக்களை 'அவர் பால்' கொடுத்தான் என்பது பால் மயக்கமாகும். ஆகவே 'சொத்தவன் பால் பெற்றவனை' என்ற தொடரை சொத்தவர்பால் பெற்றவனை மாற்றி அந்தத் தூயான்பால் அன்பர் பெறச் செய்தல் இன்பம்' என அவன் என்பதனை அவர் என மாற்றினால் பொருள் இயைபு தானே வந்து விடும். அவர் என்பது அவன் என்று அச்சாகி விட்டது போலும்.

எடுத்தவர்களைக் கொடுக்க வைப்போம். கொடுத்தவர்களை எடுக்கவைப்போம். சமுதாயச் சமன்மையைப் பேணுவோம். சவக்களை தட்டிக்கிடக்கின்ற இச் சமுதாயத்திற்கு உயிர்க்களை ஊட்டுவோம். அவ்வுயிர்க்களை ஊட்டும் செயலில் பெறும் வெற்றிதான் ஒத்தவன் பால் ஒருத்தி பெறும் இன்பத்தினும் மேலான இன்பம், இது தான் அன்னம் கூறும் செய்தியின் உட்பொருள். நரிக்

கண்ணன் கேள்விக்கு அவள் ஏன் நேரிடையாக விடை கூறவில்லை? இதுதான் நம்மைக் குடைகின்றது. இது வெறும் கதையாக—குறியீட்டுப் பொருள் உணர்த்தாத வெறும் காதல் கதையாக இருந்தால் காப்பிய ஆசிரியன் எப்படிப் பேசவைத்திருப்பான் அன்னத்தை? 'பேழை கொண்டு வருவோன் எவனாயினும் ஆகுக. அவன்பால் புலனின்பம் நுகர வாய்ப்பில்லை என்றாலும் அவ்வாறே ஆகுக. என்னுரிமையை நான் எய்தினேன்; அதற்கு அவன் உதவினான் என்று எண்ணுந்தொறும், எண்ணுந் தொறும் யான் பெறும் இன்பம் ஒன்றே போதும். அந்த இன்பத்திற்குமுன் ஏனைய இன்பங்கள் தூசு' என்று தான் பேசவைத்திருப்பான். ஆனால் இங்கே கதையும் இயல்பான போக்கில் போகவில்லை; கதை மாந்தரின் பேச்சும் இயல்பான போக்கிலே போகவில்லை. தடம் புரளுகின்றது; ஏன் இந்தத் தடுமாற்றம்? தடமாற்றம்?

பாவேந்தரின் நோக்கம் கண்டு கேட்டு உண்டு, உயிர்த்து, உற்று அறியும் புலனின்ப வேட்கையைக் கூறுவது அன்று. சமுதாயத்தின் சவத்தன்மையை அகற்றி உயிர்ப்புள்ள சமுதாயமாக மாற்றுவதுதான். இதனால்தான் கதைமாந்தர் உரையாடலில் ஒரு தடம் புரளல் ஏற்படுகின்றது. இது தடம் புரளல்தான் என் பதை நாம் அறிந்து கொள்கின்றபோது நமக்கு ஏற்படும் தெளிவு என்ன? அன்னம், வேலன், பேழை ஆகிய அனைத்தும் குறியீடுகளே என்ற தெளிவுதான்.

## அன்னம் பேச்சில் பின்னம்

இது தொடர்பான மற்றுமொரு செய்தியையும் காண் போம். பேழையை யார் கொண்டு வந்தாலும் அவனை மணப்பேன் என்று கூறினாள் அன்னம். நரிக் கண்ணன் வினாக்களுக்கெல்லாம் வீராவேசமாக விடையும் தருகின் றாள். இந்நிலையில் அவள் என்ன செய்திருக்க வேண் டும்? பேழைகொண்டு வருவோனே என் கணவன் என்ற தெளிவோடு அவள் காத்திருக்க வேண்டும். பேழை கிடைப்பதற்கு முன்பே அவள் வேலனைக் காதலிக்கத் தொடங்கி விடுகின்றாள், பேழை கொண்டு வருவோன் ஒருவனாகவும், காதலிக்கப்படுபவன் வேறொருவனாக வும் அமைந்து விட்டால் என்ன ஆவது? இதுமட்டு மில்லை. வேழ மன்னன் முன்னின்று 'பேழை கொண்டு



வருவோனே என் கணவன்; இது உறுதி' என்று கூறிய வள் நரிக்கண்ணன் மகன் பொன்னப்பனிடம் உரை யாடிய பின்னர்த் தன்தோழியிடம் 'ஏனடி நீலி இக் கிறுக் கனைப் போன்ற ஒருவன் பேழையைக் கொண்டு வந்தால் அவனை நான் திருமணம் செய்து கொள்ளத் தான் வேண்டுமா?' என்று கேட்கின்றாள்.

'இவனைப் போலே
பொருத்தமிலான் பேழையினைக் கொண்டு வந்தால்
பொற்றாலி புனையவோ வேண்டும் என்றாள்'

46:13

இப்படி எல்லாம் அன்னம் குழம்பலாமா? இப்படிக் குழம்பினால் கதைத்தலைவியின் பண்பு நலன் என் னாவது? சொல்லிய உறுதிமொழியை விடாது பற்றித் தான் நிற்க வேண்டும். இங்கே சிலர் வேறு மாதிரியாகக் கூறக்கூடும். அன்னம் உறுதி மொழி சொன்னால் என்ன? பேழைபற்றிய முடிவு தெரியுமுன்பே அன்னம் வேலனைக் காதலித்தால் என்ன? காப்பிய ஆசிரியன் எக்குழப்பமுமில்லாமல் வேலனே பேழையைக் கொண்டு வருமாறு செய்து விட மாட்டானா? ஆகவே இப்படி எல்லாம் ஐயம் கொள்ள வேண்டியதில்லை என்றெல் லாம் கூறலாம்.

காப்பியப் புலவன்தான் விரும்பிய வண்ணம் முடிவைக் கொடுக்கும் வல்லமை உள்ளவன்தான். ஆனால் அந்த முடிவு இயல்பான முடிவாக இருக்க வேண்டும். இடை யிலேயே நம்மைக் கேள்விகேட்க வைக்கும் முடிவாக இருக்கக் கூடாது. கதைத் தலைவியின் 'மனவளத்தில்' மாசினை ஏற்றக் கூடாது. சொன்ன மொழியில் இருந்து புரண்டு பேசவும், நினைக்கவும் கூடியவள் என்ற பழியைப் பெற்றுத்தரக் கூடாது. இதனைக் கதைத் தலைவியின் கவனக் குறைவான பேச்சு என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. காப்பிய ஆசிரியனின் கவனக் குறைவு என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். உடனே காப்பிய ஆசிரியன் ஏன் கவனக் குறைவாக நடந்து கொள்கிறான் என்று கேட்பீர்கள்.

அன்னம் உண்மையில் ஒரு பெண் என்ற எண்ணம் காப்பிய ஆசிரியனுக்கு மறந்துபோய் விடுகின்றது.

அவள் ஒரு பெண்ணாகவும் இருக்கின்றாள்; அதே நேரத்தில் மக்களை உணர்த்தும் குறியீடாகவும் இருக்கின்றாள். இவள் மக்களை உணர்த்தும் குறியீடு என்ற எண்ணம் கவிஞனின் உள்ளத்தில் ஓங்கி நிற்கின்ற பொழுது அவள் பெண் என்ற எண்ணமும் அது தொடர்பான செய்திகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. அவள் ஒரு பெண்; காப்பியத்தலைவி என்ற எண்ணம் மேலோங்குகின்ற பொழுது 'குறியீடு' என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றது. இங்கு மங்குமாகக் கவிஞன் மனம் சென்றுவர நேரும் பொழுது சில முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இம்முரண்பாடுகள் பற்றிக் கவலையுறாது கவிஞர் அன்னத்தைப் பேசவும் நடந்து கொள்ளவும் வைக்கின்ற இச் செயல்கூட நமக்கு எடுத்து மொழிவது என்ன? குறியீட்டு வழிப்பட்ட கதை இது என்ற உண்மையைத்தானே!

## தலைமக்கள் காதலில் ஒரு தகராறு:

இது குறியீட்டு வழிப்பட்ட கதைதான் என்பதை வலியுறுத்தும் மற்றொரு செய்தியையும் காண்போம். ஒரு காப்பியத்தில் இன்றியமையாத செய்திகளைக் காப்பியத் தொடக்கத்திலேயே அறிமுகம் செய்வதும், அவை இடை இடையே தொட்டும் தொடர்ந்தும் வருமாறு செய்வதும், காப்பியத்தின் இறுதியில் அச்செய்தியின் பெருமை அல்லது வெற்றியை விளக்கிக் காப்பியத்தை முடிப்பதும் காப்பிய ஆசிரியன்மார் கைக் கொள்ளும் உத்தியாகும். இக்காப்பியத்தில் வேலன், அன்னம் காதல் எப்படி—எப்பொழுது தொடங்குகின்றது என்பதையும் காண்போம்.

பாண்டியன் பரிசு காப்பியம் 94 இயல்களையும் 175 பக்கங்களையும் உடையது எந்தக் காப்பியத்திலும் இல்லாத வகையில் தலை மக்கள் சந்திப்பும், காதற் குறிப்போடு பேசுதலும் இதில் காலம் தாழ்த்துக் கூறப் படுகின்றது, வேலனும் அன்னமும் தெரிந்து கொண்டது (கண்டு கொண்டது கூட இல்லை) 25, 26-ஆம் இயல்கள் தான். அன்னமும் ஆத்தாவும் குடிசையில் இருந்த போது பகைவர் சூழ்கின்றனர். அன்னத்தை ஆடவன்



போல் உடை மாற்றி தானும் கிழவன் வேடம் பூண்டு குடிசையிலிருந்து தப்பிச் செல்கின்றாள். அப்பொழுது அங்கு வந்த வேலன் பகைவரோடு மோதுகின்றான். இந்நிலையில் அன்னம் ஆத்தாவைப் பார்த்துக் கேட்டாள் 'உன் மகனின் நிலை என்ன' என்று. உடனே ஆத்தா 'ஊர்மீட்கச் சாகட்டும்' என்று கூறி விடுகிறாள். இதனைக் கேட்ட அன்னம்'

'கண்ணெடுத்துப் பார்த்தோமா? கைவா ளோடு
கடும்போரில் தனியாகக் கிடந்த சேயை;
பெண்ணெடுத்து வளர்த்திட்டாள், அதனாலேதான்
பிள்ளை உயிர் போவதையும் பெற்ற தாய் தான்
எண்ணவில்லை, என்றுலகம உனைப்ப ழிக்கும்
என்னால்தான் இபபழியென் றெனைப்ப ழிக்கும்'

25:2

எனக் கூறுகின்றாள். உன்னைப் பழிக்கும், என்னைப் பழிக்கும் இவ்வுலகம் என்று பேசுகின்றாளே தவிர, எனக்காக உயிர் கொடுக்க நின்றவனுக்கு என் உள்ளம் கொடுத்தேன் என்று பேசவில்லை. இம்முதற் சந்திப்பில் காதல் உணர்வே இருவரிடத்தும் தோன்றவில்லை, இதன் பின்னர் 45–ஆம் இயலில் தான் அன்னம் தன் தோழியிடம் (நீலி) வேலனைப் பற்றிக் குறிப்பிடுகின்றாள். என்ன குறிப்பிடுகின்றாள்?

நிலவெரிக்கும் இரவினிலே அரச அன்னம்
நீலிஎனும் தோழியிடம் நிகழ்த்து கின்றாள்;
குலை எரிந்து போனதடி; ஆத்தா வின்கை
குறைபட்டுப் போனதவர் மணவா ளர்தாம்
நிலைகலங்கக் கணுக்காலை இழந்து போனார்;
நெற்றியிலே வாளின்நுனி பட்ட தாலே
மலைநிகர்த்த தோளுடையான் வேல னுக்கு
வாடிற்றாம் மலர்முகமும் என்னால்! என்னால்!

45:1

இங்கேயும் கூட அன்னம் நிலைமையை விளக்குகின்றாளேயன்றி; நெஞ்சத்தைப் பறிகொடுத்தேன் என்று காதல் மொழி பேசவில்லை. வீரப்பனால் ஆத்தாவின் கை வெட்டுப்பட்டதும், ஆத்தாவின் வாளினால்

வீரப்பன் கணுக்கால் வெட்டுப்பட்டதும், பகைவரொடு போராடிய வேலனுக்கு முகத்தில் காயம்பட்டதும் ஆகிய இவற்றால் குலை எரிந்து போனேன். என்றுதான் குறிப்பிடுகின்றாள். வேறு காதற் குறிப்பு எதுவும் இங்கே பேசப்படவில்லை. இனி 54, 55-ஆம் இயல்களில் தான் வேலனும் அன்னமும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படு கின்றது. இங்கேயும் கூடத் தலைமக்கள் காதற்குறிப்பை வெளிப்படுத்தவில்லை.

அன்னமும் நீலியும் செய்யாற்றில் படகிலே செல்கிறார் கள். கடுங்காற்றால் படகு தத்தளிக்கின்றது. வெள்ளத் தோடு படகு இழுத்துச் செல்லப்படுகின்றது. இங்கே தான் வேலன் அன்னத்தையும் நீலியையும் காப்பாற்றிக் குடிசைக்குக் கொண்டு வருகின்றான். இவ்விடத்தில் தான் ஆத்தாவைப் பார்த்து அன்னம் கேட்கின்றாள்.

ஆத்தாவே இவர்யாரென் றன்னம் கேட்டாள்;
அவன்தான்என் மகனென்று ஆத்தா சொன்னாள்;
தீத்தாவும் கண்ணுடையார் வேழ நாட்டார்
சிறைபிடிக்க வருகையிலே மறித்தே என்னைக்
காத்தாரும் இவர்தாமோ என்றாள் அன்னம்,
கடமைபுரிந் தான் இவனே என்றாள் ஆத்தா;
வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க;
மறப்பரிது நும்நன்றி என்றாள் அன்னம்.

55:

இங்கேதான் இருவருக்கும் முறையான அறிமுகம் நடக் கின்றது. இங்கேயும் காதற் குறிப்பைக் காண முடிய வில்லை. 'பாண்டியன் பரிசைத் தேடிக் கொணர்வார்க்கு என்னைத் தருவேன் என்று முரசறைந்ததை நீங்கள் கேட்வில்லை போலும். அறிந்தும் எதற்காக என்று வாளா விருந்து விட்டீர் போலும்; என்றாலும் கொழுத்த புகழ் உமக்கு உண்டு; கொண்டு வந்தால் இந்நாட்டுக்குக் கொடை கொடுத்ததாக அமையும்' என்றெல்லாம் கூறு கிறாள். பாண்டியன் பரிசைக் கொடுப்பார்க்கு என்னைக் கொடுப்பேன் என்பது ஒரு காதற் குறிப்பு என்று எடுத்துக் கொள்ள முடியாது. இது ஒரு பொதுவான செய்திதான். ஆக 54,55-ஆம் இயல்களிலும் காதற்குறிப்பான பேச்சு கள் தலைமக்களிடம் நிகழவில்லை என்றுஅறிகின்றோம்.



## கவிஞன் அமைத்த காதற்களம்:

தலைமக்களிடம் காதற்குறிப்பு தோன்ற வில்லையே தவிரக் கவிஞன் காதற்குறிப்பைத் தோற்றுவிக்கும் ஒரு குறிப்பை வெளிப்படுத்தத் தவறவில்லை. 54-ஆம் இயலில் ஓடத்திலிருந்து அன்னத்தையும் நீலியையும் காப்பாற்றி வந்ததை இப்படிக் கூறுகின்றான்.

கடிதினிலே ஓடத்தைக் கரையிற் சேர்த்தான்
கசங்கியஓர் கொடிபோலக் கிடந்த அன்னந்
துடியிடைக்கும் நீலிக்கும் தோள்கொ டுத்துச்
சுரைபடர்ந்த சிறுகுடிசை தன்னிற் சேர்த்தான்'

5;:1

குடிசை சுரைபடர்ந்த குடிசையாம். சுரைபடர்ந்த குடிசை என்பது நமக்குக் கவிஞன் தெரிவிக்க வேண்டிய இன்றி யமையாமையை உடையதன்று. குடிசை தான் இன்றி யமையாதது; சுரைபடர்ந்திருப்பதன்று. அப்படி இருந்து 'சுரைபடர்ந்த குடிசை' என்று விதந்து கூறுவதுதான் வேறொரு பொருளை விளக்குகின்றது. அஃதென்ன வேறொரு குறிப்பு? கூரை சுரைபடர்வதற்கு வாய்ப்பாக இடம் கொடுத்தது போலக் குடிசைக்குரியவ னான வேலனும் அன்னம் என்னும் கொடிபடரத் தன்னைக் கொடுப்பான் என்ற குறிப்பை வெளிப்படுத்து கின்றது.

இது மட்டும் அன்று. களைப்படைந்திருந்த அன்னத் திற்கு உண்ணவும் பருகவும் உரியனவற்றைக் கொடுக் கின்றாள் ஆத்தா. தடுக்கிட்டுத் தலையணையும் தரு கின்றாள். எல்லாம் கொடுத்து முடித்த பிறகு இறுதியாக ஒன்றைக் கொடுக்கின்றாள். அது என்ன என்கிறீர்களா?

'புனைந்துவைத்தேன் முல்லையிலே கண்ணி ஒன்று
புரிகுழலில் வைஎன்று தந்தாள் ஆத்தா'

54:3

இங்கே கவிஞன் காட்டும் குறிப்பு என்ன? முல்லை என்பது கற்பின் குறியீடு என்பதனைத் தமிழ் இலக்கியம் கற்றவர்கள் அறிவார்கள். ஆகவே ஆத்தா கொடுத்தது முல்லை மலரைமட்டுமன்று; வேலன்

அன்னம் திருமணத்தின் (காதலின்) அச்சாரத்தையும் தான். இதிலும்கூட ஒருநுட்பம் காட்டுகின்றான் கவிஞன். 'கண்ணிஒன்று' என்கின்றான். இரண்டு தனி மலர்கள் ஒருநாரில் ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பது தான் 'கண்ணி' எனப்படும். இரண்டு மலர்கள் ஒரு நாரால் இணைக்கப்பட்டுள்ள கண்ணியைக் கூறுவதன் வாயிலாக இரண்டு நெஞ்சங்கள் ஓர் அன்பு நாரால் இணைக்கப்பட உள்ளன என்பதை முன்குறிப்பாகக் காட்டி வரப்போகும் காதற்சந்திப்புக்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றான் கவிஞன். கவிஞன்களம் அமைத்துக் கொடுத்துவிட்டது உண்மைதான். ஆனால் காதலர்கள் அக்களத்தில் தோன்றி இன்னும் நெஞ்சந்திறந்து பேசவில்லையே!

62–ஆம் இயலில்தான் அன்னம் தன்காதலை மனம் திறந்து பேசுகின்றாள். சோலையிலே அமர்ந்துகொண்டு 'நெஞ்சே! நீ மறைக்காதே! உன்றன் இன்ப யாழை நிகழ்த்து' (62:2) என்கின்றாள், அதன்பின்னர்த்தான் காதல்வெள்ளம் கரையுடைத்துப் புறப்படுகின்றது.

அடுக்கிவைத்த அழகழகாம் உறுப்பு கள்மேல்
அனுப்பிவைத்த என்விழிகள் ஒளியும் மங்கித்
தடுக்கிவிழும்; எழும் ஒன்றில்; சறுக்கி வீழும்;
தனிப்பிறவி வையத்து மக்கள் மீதில்
எடுக்கஎடுக் கக்குறையாச் சுவையின் ஊற்றை
இனிக்கஇனிக் கக்காணும் ஆண்மை; ஆனால்
துடிக்குமோர் காதலில்லை; அன்னோன் கண்ணில்!
தூய்மலரில் தேனிலைஎன் உயிர்வண் டுக்கே!

தீங்கைஇனிப் பொறேனென்னும் கண்கள்; என்றன்
திருநாளைத் தனக்கென்றே நினைக்கும் நெஞ்சம்
வேங்கைஅவன் அஞ்சாதே என்ற பேச்சு;
வீணல்ல; வெற்றிமுர சென்றே சொல்வேன்;
ஏங்கையிலே எனைமீட்டான்; ஒடம் விட்டே!
இறக்கினான் தொட்டஇடம் மறக்கவில்லை.
பாங்குறஓர் காதலில்லை அன்னோன் கண்ணில்
பனிமலரில் தேனிலைஎன் உயிர்வண் டுக்கே!

62;5,6

அன்னத்தின் பேச்சைப் பார்த்தால் இது ஒருதலைக்



காதல் போலத்தான் தோன்றுகின்றது. ஒவ்வொரு பாட்டிலும் (ஐந்து பாடல்கள் வருகின்றன) வேலன் கண்ணில் காதலில்லை; என் உயிர் வண்டு உண்பதற்கு அவன் நெஞ்ச மலரில் தேனில்லை என்றே குறிப்பிடுகின்றாள். நாம் இதற்கு எப்படிப் பொருள் கொள்வது? அன்னம் வேலனை விரும்புகின்றாள். ஆனால் வேலன் இன்னும் அன்னத்தை விரும்பத் தொடங்கவில்லை என்றுதானே சொல்லவேண்டும்? ஆக 62-ஆம் இயலில் கூட அன்னம் வேலன் காதல் இருதலையும் ஒத்த ஐந்திணைக் காதலாக வளரவில்லை என்று தெரிகின்றது.

## ஒருதலை இருதலையாகிறது:

66–ஆம் இயலில்தான் வேலனின் காதல் வெளிப்படுத்தப்படுகின்றது. துறவியாரை (வீரப்பனை) அழைத்து வர அன்னம் நீலியை அனுப்பிவிட, அவ்விடத்தில் அன்னமும் வேலனும் தனித்திருக்கின்றனர். வேலன் கூடத் தனக்கு வேறு வேலை இருப்பதாகக் கூறிச் செல்லப் பார்க்கின்றான். இத்தனிமையை இழந்துவிட விரும்பாத அன்னம் 'நாள்முழுவதும் அனலைத் தழுவிக் கிடக்க முடியுமா? ஆகவே உன் மொழியென்னும் குளிர் மரத்து நிழலில் நான் விளையாட விரும்புகின்றேன்' என்கின்றாள். இதன் பின்னர்த்தான் வேலன் தன் னெஞ்சைத் திறந்து பேசுகின்றான்.

'கரும்பெடுத்துப் பிழிந்ததுவும், என்சொல் தானோ?
கனிஎடுத்து வைத்ததுன்மன் இதழோ? முல்லை
அரும்பெடுத்துக் கொட்டியதும் என்சி ரிப்போ?
அடிஎடுத்தால் அழகெடுக்கும் அன்னமே உன்
சுரும்பெடுத்த இசைபோலும் சொல்லெடுத்தால்
சுவைஎடுப்பாய் இருக்கும் இனிக் கொஞ்சிப் பேசி
இரும்பெடுத்துச் செய்திருக்கும் என்றன் காதில்
இன்னமுதைப் பாய்ச்சாயோ என்றான் வேலன்'

66:5

அறுபத்தாறாம் இயலில்தான் இருவரும் மனமொத்து விரும்பும் காதல் பேசப்படுகின்றது. 62– ஆம் இயலில் அன்னத்தின் விருப்பம் பேசப்பட்டது. இங்கே நமக்கு எழுகின்ற ஐயப்பாடு என்னவென்றால் ஒருகாப்பியத்தில்

தலைமக்களின் காதலை மூன்றில் இரண்டு பங்கு காப்பியம் முடிந்த பிறகு அறிமுகம் செய்யலாமா? இது போல எந்நூலிலாவது செய்யப்பட்டுள்ளதா? மொத்த இயல்94.காதலை வெளிப்படுத்தும் இயல்62.இஃதோர் முரண்பாடாக இல்லையா?

## ஓர் ஒப்பீடு:

பாவேந்தர் பாடிய வேறு காப்பியங்களில் இதுபோலக் கதையின் இறுதிப்பகுதியில் தலைமக்கள் காதலை அறிமுகம் செய்யும் வழக்கம் உண்டா? இதனையும் காணவேண்டும். காதலையும் வெளிப்படுத்தும் காப்பியமாகப் பாவேந்தர் படைத்துள்ளவை பாண்டியன்பரிசு, எதிர்பாராத முத்தம், கடல்மேற்குமிழிகள் என்பவை தாம், ஏனைய படைப்புக்கள் எல்லாம் காப்பியம் என்று சொல்லும் அளவுக்கு உரிமையுடையன அல்ல.

எதிர்பாராதமுத்தம் என்றநூலில் பூங்கோதை தண்ணீர்த் துறைக்கு வருவதில்தான் காப்பியம் தொடங்குகின்றது. பூங்கோதை அங்கு வந்த பெண்களோடு சேர்ந்து நீராடுகின்றாள்.பின்னர் வீடுதிரும்புகின்றாள். திரும்பும் வழியிலேயே அவள் காதலன் பொன்முடியைச் சந்தித்து உரையாடுகின்றாள். அப்படிச் சந்திக்கும் பொழுது அவர்களுக்குள் முன்பே காதல் பிறந்த செய்தி கூறப்பட்டு விடுகின்றது. ஆகக்காப்பியத்தின் தொடக்கத்திலேயே பூங்கோதை –பொன்முடி காதல் பேசப்படுவதை அறிந்து கொள்கிறோம். எழுபத்தெட்டுப் பக்கங்கள் உள்ள இக்காப்பியத்தில் முதல் ஐந்து பக்கங்களுக்குள்ளேயே தலைமக்கள் காதல் அறிமுகம் செய்யப்பட்டு விடுகின்றது.

இனி கடல் மேற்குமிழிகள் என்ற காப்பியத்தை எடுத்துக் கொள்வோம். இது 91–பக்கங்கள் கொண்ட காப்பியம். இதில் முதற்காட்சியிலேயே செம்மறித்திறலுக்கும் பொன்னிக்கும் உள்ள காதல் பேசப்படுகின்றது. மேல் வரும் இயல்களில் எல்லாம் காதலுக்கு வந்த இடையூறுகள் பேசப்பட்டு இறுதியில் அவர்தம் காதல் வெற்றி பெற்றதாகக் காட்டப்படுகின்றது. ஆக இக்காப்பியத்திலும் பாவேந்தர் காப்பிய மாந்தர் காதலைத் தொடக்கத்திலேயே அறிமுகம் செய்து விடுகின்றார். இப்படி



செய்பவர் பாண்டியன் பரிசில் மட்டும் மூன்றில் இரண்டு பங்கு கதை முடிந்தபின் காதலை அறிமுகம் செய்வது ஏன்? இஃதோர் இயல்பற்ற தன்மை அல்லவா? ஆம்! இஃதோர் இயல்பற்ற தன்மைதான் என்றால் இதற்கான காரணம் என்ன?.

அன்னம் வேலன் காதலைக் கூற வந்த காப்பியம் அன்று பாண்டியன் பரிசு. இன மீட்டுருவாக்கத்திற்காகக் குறியீட்டு வகையில் இயற்றப்பட்டது இக்காப்பியம். இதில் இன மீட்டுருவாக்கமும் அதனை வெளிப்படுத்தும் குறியீடும்தாம் இன்றியமையாச் சிறப்பினையுடையனவேயன்றிக் காதலன்று. மேலும் இதில் வரும் அன்னமும் வேலனும் உண்மையில் காதல் வயப்பட்டு நின்ற கதை மாந்தர்கள் அல்லர். குறியீடு ஒரு கதை வடிவம் பெற்ற காரணத்தினால் அதில் காதலும் பேசப்படுகின்றதேயன்றி வேறொன்றுமில்லை. இப்படித் தானே நாம் பொருள் கொள்ள முடியும். இல்லை என்றால் ஏனைய காப்பியங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டுத் தலைமக்களின் காதலைக் காப்பியத்தின் இறுதிப் பகுதியில் அறிமுகம் செய்து வளர்த்துச் செல்வதற்கு வேறு எத்தகைய காரணமும் இல்லை. இது தான் இஃதோர் குறியீட்டு நெறிப்பட்ட காப்பியம் என்பதையும் உண்மையான காதலை உணர்த்த எழுந்த காப்பியம் இல்லை என்பதையும் உறுதியாக்கி விடுகின்றது.

## ஐயமும்-விடையும்:

பேழை, அன்னம், வேலன், வீரப்பன் கூட்டத்தார், கணக்காயன் கூட்டத்தார் இவர்கள் அனைவருமே குறியீடுகள் தாம் என்றால்—வேலன் அன்னம் காதல் கூட உண்மையானதில்லை என்றால் அன்னத்தையும் வேலனையும் காதலர்களாகக் காட்ட வேண்டாமே! நண்பர்களாகவே காட்டியிருக்கலாமே என்று சிலர் கேட்கக் கூடும். ஒரு கதை என்றால் அதில் எல்லாச் சுவையும் விரவி வரவேண்டும். அப்பொழுது தான் காப்பியம் சுவை மலிந்ததாக அமையும். மேலும் புலன் சார்ந்த உணர்வுகள்' மேலோங்கி நிற்கும் காப்பியங்கள் தாம் மக்களின் உள்ளத்தைக் கவரும் தன்மை படைத்தன, எடுத்துக்காட்டிற்கு ஒன்று

சொல்லலாம். கலிங்கத்துப் பரணியில் காடு பாடியது, முதல் களம் பாடியது வரை அமைந்துள்ள செய்திகள் மிகவும் சுவையாகத் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. யாரும் கண்டறியாத பேய்களின் வருணனை கூட வியப் பூட்டும் வகையில் தான் அமைந்துள்ளன என்றாலும் பரணியில் இன்பச் சுவை இல்லை என்றால் நூலுக்கு மதிப்பு இராதுஎன்று கருதினார்கள் போலும். இதனால் தான் கடைதிறப்பு என்ற பகுதியை முற்பகுதியில் அமைத்து இன்பச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடினார் செயங்கொண்டார், கடைதிறப்பு என்ற பகுதி பரணி நூலில் ஓர் இன்றியமையாத பகுதி என்று கூற முடியாது. இருந்தும் கடைதிறப்பு பாடியதேன்? இன்பச் சுவை இல்லாமல் ஒரு நூல் முழுமையுறாது என்ற கருத் துத்தான். இதே கருத்தினால் தான் வேலனும் அன்ன மும் குறியீட்டு வழிப்பட்ட மாந்தரே என்ற போதும் அவர்கள் படிப்பவர் உள்ளத்தில் இடம்பெற வேண் டும் என்றால் இன்பியற் செய்திகளை வெளிப்படுத்தி இயற்கையான காதலர்கள் போலவும், அக்காதலால் உருகுபவர்கள் போலவும் படைக்கப்பட வேண்டும் இஃதன்றி வேறொன்றுமில்லை.

நான் இவ்வாறு கூறுவதை நீங்கள் வேறொரு இலக்கிய வகைமையிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். ஆண்டாள் 'கருப்பூரம் நாறுமோ? கமலப்பூநாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ? என்றெல்லாம் பாடுகின்றாள். கண்ணனின் இதழ் இப்படியெல்லாம் இருக்கும் என்பது கற்பனைதானேயன்றி ஆண்டாள் முத்தமிட்டு அறிந்து கொண்டாள் என்று யாரும் கூற மாட்டார்கள். ஆழ்வார்கள் பாடும் நாயக – நாயகி உணர்ச்சிப் பாடல்களை உண்மையான ஆணுக்கும் பெண்ணுக்குமான காதல் உணர்ச்சியால் விளைந்தது என்று யாராவது கூறுவார்களா? கூற முடியாதுதான். இங்கே பக்தி காதலாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை. மேலும் அன்னமும் வேலனும் கதை மாந்தராக–காதலர்களாக உருவகம் செய்யப்பட்டு விட்டனர். இந்நிலையில் அவர்களை முழுமையாகச் சித்திரித்து உருவகத்தை அல்லது குறியீட்டை முற்று விப்பதுதான் கவிஞனின் இயல்பு. இதனால்தான் அன்னம் வேலன் காதல் அவ்வளவு உருக்கமாகக் கூறப்படுகின்றது. எவ்வளவு உருக்கமாகக் கூறினாலும் அதனையும் மீறி இஃதோர் குறியீடே என்பது வெளி வரத்தான் செய்கின்றது.



கதையில் கவிஞன் சிலவற்றைக் கண்டிப்பாகக் கடைப் பிடிப்பதன் வாயிலாகவும் நாம்ஒரு உண்மையை அறிந்து கொள்ள முடியும். ஏன் கண்டிப்பாக நடந்து கொள் கின்றான்? தன்னுடைய கதைக்கட்டுமானத்தில் குலைவு வந்துவிடக்கூடாது என்பதனால் தான். வீரப்பன் எங்குமே வெளிப்படையாகத் தோன்றாமல் தவிர்த்து விடுகின்றான் கவிஞன். எங்கேனும் ஓரிடத்தில் வீரப்பன் வெளிப்பட்டுத் தோன்றி மக்களைத் திரட்டுவதாகவோ அல்லது பேழையைக் கவர நீலன் முயல்கிறான் என்பதைத் தோழன் ஒருவன் கூறியதும் தன்னுடைய ஆட்களை வேலனுக்குத் துணையாகச் செல்லுமாறோ அவன் கூறியிருக்கலாமே! ஏன் கூறவில்லை. இவ்வாறு கூறி னால் வெளிப்படையான கதையமைப்பில் எந்தக் குறைபாடும் வந்துவிடாது. அப்படி இருந்தும் அவன் அவ்வாறு செய்யாமல் வேழனிடம் இதனைக் கூறுக என்று சொல்லி அனுப்புதல் ஏன்? தன் தோழர்களை உதவிக்கு அனுப்பினால் வெளிப்படையான கதைக்கு ஊறுநேராதுதான்! ஆனால் வீரப்பனும் அவன் தோழர் களும் தலைமறைவு இயக்கத்தின் குறியீடு என்ற கட்டமைப்பில் விரிசல் விழுந்து விடும். இதனால்தான் கவிஞன் இறுதிக்காட்சியில் வீரப்பன் தன் உண்மை உருவைக்காட்டும் வரைவெளிப்பட்டுத் தோன்றாதவாறு மறைத்துவிடுகிறான். கதையில் ஒருநெருக்கடி வந்தும் கூடத்தன்மறைப்பில் தீவிரமாக இருக்கிறான் என்றால் இதனால் வெளிப்படுவது என்ன? இஃதோர் குறியீடு என்பதுதானே!

கணக்காயன் எங்கும் வெளிப்படையாகவே இயங்கு பவன் என்ற நிலையிலிருந்து இறுதி வரை கவிஞன் மாற்றாமலேயே கதையை நடத்திச் செல்கின்றான். எங்கேனும் ஓரிடத்தில் நரிக்கண்ணன் வஞ்சனையை முறியடிக்கத் தலைமறைவாகப் போனான் என்றோ – வீரப்பன் கூட்டத்தாரோடு மலையில் சென்று சில நாள் மறைந்து வாழ்ந்தான் என்றோ–அங்கே இருவரும் கலந்து பேசிக் கதிர்நாட்டின் விடுதலைக்கு வித்திட்டனர் என்றோ கவிஞன் பேசியிருக்க முடியும். இதற்கெல்லாம் வெளிப்படையான கதையும் இடம் கொடுக்கவே செய் யும் அப்படி இருந்தும் அவன் எங்குமே தலைமறை வானான் என்று கூறாமல் கண்டிப்புடன் கவிஞன் நடந்து கொள்கின்றானே அது ஏன். இப்படிக் கூறினால்

வெளிப்படையான கதையமைப்பில் எந்தக் குழறுபடியும் வெளிப்படையான கதையமைப்பில் குழறுபடி வந்துவிடும். நேராது, ஆனால் குறியீட்டில் குழறுபடி வந்துவிடும். இடையில் கணக்காயன் ஒருமுறை தலைமறைவானான் என்றால் கூட அவன் வெளிப்படையான இயக்கத்தின் குறியீடு என்பதில் குறைபாடு நேர்ந்துவிடும். இதனால் தான் கவிஞன் கண்டிப்பாக இருக்கின்றான். இக்கண்டிப் புத்தான் இஃதோர் குறியீடு என்பதை வெளிப்படுத்து கின்றது.

இனி மற்றுமோர் ஐயத்தை நோக்குவோம். கதிர் நாடு வேழனால் வெல்லப்பட்டுள்ளது. கதிர்நாட்டு விடுதலைக்குத்தான் எல்லாரும் போரிடுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்றுகூடி வேழமன்னனை நாட்டை விட்டுத்துரத்தவில்லை. நரிக்கண்ணனின் சூழ்ச்சிகள் தாம் முறியடிக்கப்படுகின்றனவேயன்றி வேழனின் வெற்றி முறியடிக்கப்படவில்லை. வேழனை வெற்றி கொள்ளாமல் கதிர்நாட்டார் எப்படி விடுதலை பெறுவார்கள். கதையில் ஓரிடத்தில்வேழன் 'கதிர்நாட்டை அபகரித்துக் கொள்ள மாட்டேன். ஓர் அரசை நிறுவி (கதிர்நாட்டவரால்) அவரிடம் இருந்து கப்பம் பெறு வேன்' என்று கூறுகின்றான். வேழமன்னனின் சொற்படி வேழநாட்டுக்குக் கப்பம் கட்டும் நாடாகக் கதிர்நாடு இருந்தால் அதனை விடுதலை பெற்ற நாடு என்று சொல்லமுடியுமா? பேழையை மீட்பது என்பதும் இன மீட்டுருவாக்கம், விடுதலை என்பனவும் ஒன்றே என்றும் இதுவரை கூறிய கருத்திற்கு இது முரணல்லவா என்றெல்லாம் ஐயங்களை அடுக்க முடியும். இவ்வை யங்களுக்கெல்லாம் விடைகாண வேண்டுமானால் நாம் மீண்டும் சில செய்திகளை ஆராய வேண்டும்.

தமிழகத்தின் வீழ்ச்சிக்கான செய்திகளை நாம் மீண்டும் நோக்குவோம். அதனைப் பாண்டியன் பரிசு கதை யோடும் ஒப்பு நோக்குவோம். கதிர்வேல் மன்னனும் வேழனும் தமிழ் மன்னர்கள்தாம். இவர்களைச் சில வஞ்சனையாளர் (நரிக்கண்ணன் போன்றோர்) தம் வஞ்சனையால் அழிக்கின்றனர். வஞ்சனையாளர்களால் தமிழனும் தமிழனும் மோதி அழிந்த வரலாறுதான் தமிழனின்வரலாறு என்று பேசுகிறது பாண்டியன் பரிசு. தமிழக வரலாறும் இப்படித்தான் பேசுகிறதா?

பண்டைத்தமிழகவரலாற்றின்தாற்றங்காலாக விளங்கும்



புறநானூற்றில் ஒரு செய்தி. காவிரிப்பூம் பட்டினத் துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் பாடுகின்றார். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவ னும் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒரு சேர நட்பினராய் வீற்றிருக்கின்றார்கள். இதனைக் கண்ட புலவர் காரிக்கண்ணனார் பெருமகிழ்ச்சியோடு அவர்களை வாழ்த்துகின்றார். என்ன சொல்லி வாழ்த்து கின்றார்?

'நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சின் நும் இடைபுகற்கு அலமரும்
ஏதில் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்கநும் புணர்ச்சி'

புறம்—58

காரிக் கண்ணனார் கூறுகின்றார். 'உங்களிடையே வஞ்ச னையாளர் எப்படிப் புகுந்து விளையாடுவார்கள் தெரி யுமா? நல்லவர்களைப் போலவும், உங்கள் நலத்தை நயக்கின்றவர்கள் போலவும், முன்னோர்கள் காட்டிய நெறி இது என்பதுபோலவும் பேசி இடையே நுழைவார் கள்; நுழைந்து அன்பால் பிணைப்புண்ட உங்கள் நெஞ் சின் இடையிலே விரிசலை ஏற்படுத்துவார்கள். அத் தகைய வஞ்சனையாளர்களின் சொற்களுக்குச் செவி சாய்க்காது இன்றுபோல் நும் நட்பு என்றும் விளங்கட் டும்' என்கிறார். இரண்டு தமிழ் மன்னர்களுக்கிடையில் வஞ்சனையாளர் எப்படிச் சிண்டு முடிந்தனர் என்பதும், எப்படி எல்லாம் முயல்வார்கள் என்பதும் நன்கு விளக்கப் படுகிறது. இதுதான்— இவ்வஞ்சனையாளரின் செயற் பாடுகள்தாம் தமிழ் வேந்தரின் வீழ்ச்சியாகிப் பின்னர்த் தமிழ் இனத்தின் வீழ்ச்சியாக மாறியது. நரிக்கண்ணன் களைப் புறநானூற்றிலும் பார்க்கிறோம்; பாண்டியன் பரிசிலும் பார்க்கிறோம்.

காரிக்கண்ணனார் சிண்டு முடியும் ஏதில் மாக்களின் பொதுமொழியைத் தவிர்ப்பதன் வாயிலாகத் தமிழ் மன்னர்களின்—தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்து கின்றார். பாவேந்தரும் அதைத்தான் சொல்கின்றார். நரிக்கண்ணர்கள் முறியடிக்கப்பட்டு வேழ நாடும் கதிர் நாடும் நட்புநாடாகமாறவேண்டுமென்கின்றார் சுருக்க

மாகச் சொன்னால் தமிழர்கள் வேற்றுமை வளர்க்காமல் ஒற்றுமைப்பட வேண்டும் என்கிறார். அதுசரி ஒருநாடு கப்பம் கட்டுவதும் ஒரு நாடு கப்பம் பெறுவதுமாக இருந்தால் அங்கே எப்படி ஒற்றுமை வளரும் என்பீர்கள். இதனையும் காண்போம்.

கப்பம் பெறுவேன் என்று வேழ மன்னன் கூறியது உண்மைதான். ஆனால் காப்பியத்தின் இறுதியில் அவன் வேலனுக்கு முடிசூட்டுகின்ற நேரத்தில் என்ன பேசினான் என்று பார்க்கவேண்டும்.

திருமணமும் இதுஎன்றான்; கதிர்நாட் டாட்சித்
திருமுடியும் இதுவென்று புனைந்தான் நன்றே'

93:2

இப்படித்தான் வேழன் கூறுகின்றானேயன்றி வேழ நாட்டுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசு என்று வேழன் இங்கே பேசவில்லை. இப்படிப் பேசவைத்திருக்க முடியாதா கவிஞனால்? முடியும். மேலும் முன்னர்க் கூறிய ஒரு கருத்தைத்தான் கவிஞன் வற்புறுத்தப் போகின்றான். அப்படி இருந்தும் கப்பம் பற்றிய செய்தியையும், சிற்றரசு என்ற செய்தியையும் ஏன் கவிஞன் கூறாது விடவேண்டும். இவற்றைக் கூறக் காப்பியத்தில் இடமில்லை என்ற காரணத்தினாலா? இல்லை. இதனைக் கூறக் கவிஞனுக்கு மனமில்லை என்பதனால் தான். தன்னுடைய குறியீட்டை எங்கே முழுமையாக முற்றுவிக்கின்றானோ அவ்விடத்தில் வேழனையும் தன் பழைய கருத்தை (கப்பம்) வலியுறுத்தாது ஒதுங்கியிருக்குமாறு செய்துவிடுகின்றான். மேலும் வேழனை நாட்டிலிருந்து துரத்தவேண்டுமானால் மீண்டும் கதிர் நாடும் வேழ நாடும் போரிலே இறங்கவேண்டியிருக்கும். தமிழர்களுக்குள் போர் கூடாது; ஒற்றுமை வேண்டும் என்பதனை வலியுறுத்த வந்த கவிஞன் மீண்டும் போரைத் தொடங்க அனுமதிப்பானா?

'இருவீர் வேறல் இயற்கையும் அன்று' என்றார் கோவூர் கிழார். கதிர்நாட்டுக்கும் வேழ நாட்டுக்கும் மீண்டும் தோன்றிய போரில் வேழன் வெல்லப்பட்டான் என்றால் அத்தோல்வியும் தமிழனின் தோல்விதானே! இதனால் தான் வேழன் தன்மனத்தை மாற்றிக்கொண்டு (கப்பம் பெறும் மனத்தை) கதிர் நாட்டுரிமையை அவர்களுக்கே வழங்குவதாகக் கதையை முடிக்கின்றான். இதுதான் கவிஞனின் உள்ளக் கருத்து என்பதை நாம் அறிந்து கொள்ளும்போது கப்பம் பற்றிய செய்திகளும் கதிர்நாடு வேழநாடு என்ற வேற்றுமைகளும் கூட ஞாயிற்றின் முன் பனிபோல மறைகின்றன.



## பெண்ணுரிமைப் பெரும்போர்:

வரலாற்று நோக்கில் தமிழின வீழ்ச்சியைக்காப்பியத்தின் முற்பகுதியில் சித்திரித்துக் காட்டிய பாவேந்தர் அதன் தொடர்ச்சியாகத் தமிழின மீட்டுருவாக்கத்திற்கு ஒரு பேழையைக் குறியீடாக்கிய செய்தியையும் மீட்டுருவாக்கப் போரில் அன்னம், வேலன், வீரப்பன் கூட்டத்தார், கணக்காயர் கூட்டத்தார் போன்றோரைக் குறியீட்டு வழிப்பட்ட கதை மாந்தர்களாகக் காட்டிய செய்தியையும் கண்டோம். இதே வரலாற்று நோக்கில் பெண்கள் வீழ்ச்சியிலிருந்து எழுச்சி பெற்றுப் புறவாழ்க்கையிலும் அகவாழ்க்கையிலும் உரிமை பெற்றுத் திகழ வேண்டும் என்ற குறிக்கோளை அன்னம் ஆத்தா வாயிலாக எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதையும் நாம் காணவேண்டும்.

பாவேந்தர் எல்லா வகையான அடிமைத் தனங்களையும் எதிர்த்தவர். ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்பதெல்லாம் அவர் அறியாத ஒன்று. பெண்ணுக்கு வாழ்வுரிமை வேண்டும் என்பதனை நோய்வாய்ப்பட்ட ஒரு கணவன் தான் இனிமேல் உயிர்பிழைக்க முடியாது என்பதை அறிந்து கொண்டவுடன் தன் மனைவியை அழைத்து 'நான் இறந்து விட்டால் நீ மறுமணம் செய்து கொள்ள வேண்டும், என்று கேட்பதாகக் கவிதை தீட்டியதன் வாயிலாக வெளிப்படுத்தியவர். ஆணுக்குள்ள அனைத்துரிமைகளும் பெண்களுக்கும் கிடைத்தே தீர வேண்டும் என்ற கருத்தினர். இத்தகைய கருத்துக்களை அவருடைய எல்லா நூல்களிலும் நாம் காண முடியும்.

இத்தகைய நோக்கோடு தான் பாண்டியன் பரிசில் வரும் ஆத்தாவைப் படைத்துள்ளார். அரசியலும், ஆட்சி

மாற்றமும், அதற்கான போராட்டமும் ஆண்களால் தாம் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதெல்லாம் பழைய கதை. அரசியல் விடுதலைப் போராட்டத்தை இயக்கும் அறிவு, வலிமை, மனத்தெளிவு, போராற்றல் போன்றவற்றையும் பெண்கள் அடைய வேண்டும் என்பதைத் தான் ஆத்தா அன்னத்தைக் காப்பாற்றப் போடும் வேடங்களாலும், வேழ மன்னனிடம் சென்று பேசுவதனாலும், பகைவன் உளவறிய வந்துள்ளான் போலும் என்ற ஐயம் வந்த போது துரத்திச்சென்று வீரப்பன் கணுக்காலை வெட்டிய தனாலும் வெளிப்படுத்திக் காட்டுகின்றார்.

இது மட்டுமா? கணவன் கருத்துக் கொவ்வாதவனாக இருந்தால் அவனை விலக்கி வைக்கின்ற உரிமை, மன வலிமை (இது ஆண்களுக்கு மட்டுமே இருந்தது) இவற்றையும் பெண் பெற வேண்டும் என்கிறார். வீரப்பன் திருடன் என்று தெரிந்ததும் 'நீ திருடுவதை விட வேண்டும்; இல்லை என்றால் என்னைத் தீண்டு வதை விட வேண்டும்?' என்று ஆத்தாவைக் கூற வைப்பது மட்டுமன்று; அப்படியே வாழ்ந்து காட்டவும் வைக்கின்றார். இலக்கிய வரலாற்றிலேயே கணவனை விலக்கி வீட்டை விட்டு வெளியேற்றிய முதற்பெண் ஆத்தாவாகத் தான் இருக்க முடியும். பெண்ணுரிமை பற்றி இன்னும் மிகத் தீவிரமான கருத்தையும் பாவேந்தர் கொண்டிருந்தார் என்பதை ஒரு கவிதைத் தொகுதி எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

கணவன் கொடுமைக்காரன்; மாமி கொடுமைக்காரி; மாமனும் இவர்கட்குச் சற்றும் இளைத்தவன் அல்லன். இந்நிலையில் அப்பெண் கண்ணீரே கதியாகக் கிடக் கின்றாள். இப்படி வாழும் ஒருநாளில் அரசனின் ஏவலர் கள், தெருமுனையில் நின்று அறிவிப்பு ஒன்றை வெளி யிடுகின்றனர். என்னஅறிவிப்பு? இதோ 'பெண்கள் விடுதலை' என்ற தலைப்பில் வரும்பாடல்:

'பெண்டாட்டி என்ற பெயரடைந்த நாள்முதலே
ஒண்டொடிக்கும் சொத்தில் ஒருபாதி உண்டுரிமை;
தன்மனைவி செத்தால்தான் வேறுமணம் தான்செயலாம்;
இன்னல் மனைவிக்கு இழைத்தால் கொலைக்குற்றம்;



ஆளவந்தார் ஆணையிது என்றே அறிவித்து
வாளுருவிக் காட்டி வழிநடந்து சென்றார்கள்'

குயில் பாடல்கள் ப. 145, 146

அரசும் அரசின் சட்டங்களும் பெண்களுக்குப் பாதுகாப் பாக இருக்க வேண்டும். மனைவிக்குத் துன்பம் செய்யும் கணவன் தூக்கிலே போடப்படவேண்டும் என்றெல்லாம் பெண்ணுரிமை பற்றிப் பேசுகின்றார். சட்டங்களும், அரசு ஆணைகளும் இருந்தால் போதுமா? அச்சட்டங் களைப் பயன்படுத்திக் கொள்கின்ற-கணவனைத் தட்டிக் கேட்கின்ற மனவலிமையையும் பெண்கள் பெற்றாக வேண்டும் என்கின்றார் பாவேந்தர்.

பெண்கள் கோழைகளாகவும், அடிமைத்தனத்தை உதறி யெறிய முடியாதவர்களாகவும் இருந்துவிட்டால் அரசும் அரசின் சட்டங்களும் என்ன உதவியைச் செய்யமுடியும். அதனால் பெண் அநியாயத்தைக்கண்டு பொங்கிச்சீறும் மனம் உள்ளவளாக இருக்கவேண்டும் என்று காட்டு கின்றார். 'நாள்மலர்கள்' என்ற தொகுதியில் 'மான மறத்தி' என்ற தலைப்பில் அமைந்தபாடல் இது.

திருப்பத்தூர்க் கடுத்த சிற்றூர் ஒன்றில்
விருப்புற்று மணந்த கணவன்; வெறி நாய்
தெருத்தொறும் சுற்றிச் சீரழி தல்போல்
பொருளை விரும்பும் ஒருசில குச்சுக்
காரிகள் பின்னால் கழித்தான் பலஇரா;
ஓரிரா வீட்டுக்கு வந்தான்; மனைவியை
வேண்டினான்; விரும்பி மணந்தவன் தன்மனை
தாண்டினான் கட்டவிட் டோடும் தலைவன் போல்;
தப்பினை ஒப்பாத் தமிழச் சியவள்;
தான்அப் படித்தவறு செய்து மீண்டால்
ஊனில் உயிரொட்டி இருக்குமா என்றாள்;
உரிய மனைவியின் உரிமைக் குரலோ
விரியும் மின்னல் வெட்டெனக் கேட்டது.
கேட்டதும் கீழிருந்த விறகுக் கட்டையை
ஓட்டினான் மங்கைமேல்; ஒதுங்கினாள் மனைவி
வீசிய கட்டை வாசலில் தூங்கிய
ஓராண்டுக் குழந்தையின் உயிரைக் குடித்தது;
பேராற் றைப்போல் பேசிட வில்லை;

எரிந்த கட்டையை எடுத்துக் கணவனைக்
குறிபார்த் தடித்தாள்; தப்பவில் லைகுறி;
வழக்கு மன்றில் வந்து நிறுத்தினர்;
ஒழுக்கம் தவறினான்; ஒரேஒரு மகனையும்
சாக டித்தான்; சாகடித் தானைச்
சாகடித் தேன்நான்'

நாள் மலர்கள் ப.115

ஏதோ ஒரு உண்மை நிகழ்ச்சியைத்தான் பாவேந்தர் பாடலாக எழுதியுள்ளார். எழுதியதன் நோக்கம் என்ன? இதன்வழியாகக் கவிஞர் என்ன சொல்ல விழைகின்றார்? ஒன்று;பெண்களே உங்கள் உரிமையைப் பேண எதற்கும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்பது. இரண்டு;பெண்கள் இத்தகைய மனநிலைக்கு வருமுன்பே ஆண்களே நீங்கள் திருந்தி விடுங்கள் என்று எச்சரிப்பது.

இப்பாடலின் கருத்து மிகவும் கடுமையானதுதான். மென்மையான மகளிரே இத்தகைய கடுமையான நிலைக்கு வந்துசேர்ந்தால் தான் விடிவுகாலம் பிறக்கும் என்ற நிலையைச் சமுதாயம் அனுமதிக்கக் கூடாது. ஆடவர் தம்மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். பெண்டிர்க்கு உரிய உரிமைகளை வழங்க வேண்டும். இந்த வழியில் அரசுகள் ஆணைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இதுதான் கவிஞரின் உள்ளக்கருத்து. ஆகஉரிமைக்காக எதிர்த்துப் பேசவும், எதிர்த்துத் தாக்கவும் கூடவேண்டும் என்ற கருத்து இங்கே விதைக்கப்படுகிறது என்றால் பாவேந்தர் பெண்ணுரிமைக் கோட்பாட்டில் எவ்வளவு தீவிரமானவர் என்பது புலனாகும்.

இதே தீவிரத்தைத் தான் நாம் பாண்டியன் பரிசில் ஆத்தாவின் உருவில் சந்திக்கின்றோம். ஆத்தா எதிர்த்துப் பேசுகின்றாள். கணவனை மட்டுமன்று, அக்கிரமங்கள் எங்கே தலைதூக்குகின்றனவோ அங்கேயெல்லாம் எதிர்த்துத் தாக்குகின்றாள். கொண்டவனை மட்டுமன்று; கொடுமைகள் தோன்றிய இடத்தில் எல்லாம். ஆத்தா என்ற பாத்திரம் பாண்டியன் பரிசில் ஒரு தனித்தன்மை வாய்ந்த பாத்திரம் என்பதை நாம் மறக்க முடியாது. ஆத்தாக்களைச் சமுதாயத்தில் நாம் சந்திப்பது அவ்வளவு எளிதில்லை. ஆனால் ஆத்தாக்



கள் பெரும் எண்ணிக்கையில் வந்தால் எல்லா உரிமைகளும் எல்லாருக்கும் தாமே கிடைக்கும் என்பதைப் பாவேந்தர் காட்டுகின்றார். சுருக்கமாகச் சொன்னால் **புறவாழ்க்கையில் ஒரு புரட்சிப் பெண்ணாக** ஆத்தாவை வடிவமைத்துக் காட்டுகின்றார் பாவேந்தர். அது என்ன புறவாழ்க்கையில்? அப்படி என்றால் அக வாழ்க்கையிலும் ஒரு புரட்சிப்பெண் இருக்கின்றாளா என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆம் அகவாழ்க்கையிலும் ஒரு புரட்சிப் பெண்ணை நாம் சந்திக்கின்றோம்; அன்னத்தின் வடிவில்.

## அகவாழ்வில் பெண்ணுரிமை:

தொல்காப்பியர் கால முதல் இன்று வரை அகவாழ்வில் மகளிரின் உரிமைகள் பெரும்பாலும் மறுக்கப்பட்டே வந்துள்ளன. ஓர் ஆடவன் ஒரு பெண்ணைப் பார்த்தால் இவள் யார்? — என்று தன் மனத்தினுள்ளும் எண்ணிப் பார்க்கலாம்; வாய்விட்டுச் சொல்லியும் பார்க்கலாம்; அருகில் உள்ளவரிடம் உசாவியும் அறியலாம். இவ்வுரிமை ஆணுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பெண் ஒரு ஆணைப் பார்த்த போது இவன் யார்? தேவனோ? மூவேந்தருள் ஒருவனோ? என்றெல்லாம் எண்ணவும் கூடாது; வாய்விட்டுக் கூறவும் கூடாது. அயலில் உள்ளாரிடம் பேசவும் கூடாது. பேசினால் என்ன ஆகும்.? நாணம் இல்லாதவள் என்று உலகம் பழிக்கும். இவற்றையே கூடாது என்றால் பெண் தன்னுள்ளத்தில் உள்ள வேட்கையைத் தலை மகனிடம் கூறவோ—என்னை வந்து தீண்டுக, என் வேட்கையைந் தணிக்க என்றெல்லாம் கூறவோ உலகம் அனுமதிக்குமா? அனுமதிக்காதுதான். இது பற்றித் தொல்காப்பியர் என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்.

காமத் திணையிற் கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
வெளிப்பட வாரா அவன்வயி னான.

தொல்—களவு-18

இதோ இச்சூத்திரத்தின் பொருளைஇளம்பூரணர் விளக்கு

கின்றார்: 'தலைவியிடத்து நிலைபெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்மைக்கு அங்கமாகலின் காம ஒழுக்கத்தின் கண் குறிப்பினானும், இடத்தினானும் அல்லது வேட்கை புலப்பட நிகழாது தலைவியிடத்து? நாணம், மடம் என்பன பெண்மைக்கு உறுப்பாம். ஆகவே அவள் வேட்கையைப் புலப்படுத்தமாட்டாளாம். என்ன இதன்பொருள்? பெண் தன்னுடைய வேட்கையைப் புலப்படுத்தக் கூடாது என்று சமுதாயம் கட்டளையிட்டு விட்டது என்பது தான்.

ஆனால் அவள் மனத்துள் நிகழும் வேட்கைக் குறிப்பை அறிந்து கொள்கின்றவரின் அறிவாற்றலைப் பொறுத்துக் குறிப்பினால் வேண்டுமானால் அவள் தன் வேட்கையைக் கண்டுகொள்ள முடியும் என்கின்றார். நாணம் மடம் என்ற பெயரால் அவளுடைய விருப்புரிமை தடுக்கப்பட்ட செய்தி ஒரு நீண்ட வரலாறு என்றுதான் கூறவேண்டும். பண்பாட்டின் பெயராலும், நாகரிகத்தின் பெயராலும், ஒழுக்கத்தின் பெயராலும் குலச்சிறப்பு அல்லது குடிப்பிறப்பின் பெயராலும் இந்த உரிமை நெடுங்காலமாகவே மறுக்கப்பட்டு வருகின்றது. தொல்காப்பியர் இது தொடர்பாகக் கூறும் இன்னொரு கருத்தையும் இங்கே பார்த்துவிடுவோம்.

> 'தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
> எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை;
> பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்
> பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப'
>
> தொல்-களவு : 82

'தலைவி தனது வேட்கையைக் கிழவன் (தலைவன்) முன்பு சொல்லுதல் நினைக்குங் காலத்துக் கிழத்திக்கு (தலைவிக்கு) இல்லை. அங்ஙனம் சொல்லாத இடத்தும் புதுக்கலத்தின்கண் பெய்த நீர் போலப் புறம்பொசிந்து காட்டும் உணர்வினையும் உடைத்து அவ்வேட்கை என்றவாறு—' இது இளம்பூரணர் தரும் விளக்கம்.

'தன்னுடைய விருப்பத்தைத் தன்னுடைய தலைவன் முன் வாய்விட்டுக் கூறுதல் தலைவிக்குக் கிடையாது' என்று தலைவிக்கு ஒரு கடுமையான தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்றாலும் புதிய மண் கலத்தில்



நீரைப் பிடித்து வைத்தால் அந்நீர் வெளியே கசிந்து தோன்றுவது போலத் தலைமகளுடைய காதல் வேட்கை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு தோன்றும் என்று மேலே போடப்பட்ட தடையாணைக்கு ஒரு விதி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவள் தன் விருப்பத்தை, வேட்கையை யாரிடம் வெளிப்படுத்துகின்றாள்? தெருவில் போகின்ற ஒருவனிடமா? இல்லை. தொட்டுத் தாலிகட்டியவனிடம் தான்—தாலீ கட்ட இருப்பவனிடம்தான். இதையேன் கூறக்கூடாது என்று தடுக்கவேண்டும்! கூறினால் பண்பாடு என்னாவது? நாணம் என்னாவது? இப்படியொரு பெண்ணடிமை ஆதிக்கம். இதனை வெறும் ஆதிக்கம் என்று கூறக்கூடாது. ஆதிக்கத்தின் ஆணிவேரே இதுதான்.

## *தடைமீறிய சேக்கிழார்*

தன்னுடைய காதல் விருப்பத்தைத் தலைமகள் புலப்படுத்தாமல் மறைத்துக் கொள்ளவே வேண்டும். தலைமகனைப்போல 'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர் கொல்' என வியந்து பேசுதலும், தலை மகனிடம் தன் விருப்பத்தைக் கூறுதலும் ஆகிய இவற்றுக்கு இயல்பான நாணம் (இதில் பொதுவாக நாணம் இருபாலார்க்கும் உரியது.) ஒருதடை. சமுதாயம் பண்பாடு என்ற பெயராலே விதித்தது மற்றொரு தடை. இவ்விரு தடைகளையும் இலக்கியப் புலவர்கள் மீற விரும்பாதது மட்டுமன்று; பொன்னேபோல் போற்றவும் செய்தனர். பல ஆயிரம் ஆண்டுகளாக பழைய தடத்திலேயே தத்தம் இலக்கியத் தேரினைச் செலுத்திவந்தார்கள். ஆனால் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் தாம் இத்தடையில் ஒரு சிறிய பகுதியை முதன் முதலில் மீறிப் புதுத்தடம் போட்டுக் காட்டுகின்றார்.

திருவாரூரில் சுந்தரர் பரவையாரைக் கோயிலில் சந்திக்கின்றார். பரவையாரின் எழிலில் தன்னுள்ளத்தைப் பறிகொடுக்கின்றார் சுந்தரர். இப்பேரழகி யார்? சுந்தரரின் கற்பனைச் சிறகுகள் விண்ணை அளாவுகின்றன.

> 'கற்பகத்தின் பூங்கொம்போ! காமன்தன் பெருவாழ்வோ!
> பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ! புயல்சுமந்து

விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ!
அற்புதமோ! சிவனருளோ! அறியேன்என் றதிசயித்தார்.

சுந்தரர் வாய்விட்டுப் பேசி அதிசயிக்கிறார். கற்பக மரத்தின் பூங்கொம்போ என்கின்றார். மன்மதனின் பெருமை பொருந்திய வாழ்வே ஒரு பெண் வடிவம் எடுத்து வந்ததோ என்கின்றார். மதியில் (முகத்தில்) வில்லும் (புருவமும்) குவளையும் (கண்ணும்) பவளமும் (உதடும்) பூத்திருக்க வந்த ஒரு பூங்கொடியோ என்கின்றார். இவள் ஓர் அற்புத வடிவோ! சிவனருள் என்பதுதான் இவ்வழகிய தோற்றம் எடுத்து வந்துள்ளதோ என்றெல்லாம் வாய்விட்டுக் கூறுகின்றார். இது தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே எல்லாத் தலைமகனும் கூறிவந்த செய்திதான். இவ்வாறு கூறும் உரிமை அவனுக்கு நெடுங்காலமாகவே இருந்து வருகின்றது. இது அவனுக்குப் பரம்பரை உரிமை. தடம்புரளாமல் வந்த ஒரு தலைமகனாகவே சுந்தரர் இங்கே காட்சியளிக்கின்றார்.

பரவையாரும் சுந்தரரைப் பார்க்கின்றார். அவர் நிலை என்ன? இங்கேதான் சேக்கிழார் பழைய தடத்திலிருந்து கொஞ்சம் தலைமகளை விலகி நடக்க வைக்கின்றார். இதோ சேக்கிழாரின் பாடல்.

முன்னேவந் தெதிர் தோன்றும் முருகனோ? பெருகொளியால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேஎன் மனந்திரிந்த இவன்யாரோ **எனநினைந்தார்**

அகப் பொருளில்—காதல் உலகில் எப்பெண்ணும் தன் உள்ளம் கவர்ந்தவனைப் பற்றி இவன் யார் என்று **எண்ணிப் பார்க்கவும்** கூடாது என இருந்து வந்த நெடுங்காலத் தடையைக் கொஞ்சம் தளர்த்தி இவன் யார் முருகனோ? மன்மதனோ? விஞ்சையனோ? சிவனருள் பெற்றவனோ என்றெல்லாம் பரவையாரை **எண்ணிப் பார்க்குமாறு** செய்கின்றார் சேக்கிழார். காதல் உலகில் முதன் முதலாக எண்ணிப்பார்க்கும் ஓர் உரிமையைப் பெண்களுக்குப் பெற்றுத்தந்தவர் சேக்கிழாரே என்ற பெருமையையும் பெறுகிறார். தொல்காப்பியர் காலத்திலிருந்து ஏறத்தாழ ஆயிரத்



தைந்நூறு ஆண்டுக் காலத் தடையைச் சிறிது உடைத்த புரட்சியாளர் என்ற பாராட்டையும் பெறுகின்றார்.

சுந்தரரைப் பற்றிச் சொல்லும் போது 'அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயத்தார்' என்றவர் பரவையாரைப் பற்றிச் சொல்லும் போது '**இவன் யாரோ என நினைந்தார்**' என்று எச்சரிக்கையாகப் பேசுகின்றார் சேக்கிழார். 'இவன் யாரோ என வியந்தார்' எனப் பாடலை முடித்திருப்பாரேயானால் பரவையாரும் வாய்விட்டுக் கூறியதாகப் பொருள்பட்டு விடும். அப்படிப் பொருள்பட்டால் ஆணுக்குரிய அகத்துறை உரிமைகள் அனைத்தும் பெண்ணுக்கும் கிடைத்துவிட்டதாகிவிடும். அவ்வளவு புரட்சிக்குச் சேக்கிழார் ஆயத்தமாக இல்லை போலும். என்றாலும் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே பெண்கள் தம் உள்ளம் கவர்ந்தவனைப்பற்றி எண்ணி வியத்தல் கூடாது என்ற தடையை முதன் முதலாக மாற்றிக் காட்டிய சேக்கிழாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

## *அன்னம் உடைத்த அகத்துறைத் தடைகள்:*

பாவேந்தர் பாண்டியன் பரிசில் வருகின்ற அன்னத்தின் வாயிலாக அகத்துறையில் ஊடுருவிக் கிடந்த நீண்ட கால நெடிய தடைகளை அடியோடு வெட்டி எறிகின்றார். பெண்ணடிமைத்தனம் எந்த உருவில் வந்தாலும் எதிர்த்தே தீரவேண்டும் என்பது போலப் பாவேந்தர் படைத்த அன்னத்தின் இன்பத்துறைப் பேச்சுகள் இடம் பெற்றுள்ளன. இந்த அடிமைத்தனத்தை எதன் பேராலே நிறுவினார்கள்? நாணத்தின் பெயராலும் மடமையின் பெயராலும்தான் நிறுவினார்கள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்கள் பெண்களின் அணிகலன்கள் என்று சொல்லி அவர்தம் உணர்ச்சிகளை உரைக்கத் துடிக்கும் உதடுகளுக்குப் பூட்டுப் போட்டார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக இருப்பன அச்சமும், நாணமும் மட்டும் தான் என்ற கருத்து பாரதியார் நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருந்ததை நாம் பார்க்க முடிகின்றது.

'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்ற

எரிச்சல் கொப்புளிக்கும் பாரதியாரின் பாடல் வரி நமக்கு இதனைத்தான் காட்டுகின்றன. நாணம், மடம் போன்றவை விலங்குகளே. இவற்றை முறிக்காமல் பெண்களுக்கு வாழ்வில்லை என்பதைப் பாரதியார் தெளிவாகவே எடுத்துக்காட்டுகின்றார். இதே கருத்தின் தாக்கம் பாவேந்தரிடத்தும் இருப்பதனால்தான்

'அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்

என்று பாடினார். அச்சம் நாணம், மடமை இவற்றுக் கெல்லாம் முடிவுகட்டும் வகையில் அன்னத்தின் பேச்சை அமைக்கின்றார் பாவேந்தர். பேழையை மீட்டுக் கொணர்ந்தவேலன் அதனை அன்னத்திடம் கொடுக்கின் றான். அவள் அதனை வாங்கி முகத்தில் ஒற்றிக்கொண்டு திறந்து பார்க்கின்றாள். முடிமுதல் அணி ஈறாக அனைத்துப் பொருளும் அங்கே இருக்கின்றன. ஒன்று சொல்ல நினைக்கின்றாள். இயல்பான நாணம் பற்றிக் கொள்கின்றது. என்றாலும் அதனை உதறிவிட்டுப் பேசுகின்றாளாம் அன்னம்.

'முகம்தாழ்த்திக் கால்விரலால் தரைனயக் கீறி
முடிந்ததுஞள்; **கடிமணந்தான் மிச்சம் என்றாள்'**
88:2

'ஆம்என்றான். அள்ளூற; இனிமேல் உம்மை
அத்தான்என் றழைத்திடுவேன் என்றாள் அன்னம்;
தூமணியே செய்யென்றான்; **என்னை வந்து**
**தொடுங்களத்தான் என்றுரைத்தாள்'**
86-1

தன்னுடைய வேட்கையைத் தலைவன் முன்பேசுதல் தலைவிக்கு எக்காலத்தும் இல்லை என்ற பழைய கட்டுப் பாடுகள் இங்கே முறிந்து நொறுங்குமாறு 'கடிமணந் தான் மிச்சம்' என்றும், 'என்னைவந்து தொடுங்களத் தான்' என்றும் குறிப்பினால் அன்று; வாய்விட்டே கூறுகின்றாள் அன்னம். தொடர்ந்து வேறுபல செய்தி களைப் பேசிக் கொண்டே வருகின்றனர். இடையிலே வேலன்

'பெண்ணி தழ்தான்
கன்னலின்சா றென்கின்றார் மெய்யா எனறான்;
காணிர்என உளங்கனிந்தாள்'
91:



இங்கே தலைமகன் வேலன் பெண்களின் இதழ் கரும் பின் சாறுபோல இருக்குமென்று கூறுகிறார்களே இது உண்மையா என்று கேட்டபோது அவள் தலையைத் தாழ்த்திக் கொள்ளவுமில்லை; கால்விரலால் தரை யைக் கீறிக் கொண்டிருக்கவுமில்லை அது உண்மையா என்பதை நீங்கள் அறிந்து கொள்ளத் தடையேதும் இல்லையே என்று கூறியது மட்டுமன்று; 'உளங்கனிந் தாள்' என்ற தொடரால் அது கன்னலின் சாறுதானா என்பதைச் சுவைத்துப் பார்க்கவும் அனுமதித்தாள் என்பது பெறப்படுகின்றது. இங்கேயும்கூட அந்த நீண்ட காலத்தடை மாண்டுதான் வீழ்கின்றது. அதன்பின்னரும் அவர்களுக்குள் சில பேச்சுகள் நிகழ்கின்றன. இறுதியில் இவ்வியல் (91) முடியும் பொழுது நாம் இரண்டு உருவங்களைப் பார்க்கமுடியவில்லை. ஒரே உருவ மாகி நிற்கின்றனர். தாமாகவே இருவரும் ஒருருவம் ஆகிவிட்டனரா? அதுதான் இல்லை. அன்னம் வேல னிடம் கூறுகின்றாள். தமிழ்இலக்கண உலகம் எதனைக் கூறக்கூடாது என்தபதற்காகப் பெண்களின் உதடுகளுக் குத் திண்டுக்கல் பூட்டுக்களைப் போட்டுப் பூட்டி வைத்திருந்ததோ அப்பூட்டுகள் தெறித்து விழுமாறும், இனிவரும் அகப்பொருள் இலக்கண ஆசிரியர்கள்.

தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக்கும் உண்டு'

எனப்புதிய விதியை எழுதுமாறும் கூறுகின்றாள். இதோ அவள் கூற்று.

தேனில்லை எனில்நல்ல வண்டு மில்லை;
செத்தொழிவேன் நீர் இறந்தால்; இதனை நீலன்
ஏனறிய வில்லைஇருக் கட்டும் **'தென்றல்**
**இருவர்க்கும் நடுச்செல்ல விடாதீர்** என்றாள்.
91:2

கடிமணந்தான் மிச்ச'மென்று பேசுவதும், 'என்னை வந்து தொடுங்கள் அத்தான்' என்று கேட்பதும், பெண்ணிதழ் கன்னலின் சாறா என்ற வினாவிற்குச் 'சுவைத்துப் பாருங்களேன்' என்று அழைப்பு விடுவதும், 'தென்றல் இருவர்க்கும் நடுச் செல்ல விடாதீர் என்று கட்டளை யிடுவதும் நாணமற்ற செயல் என்று பழைய ஆதிக்கக் கோட்பாடுகளை அழுத்தமாகப் பற்றி நிற்போர் கூறக் கூடும்.

காலம் எதனையும் மாற்றிப் போடும் வல்லமையுடையது என்பதை மறக்க வேண்டா. பழம் மரபுகளில் நம்பிக்கை வைத்திருந்தவர்தான் சேக்கிழார். என்றாலும் மாற்றம் தேவை என்று கருதியதனால்நான் பரவையாரை 'இவன் யாரோ' என் நினைக்க வைக்கின்றார். அதன் பிறகு ஆயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன. சமூக வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள் – அறிவியல் தொலைவைக் குறுக்கிவிட்ட காரணத்தினால் உலகில் எல்லாப் பகுதியோடும் நமக்கு ஏற்பட்டுவிட்ட உறவுகள் – அந்த உறவினால் ஏற்பட்ட கருத்து மாற்றங்கள் – சேக்கிழார் செய்ததும் போதாது என்று எண்ணத் தூண்டிற்று.

அத்தூண்டலின் விளைவு 'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று பாரதியிடம் வெடிகுண்டாக வெடித்தது. இவ்வெடிப்பின் விளைவு 'என்னை வந்து தொடுங்கள், தென்றல் இருவர்க்கும் நடுச்செல்ல விடாதீர்' என்ற கருத்துப் புரட்சியாகப் பாவேந்தரிடம் உருவெடுத்தது என்பதனை எண்ணிப்பார்த்திடவேண்டு கிறேன்.

பெண்ணுரிமை என்பது சில துறைகளில் மட்டும் தான் என்பது பழைமை வாதம். எல்லாத் துறைகளிலும் அவள் உரிமையுடையவளாக இருக்க வேண்டும் என்பது தான். நாம் இனி இயற்ற வேண்டிய புதிய வேதம். இவ்வாறு சொல்வதனாலேயே உரிமையின் பேரால் பெண்கள் ஒழுக்கங்கெட்டு அலைய அனுமதி வழங்கப் படுவதாக யாராவது எண்ணினால் அது தவறு. உரிமை ஒழுக்கக் கேட்டைத் தான் உருவாக்கும் என்று ஆண்கள் வாதிட்டால், உரிமை வழங்கப்பட்டிருப்பதனாலேயே எல்லா ஆண்களும் ஒழுக்கங் கெட்டே அலைகிறார்கள் என்பதை ஆடவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டியதாகி விடும். உண்மையில் எல்லா ஆடவர்களும் ஒழுக்கக் கேடர்கள் இல்லை. சிலர் தாம் ஒழுக்கக் கேடர்கள்.

பெண்ணுரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டால் தான் ஒழுக்கம் நிலைக்கும் என்பதும் நம்பக் கூடியதாக இல்லை. ஏனெனில் பெண்ணுரிமை பறிக்கப்பட்டும் அடக்கப்பட்டும் வாழ்ந்த—வாழ்கின்ற எல்லாப் பெண்களுமே ஒழுக்கமே உருவானவர்கள் என்றும் கூற முடியாது. அவர்களுள்ளும் ஒழுக்கக் கேடர்கள் உண்டு.



வேண்டுமானால் எண்ணிக்கையிலே கொஞ்சம் ஏற்றத் தாழ்வு இருக்கலாம். அவ்வளவுதான். ஆக உரிமைக்கும் ஒழுங்கீனத்துக்கும் முடிச்சுப் போடுவது அவ்வளவு பொருத்தமானது இல்லை என்பதை உணர வேண்டும். இத்தகைய உணர்வோடும் அறிவோடும் தாம் பாவேந்தர் பெண்ணுரிமைக் கொள்கையைக் கையாளுகின்றார்.

## முடிப்பு:

ஆட்சி மாற்றம், சமுதாயச் சீர்கேடுகளைத் தட்டிக் கேட்டல், தன் வாழ்க்கையில் ஒழுக்கம் தவறாமை ஆகிய புறவாழ்க்கையில் பெண்கள் முழுமையான உரிமையைப் பெற்றுத் திகழவேண்டும் என்ற கருத்தோடு தான் ஆத்தாவைப் படைத்துள்ளார் பாவேந்தர்.

அக வாழ்க்கையில் பெண்ணுக்கு விதிக்கப்பட்டுள்ள அநியாயமான கட்டுப்பாடுகள் அவளுடைய ஆளுமை வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் குறுக்கி விடுவதனால் வீடே கதியென்று வீழ்ந்து கிடக்க வேண்டியவளாகி விட்டாள். இந்நிலையில் புறவாழ்க்கையில் அவள் ஆணுக்குச் சமமாக எப்படி வீறு கொண்டு எழ முடியும். இந்நிலையில் அவள் உள்ளத்தை– தொட்டியில் வளர்க்கப்பட்ட மரம் போல வளர்ச்சி குன்றிக் குறுகி நிற்கும் அவள் உள்ளத்தை விடுவிக்க வேண்டும். விடுவித்தால் அவளுடைய மனம் நிமிர்ந்து செழித்து வளரும், வளர்ந்தால் புறவாழ்க்கையில் ஆணுக்கு நிகராக அவள் போட்டியிட முடியும். இது நிகழ வேண்டுமானால் அக வாழ்க்கையில் அவளுக்குப் பூட்டப் பட்டுள்ள விலங்குகளை அகற்ற வேண்டும். இது தான் பாவேந்தர் அன்னத்தின் வாயிலாக உலகுக்கு விடுக்கும் செய்தி .. என்பதை அறிந்து கொள்ள வேண்டு கின்றேன்.

பெண்ணின் இயல்பான பாலுணர்வு பற்றிய மன எழுச்சியை வாய்திறந்து கூற முடியாதவாறு ஒரு தடையைச் சமுதாயம் அவர்கள் தலையில் சுமத்தியது. இந்நிலையில் ஒரு பெண் எப்படி நடந்து கொள்வது? ஒன்று: அவள் சமுதாயத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கிப்போக

வேண்டும். இரண்டு; அவ்வற்புறுத்தலை உடைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும். அடக்க அடக்க அடங்கிக் போகும் பழக்கம் வந்து விட்டால் காலப் போக்கில் அப்பெண்ணின் உள்ளத்தில் தாழ்வு மனப் பான்மை தானே குடியேறி ஆணியையும் அடித்துக் கொண்டு அமர்ந்துவிடும். இத்தாழ்வு மனப்பான்மை தான் பெண் தன் உரிமையைக் கூடக் கேட்க முடியாத வாறு தடுப்பது. ஆகப் பெண்ணடிமைச் சங்கிலியின் முதற் கண்ணியே பாலியல் உணர்வுகளைத் தன் விருப்பம்போல் வெளிப்படுத்தக் கூடாது என விதிக்கப் பட்ட தடையில்தான் தொடங்குகின்றது. இதனை நன்கு கண்டு கொண்ட கவிஞர் அதன் ஆணிவேரையே கல்லி எறிய விரும்புகின்றார்.

மானுடவியல் வரலாற்றாளர்கள் எல்லாக் காலத்திலும் பெண் அடங்கிக் கிடந்தவள்தான் என்று கூறவில்லை. பெண்ணடிமை என்பது தொன்று தொட்டு வருவதும் அன்று. இன்னும் சொல்லப் போனால் மனிதனின் காட்டுமிராண்டிக் கால வாழ்க்கையில் ஒரு குழு அல்லது கூட்டத்தைப் பெண்தான் தலைமை ஏற்று நடத்தினாள் என்றும், தன் பாலியல் வேட்கையைக் கூடத் தான் விரும்பியவாறே நிறைவேற்றிக் கொண்டாள் என்றும், காலப்போக்கில் பெண்ணிடம் இருந்த அந்த அதிகாரம் ஆண்களால் பறித்துக் கொள்ளப்பட்டது என்றும்தாம் எழுதுகிறார்கள். இதனை 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற பேராசிரியர் இராகுல சாங்கிருத்தியாய னின் நூலிலே விரிவாகக் காணலாம்.

வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் உரிமையோடு இருந்தபெண் நாகரிக வளர்ச்சி ஓங்கி வந்த காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டுவிட்டாள். ஆக இந்த அடிமை வாழ்க்கை பெண்களைப் பொறுத்த வரையில் இடையில் வந்ததுதான். இடையில் வந்தது இடையிலேயே போய் விடுவதுதான் நல்லது. இதனால்தான் பெண்களின் அகவாழ்க்கையில் அவர்களுடைய உணர்வுகளை மழுங் கச் செய்கின்ற நடைமுறைகளை உடைத்தெறிய வேண் டும் என்று விரும்புகின்றார் பாவேந்தர். இந்த அடிப் படையில்தான் தன்னுடைய வேட்கையைத் தானே வேலனிடம் அன்னம் வெளிப்படுத்துவதாகப் படைக்கின்



றார். புற வாழ்க்கையில் புரட்சிப் பெண்ணான ஆத்தா வைப் போலவே அகவாழ்க்கையில் சூழ்ந்துள்ள அடிமை விலங்கை ஒடிக்கும் புரட்சிப் பெண்ணாக அன்னத்தை உருவாக்கிக் காட்டுகின்றார்.

புறவாழ்க்கையில் புரட்சிப் பெண்ணான ஆத்தாவின் வாயிலாகவே அகத்துறைப் புரட்சியையும் செய்திருக்க லாமே! ஏன் இதில் அன்னத்தை ஈடுபடுத்த வேண்டும். அகத்தும் புறத்தும் புரட்சி மனம் கொண்டவளாக ஒருத்தியைப் படைப்பது தானே முறை என்றெல்லாம் சிலர் கேட்கக்கூடும். கதையின் அமைப்பு இதனை ஆத்தாவின் வழியே செய்ய முடியாதவாறு தடுத்து விடுகின்றது. கதையின் தொடக்கத்திலேயே ஆத்தா வயது முதிர்ந்தவளாகப் படைக்கப்பட்டு விட்டாள். மேலும் அவள் கணவனைப் பிரிந்து வாழ்பவளாகவும் இருக்கின்றாள். இந்நிலையில் அவளை எப்படித் தன் கணவனோடு பாலியல் வேட்கையை வெளிப்படுத்துபவ ளாகக் காட்டமுடியும்? காப்பியத்தின் இறுதியிலும் கூட வீரப்பனும் ஆத்தாவும் பாலியல் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளமுடியாது முதுமைப்பருவத்தினர் என்பதை நினைவிற் கொள்க. கொண்டால் அன்னத்தின் வாயிலாக இக்கருத்துக்களை வெளிப்படுத்தியதுதான் சரி என்ற முடிவிற்கு வருவோம். அன்னம் ஆத்தா இரு வரையும் ஒருங்கிணைத்தால் கிடைக்கின்ற பெண் ணுருவம்தான் உரிமையுள்ள பெண்ணுருவம். அங்கே தான் நல்ல புதல்வர்கள் விளைவார்கள். அப்புதல்வர் களால் நிறைந்த நாடுதான் என்றும் யாராலும் அடிமை கொள்ளமுடியாத நாடாக இருக்கும்.

அந்நாட்டில் வலிமைஎளிமையை அழிக்கவும் மாட்டாது: அடிமை கொள்ளவும் மாட்டாது. ஏனெனில் எல்லாரும் அங்கே வலிமை பெற்றிருப்பார்கள் அந்நாட்டில்தான் கலைகளின் பெயரால் ஆடம்பரங்கள் வளரமாட்டா. வாழ்க்கைச் சுகங்கள் பெருகமாட்டா. உண்மையான வீரம் தேயாது. நிலைகொண்டிருக்கும். வாழ்வின் எத் துறையிலும் யாவரும் உரிமையும் பெற்றுக் கடமையும் சிறந்து வாழ்ந்திருப்பர். வேழன் போன்ற வலியாருக்கும் வேலை இல்லை; நரிக்கண்ணன் போன்ற வஞ்சனை யாளருக்கும் வேலை இல்லை. நீலன் போன்ற இடைக்

கொள்ளையர்க்கும் இடமிருக்காது. ஒரு முழுமையான சமுதாய மறுமலர்ச்சியை — உரிமை வாழ்வை — தொலைத்து விட்ட கலை, நாகரிகப் பண்பாட்டு வடிவங்களை இருபாலாரிடத்தும் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்ற கருத்தைக் குறியீட்டு வகையில் அருமையாக விளக்குகின்ற ஒப்பற்ற காப்பியம் தான் பாண்டியன் பரிசு என்றால் யார் மறுப்பர்?

O

❑

‘காப்பியத் தொடக்கம் போரிலேதான் தொடங்குகின்றது. சீர்மிகுத்த கதிர்நாட்டின் மீது திறல் மிகுத்த வேழநாட்டுப் படைகள் திரண்டு வருகின்றன. கவிஞன் ஏன் ஒரு போர்க் காட்சியைக் காப்பியத் தொடக்கமாக அமைக்கின்றான்? இன்றைக்கு நமக்குக் கிடைக்கும் வரலாறுகள் எல்லாம் போர்க்களங்களின் வரலாறுதானே! அரியணை உரிமைகள் கூடப் போர்க்களங்களால் தானே உருவாக்கப்பட்டிருக்கின்றன. குருதி பரந்த அந்நெடு வெளிதான் கொடைக்ககனிகளை வழங்கியது; வீரயுக இலக்கியங்களின் நாற்றங்காலாக விளங்கியது. இவை எல்லாம் உண்மைதான். இதற்கெல்லாம் மேலான ஒரு உண்மை என்ன என்றால் தமிழின வீழ்ச்சிக்கும் இதுவே காரணம் என்பதுதான்’

பாண்டியன் பரிசில்... பக்கம்17